
கலைவாணி
KALAIVANI
ஒக்டோபர் 60

# கலைவாணி புத்தக நிலையம்

## 23, மெயின் வீதி,

## மட்டக்களப்பு.

*

மட்டுநகர் மக்களின் வசதியையும் விருப்பத்தையும்
முன்னிட்டு

எங்கள் கலைவாணி புத்தக நிலையத்தின்
கிளை ஒன்றை

## மட்டக்களப்பு மெயின் வீதி 23-ம் இலக்க வியாபார நிலையத்தில்

## ( முன் கலாநிதி புத்தகசாலை )

ஆரம்பித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**பின்வரும் பொருள்கள் மிகவும் மலிவு விலையில் கிடைக்கப்பெறும்**

- பாடசாலைப் புத்தகங்கள்
- வாசிகசாலைப் புத்தகங்கள்
- பள்ளிக்கூட உபகரணங்கள்
- ஸ்ரேசனறிச் சாமான்கள்
- சஞ்சிகைகள்
- பரிசுப் பொருள்கள்
- விளையாட்டுச் சாமான்கள்
- சாய்ப்புச் சாமான்கள்
- ஆங்கில மருந்துவகைகள்
- தமிழ் மருந்து வகைகள்

மற்றும் பலவகையான பொருள்கள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகவும் குறைந்த விலையில் கிடைக்கப்பெறும்

## கலைவாணி புத்தக நிலையம்

**23, மெயின் வீதி :: மட்டக்களப்பு**

தொலைபேசி : 406

தந்தி : 'கலைவாணி'

ராணி, எங்கள் நாடு, தினத்தந்தி, குமுதம், கல்கி, விகடன், தினகரன் மற்றும் பலவித புத்தகங்களும் கிடைக்கும் கண்ணகி ஸ்ரோர்ஸ் வவுனியா.

# ‘கலைவாணி’

## 14 - 10 - 64

## உள்ளே!..........


வளர்க கலைவாணி — 3
திருமுருகாற்றுப்படை — 5
தோன்றலெழு தாயே — 13
புயலும் பூங்கொடியும் — 14
தமிழ் நாடகக் கலை — 24
வந்திருந்தாள் ஏனோ? — 33
சாளரமே சற்றே திற — 34
துணை — 35
துப்பாக்கி முனையில் — 37
பாரதியின் தேசிய உணர்ச்சி — 47
கடிதம் (விஞ்ஞானம்) — 51
கலையுணர்வு — 54
அவள் ஓடவில்லை — 66
பண்டைய யாழ்ப்பாண அரசின் சின்னங்களும் நந்தியும் — 72
வாழ்க கலைவாணி — 79
**Ananda Coomaraswamy Traditionalist a Brief Note** — 80


கதை, கட்டுரை கவிதைகளில் காணப்படும் பெயர்களெல்லாம் கற்பனையே!

# கலைமகள்

# பாரினுக்கோர்

# பொதுமகள்

தமிழினங் கண்ட கலைமகள் வணக்கம் தரணிக்கே உரித்தான தனிப்பெரும் வணக்கமாகும். மனிதன் என்று தன்னை உணர்ந்தானோ — அன்றே அவன் அறிவுக்குத் தலை வணங்கினான். 'பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்' என்று சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகையிலே கூறுகின்ற வாக்கு அறிவோர்க்குத் தலை வணங்கும் வாக்கன்றோ !

'அறிதோறு அறியாமை கண்டற்றால்' (குறள் 1110) என்று திருவள்ளுவர் கூறுகின்ற நிலையில் — மனிதன் அறிவின் நிறைவு காணாத குறைபாடுடையவனாக காணப்படுகிறான். மனிதனின் இயற்கை நிலையும் அதுவே. அறிவில் நிறைவு காண முடியாத மனிதன், அறிவின் முழுமையாகிய பரம் பொருளான அறிவின் சக்திக்கு என்றும் வணக்கமுடையவனாகவே இருக்கின்றான். அவ்வறிவின் சக்தியை அருவ நிலையிலே மெய்யுணர்வுடையோர் வணங்கலாம். ஆனால் மெய்யுணர்வுடையோர் உலகத்தின் முழுமையோராகக் காணலாம் என்பது முடியாத காரியமாகும். யாவருமே அறிவின் சக்திக்கு ஒரு உருவத்தையிட்டு வணங்குதல் பொதுமை உணர்வுக்கே பொருத்தமுடையதாகின்றது. இதனால்தான் அறிவின் சக்தியைப் பெண் வடிவாக அமைத்து அதற்குக் கலைமகள் என்ற பெயருமிட்டு தமிழர் வணங்கத் தலைப்பட்டனர். தமிழர் கண்ட இவ் வழிபாடு உலகத்தார் உணர்ந்து வழிகொள்ளக் கூடிய நிலையில் இருக்கின்றது. இவ் வழிகோள் எல்லாச் சமயத்தார்க்கும் எல்லா நாட்டினர்க்கும் பொருத்தமுடைய—பொதுமையுடைய—வழிகோளாகும். இதை யுணர்ந்துதான் அறிவின் சக்தியாகிய கலைமகள் நினைவாக — அவள் நாளை முன்கூர்ந்து எம் கலைவாணியை வெளியிட்டுள்ளோம்.

கலைவாணி பாரினுக்கோர் அறிவின் சக்தி ! அறிவின் நிறைவு காணத் துடிக்கின்ற நாம் — அவளின் குழந்தைகள்; எல்லார்க்கும் பொதுமையாக அவள் இனிமையுடையவள்! இன்பமுடையவள்! அவள் பெயர் தாங்கும் எம் ஏடும் — எல்லார்க்கும் பொதுமை ! எல்லார்க்கும் இனிமை !! எல்லார்க்கும் இன்பம் !!



# எமது எண்ணம்!

தமிழ் இலங்கும் நல்லுலகம் கண்ட இலக்கியம் — கலை — பண்பாடு யாவற்றையும் பார் முழுதும் பரப்புதற்கமைந்த நல்லதொரு வெளியீடு ஈழத்திலிருந்து வெளிவரவேண்டுமென எல்லோரும் எண்ணியதுண்டு. அவ்வெண்ணத்தின் பிரதிபலிப்பாக அநேகருடைய வேண்டுகோட் கிணங்கி இக் 'கலைவாணி' திங்களிதழைத் தொடர்ந்து வெளியிடும் பணியில் இறங்கியுள்ளோம். தங்களுடைய சிந்தனைக் கருவூலங்களை வெளியிடுவதற்கு ஒரு திங்களிதழாகிதல் ஈழத்தில் இல்லையே என்று நம் எழுத்தாள நண்பர்கள் இனிமேல் மனங்கவல வேண்டியதில்லை. அவர்கள் எல்லோர்க்கும் பாரபட்சமற்ற முறையில் நடுநிலை கொண்டு நம் கலைவாணி என்றும் செயல்பெறும்.

நாம் எடுத்த முயற்சியின் முகமாக எழுத்தாளப் பெருமக்கள் பல விடயங்களைத் தந்து உதவினுர்கள். அவர்களுக்கு எம் உளங் கனிந்த நன்றி. மேலும், ஈழம் — தமிழகம் — தென்கிழக்காசியா — ஆபிரிக்கா நாடுகளனைத்தும் வாழ்கின்ற அறிஞர்—கலைஞர்—கவிஞர் யாபேரும் தங்களுடைய படைப்புக்களை அனுப்பி எம் கலைவாணிக்கு என்றும் உயிரளிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேம். அத்துடன் எம் இதழில் இடம்பெறும் எழுத்து ஓவியங்கள் அனைத்துக்கும் தகுந்த சன்மானம் உண்டு என்பதையும் தெரிவிக்கின்றேம்.

'கலைவாணி' நம் எல்லோருடைய நெஞ்சத்தை விட்டு நீங்காத கலை மகுடமாகத் திகழவேண்டும். அம்மகுடத்தில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் எழுத்து மாணிக்கங்கள் — விலை

மதிக்க முடியாத பேரிலக்கியங்களாக வாழ்வை வளம் பெறச் செய்யவேண்டும்.

எல்லோருடைய அகமும் கலைவாணிக்கு இடமளித்து — ஒத்துழைப்பின் கரங்கொடுத்து அவளைக் கன்னித் தமிழ் மங்கையாகக் காத்து ஓம்புமாறு தமிழ்ப் பெருமக்களை அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

வாழ்க தமிழ்! வளர்க கலைவாணி!

வணக்கம்.

— ஆசிரியர்

※ ※ ※

## இலக்கியம்

இலக்கியம் மனித வாழ்வைப் பிரதிபலித்துக் காட்டும் ஓர் அபூர்வ கண்ணுடியாகும். அதில் மனித உருவங்களைவிட மனித உளப் பண்பைத்தான் காணலாம்.

○ ○ ○

இலக்கியத்தைப் படைப்பவன் தெய்வ நிலையில் இருந்து படைக்கவேண்டும்.

○ ○ ○

இலக்கியம் வெறும் எழுத்துக் குவியலைக் கொண்டதல்ல. அதில் எவ்வளவுக் கெவ்வளவு உணர்ச்சியையும் உணர்வையும் காணமுடிகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு அது நிலைத்திருக்கக் கூடியது.



# வளர்க கலைவாணி!

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை

உலகெலா மம்மையே உனக்கொரு பீடமாய்
பலகலைச் சிற்பியர் படியெடுத் தியற்றினும்
மரபுவாழ் மொழிவளர் மாநில மெங்குநின்
அருள்பெறு புலவோர் அலகிலா நூல்களை
ஆடரங் கெனநினக் கன்புட னாக்கினும்
தேவிநின் னளப்பருந் திருவுரு வதனிலோர்
அணுவள வேனுந் தாங்குதற் கமைந்த
ஆற்றலு மிடமு மவைக்கில வாதலின்
அன்னார் மனமே கோயிலு மரங்குமாய்
உவந்தெழுந் தருளிநின் னுயரருள் நோக்கால்
அவர்படைப் பனைத்துநின் னருட்பெருஞ் சத்தியின்
வடிவென வியற்றுசீர் வளர்கலை வாணிநின்
அடிமலர் போற்றியாம் அனுதினம் வணங்குதும்
தாயே நின்பெயர் தாங்கியே தோன்றி
மாதவெளி யீடாய் வருங்கலை வாணியைக்
கடைக்கணித் தினிதுநீ காத்தரு ளெனவே.

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

PHONE { COLLEGE : 61344
RES. : 62575

*A. M. Paramasivanandam.*
M. A., M. LITT.

PROFESSOR & HEAD OF THE DEPT. OF TAMIL
PACHAIYAPPA'S COLLEGE.

**Tamil Kalai Illam,**
**Madras - 30.**

6 - 8 - 1964.

அன்பினீர்,

வணக்கம்.

கலையும் பண்பாடும் தவழும் திங்கள் இதழாகத் தங்கள் முயற்சியால் வெளிவர இருக்கும் **'கலைவாணி'** உண்மையில் **'கலைவாணி'**யாகவே திகழ்வதாக. தமிழ்க் கலையையும் தமிழர்தம் பண்பாட்டையும் வையம் முழுவதும் பரப்பும் வகையில் தங்கள் 'கலைவாணி' பணியாற்றித் திகழ்வதாக! கலைவாணியைக் கலைமகள் விழாவன்று வெளியிட இருப்பதும் மிகமிகப் போற்றக்கூடியதே. 'அன்னை கேண்மை கொள்ளப் பெருவழி' இதுவாகும். தங்கள் பணி தழைப்பதாக! 'கலைவாணி' தமிழர் கரங்களில் தவழ்வாளாக!

பணிவுள்ள,

அ. மு. பரமசிவானந்தம்.

# திருமுருகாற்றுப்படை

பேராசிரியர்
தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

ஆற்றுப்படை என்றால் வழிப்படுத்துதல் - வழிகாட்டுதல் என்று பொருள். தமிழிலே பல ஆற்றுப்படைகள் உள்ளன. விறலியாற்றுப்படை என்றால் மனத்தின் உள்ளே இருக்கின்ற கருத்தின் சுவையானது இயல்பாக உடற்கூறுகளிலே தோன்றும்படியாக விறல்பட நடிக்கின்ற விறலிக்கு, அவளுடைய கலையைப் பாராட்டும் புரவலன் ஒருவன் உண்டு என்று கூறி, அங்குச் சென்று அவள் தன் ஏழ்மை எல்லாம் தீர நல்வாழ்வும், கலைவாழ்வும் வாழலாம் என்று அவன் ஊருக்குச் செல்லும்படி கூறுவது. இவ்வாறுதான் எல்லா ஆற்றுப்படைகளும் இருக்கக் காண்போம். ஏழைக் கலைஞன் கலையிற் சிறந்திருந்தும் குடும்பத்தோடு பட்டினியால் வாடுகிறான். அதே கலையில் வல்ல மற்றொரு கலைஞன் தன்னுடைய நல்ல காலத்தால் ஒரு புரவலனைக் கண்டு செல்வப்பெருக்கோடு திரும்புகிறான். ஏழைக் கலைஞனைச் செல்வக் கலைஞன் வழியில் பார்த்துவிடுகிறான். மனம் உருகி நின்று, தான் பெற்ற பேற்றை விளக்கி அந்தப் புரவலனிடமே ஏழைக் கலைஞனைப் போகும்படி வேண்டிக் கொள்ளுகின்றான். போகும் வழியையும் கூறுகிறான். அப்புரவலன் பாராட்டும் முறைகளையும் விளக்குகிறான். அந்தப் புரவலனது பலவகைப் பெருமைகளையும் கூறுகிறான். அவனுடைய ஊரின் சிறப்பையும் விளக்குகிறான். போகும் வழியைத் தெள்ளத் தெளியக் கூறி அந்த வழியினைக் கூறும் முகத்தான் புரவலனது நாட்டையும் விளக்குகிறான். அந்த நாடு புரவலனது நிழல்போலச் சிறப்புப் பெற்று விளங்குவதையும் சுட்டுகிறான். இந்தக் கலைஞன் பாணனாக இருக்கலாம்; நடிகன் என்ற பொருநனாக இருக்கலாம்; கூத்தனாக இருக்கலாம்; பிற்காலத்தில் புலவனாகவும் இருக்கலாம். இத்தகைய ஆற்றுப்

படையின் நோக்கம் புரவலனைச் சிறப்பிப்பதே ஆகும். எல்லாச் சிறப்பாலும் உயர்ந்தது கலையை வளர்க்கின்ற வள்ளண்மையே யாம். தமிழ் நாட்டில் வள்ளல்கள் என்று பெயர் பெற்றவர்கள் எல்லாம் கலையை வளர்த்தவர்களே யாம். இது இங்குள்ள சிறப்பு. புரவலனைப் புகழ்வதும் அவன் பாராட்டும் கலைஞரைக் கொண்டே ஆம். எனவே ஆற்றுப்படை புரவலனது பெயரால் விளங்குவதில்லை. ஆனால் கலைஞன் பெயராலேயே வழங்கும் அந்நாளைய புலவர் பெருமக்கள் கொண்ட கருத்தின் ஆழம் இதனால் விளங்கும். பாணர் ஆற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, கூத்தர் ஆற்றுப்படை, விறலி ஆற்றுப்படை என்ற பெயரோடுதான் வழங்கினவே யன்றி திரையன் ஆழ்கரிகாலன் நன்னன் ஆற்றுப்படை, என்று வழங்கவில்லை.

முருகாற்றுப்படை என்ற பெயரில், பெயரைப் பார்க்கும்பொழுது ஒரு புதுமை தோன்றுகிறது. இங்கே கலைஞன் பெயர் ஒன்றும் காணோம். புலவர்க்கு எல்லாம் புரவலனாகிய கடவுளின் பெயரே 'முருகு' என்று அங்கே விளங்குகிறது. பிற ஆற்றுப்படைகள் எல்லாம் பாணரை ஆற்றுப்படுத்துவது, விறலியரை வழிப்படுத்துவது என்று எல்லாம் பொருள்பட முருகு ஆற்றுப்படை என்பதற்கு மட்டும் முருகன் இடத்தில் ஆற்றுப்படுத்துவது என்று பொருள் கூறுகின்றார்கள். இங்கும் பிற ஆற்றுப்படைகளைப்போல இது முருகனை ஆற்றுப்படுத்துவது என்று பொருள் கூறவேண்டும். அவ்வாறு பொருள் கூறவேண்டிய நிலைமையைப் பின்னே காண்போம். இங்கே முருகனிடத்தில் ஆற்றுப்படுப்பது, முருகனிடம் போகும் வழியைக் கூறுவது என்ற பொருளையே ஒப்புக்கொண்டு அதன் அழகைச் சிறிது நோக்குதல் வேண்டும். இந்தப் பொருளையும் முருகாற்றுப்படை பாடிய நக்கீரர் மனத்தில் கொண்டுள்ளார் என்றே கருதவேண்டும்.

அப்படிக் கருதும்போது இந்தப் பெயரில் ஒரு தனிச்சிறப்பு இருப்பதைக் காணலாம். இங்கேதான் ஒரு புதுமைக் கருத்து விளங்குகிறது. புரவலன், இரவலன் என்று பலபல பிரிவுகளாக உலகினரை வேறுபடுத்திப் பேசிக் கொண்டு போகலாம்; ஆனால் இவர்கள் எல்லோரும், கடவுளை நோக்க ஒரே தன்மையர் ஆவர்; ஒரே பிரிவினர் ஆவர். தாயை நோக்க அவருடைய பிள்ளைகள் எல்லாம் ஓரினம் தானே. அப்படியே உலகப் பெருந்தாயும் தந்தையுமான கடவுளை நோக்க எல்லோரும் ஓர் இனம்; ஓர் நிறை; எல்லோரும் கடவுளுடைய மக்கள்; அந்த நிலையில் அவர்களிடையே வேறுபாடு இல்லை. பல தாயார் இருந்தாலும் வேறுபாடு உண்டாகும். ஆதலின் ஒரு தாய் எனக் கொண்டால்தான் வேற்றுமையின்மை தெளிவாகும். அதுபோல உலகத்தாயும் தந்தையும் ஒருவரே என்று கொண்டால்தான் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற கொள்கை உறுதிப்படும். இதனால்தான் திருமூலர் 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்று பாடுகின்றார். நாம் எல்லாம் அந்தத் தந்தையின் அருளால் பிறந்து வாழ்கின்ற வாழ்க்கைக் கலைஞர்கள்; அவனையே வாழ்க்கையின் முதலும் முடிவுமாகக் கொள்ளும் வாழ்க்கைக் கலைஞர்கள் நாமே ஆம். இதனை நாம் அறியாது இருந்தாலும், நம்மைப் பற்றிய அடிப்படை உண்மை இதுவே ஆம்.

எனவே இநதக் கலையில் பாண்கலை என்றும், கூத்துக்கலை

என்றும், விறலிக்கலை என்றும், வேறுபாடு கூறுவதற்கு இல்லை. ஆதலின் நம்மை எல்லாம், நம் வாழ்க்கைக் கலையைப் பாராட்டி வர வேற்கும் அக்கடவுள் என் புரவல னிடத்தே வழிப்படுத்துவதற்குப் பாணாற்றுப்படை என்பது எல்லாம் போல கலையின் பெயரால் வேறு படுத்திப் பெயர் இடுவதற்கு இல்லை. எனவே முருகாற்றுப்படை என்ற இந்தப் பெயரே உயிர்கள் எல்லாம் உடன் பிறப்பே என்ற உலக சகோதரத்துவத்தையும், இராமலிங்க அடிகள் கூறும் ஆன்ம நேய ஒருமைப் பாட்டையும் விளக் குகிறது.

பின் எந்தப் பெயரால், வேறு ஆற்றுப்படை நூல்களினின்றும் இதனை வேறுபடுத்திப் பெயர் இடுவது? இங்கேயும் உலக ஒற்று மையையே — என் அண்டங்களின் ஒற்றுமையையே — புலவர் வற் புறுத்துகின்றார். எல்லோரும் உண்மையில் நாடிச் செல்ல வேண் டிய முடிவு ஒன்றுதான். அங்கு உண்மையில் வேறுபாடு இல்லை. அங்கேயும் உலகியல் போலப் பல வகைப் புரவலர்கள் இல்லை. ஒரே புரவலன்தான் உள்ளான். அவனே நம் தந்தையும் தாயுமாய் இயல்பாக நம்மைச் சீராட்டிப் பாராட்டி அன்புடன் குழைந்து அன்பே ஆகி நம்மைப் பேணிப் புரப்பவன். எனவே, அந்த வகை யில் மற்றைய புரவலர்களினும் அவன் வேறுகின்றான். எனவே அவனைச் சுட்டியே, இந்த ஆற்றுப் படையை வேறு பிரித்துப் பெய ரிடுதல் வேண்டும். இதனால்தான் கடவுளின் தமிழ்ச் சிறப்புப் பெய ராகிய ‘முருகு’ என்பதனை வற் புறுத்தி முருகாற்றுப்படை எனப் பெயர் பெறுகிறது இந்த நூல்.

‘முருகு’ என்ற பெயரே இந்த அடிப்படை ஒற்றுமையை நமக்கு விளக்குகிறது. எல்லோ ரும் இன்பமே நாட்டமாக அலை கின்றார்கள். இன்பம் என்பது புறப்பொருளில் இல்லாமல், அப் புறப் பொருளின் ஊடே விளங்கு கிற அடிப்படை உண்மையில் இருக்கிறது என்பதைக் காட்டு வதே இந்தப் பெயர் ஆகும். மூக்கு நல்ல நறுமணமுள்ள பொருள்களை நாடுகிறது. நறும ணத்தைத் துய்த்து இன்பம் உறுகி றது. ஆனால் இந்த நறுமணம் உண்மையில் பூவிலோ பிற பொருள்களிலோ இல்லை. உண்மை யில் அது விளங்குவது அடிப்ப டைத் தத்துவமான ‘முருகு’ என் பதிலேதான். முருகு என்பதற்கு நறுமணம் என்றும் பொருள். இவ்வாறே வாய்க்கு இனிப்பது உண்மையில் தேன் அன்று. அத்தேனினுள்ளும் விளங்குகிற அடிப்படைத் தத்துவமாகிய முருகே ஆம். முருகு என்பதற்குத் தேன் என்றும் பொருள். இனிய பொருள் என்பதும் அதன் பொரு ளாம். கண்ணிற்கு இனிய அழகும் உண்மையில் முருகேயாம். முருகு என்பதற்கு அழகு என்ற பொரு ளும் உண்டு. கட்டு-இளமை உடலுக்கு ஊற்றின்பம் தரும். கட்டிளமையும் உண்மையில் முரு கிலேயே உள்ளது என்பதைச் சுட்ட ‘முருகு’ என்றனர். முருகு என்பதற்குக் கட்டிளமை என்று பொருளும் ஆம். காதுக்கினிய இன்னோசையும் முருகுதான் என் பது “முருகியம்” என்ற சொற் றொடரால் விளங்கும். இந்த அழ கிய சொற்றொடர் திருமுருகாற் றுப்படையில் வருகின்றது.

இவ்வாறு முருகு என்பதன் பொருளை ஆராயும்பொழுது அது ஐம்புல இன்பத்தையும் காட்டி அவற்றிற்கு எல்லாம் அடிப்படை யான உண்மைத் தத்துவமான கடவுளையே உணர்த்துகின்றது என்ற உண்மையை, வெவ்வேறு

பட்ட ஐம்புல இன்பங்களும் முருகு என்ற ஒரு பெயரே பெற்று விளங்குவதால் தெளிவாகிறது. முருகு என்பதில் மற்றொரு குறிப்பும் உண்டு. மேல்வாரியாக எழும் ஐம்புல இன்பங்கள் எல்லாம் ஒரு சிலகணத்தில் மறைய, இந்த அடிப்படை இன்பமான முருகு—இன்பம் அழியாத இளமையாக விளங்குகிறது என்பதையும் இந்தச் சொல் விளக்குகிறது. இந்த அழகு உலகத்தில் உள்ள பல வகைப் பொருள்களிலும் நாம் காணும் அழகாகத் தோன்றினாலும் உண்மையில் பேரொளிப் பிழம்பாக விளங்குகிறது. எனவே அங்கே அறிவின் பேரெல்லையையும் அது குறிக்கக் காண்கிறோம். இவ்வாறு அந்த அழகு எல்லோரையும் நோக்கி வந்து, தம்மைப் பிறர் அறியாதபோதும் இன்பமூட்டி நிற்கின்ற பேரருளை 'முருகு' என்று குறிக்கின்றோம். இது எல்லோருக்கும் பொதுவானது. எனவே இங்கேயும் ஒருமையைத்தான் திருமுருகாற்றுப்படை வற்புறுத்தக் காண்கிறோம். அப்பாலுக்கு அப்பாற்பட்ட பொருள் அப்பாலுக்கப்பாற்பட்ட கடவுளாக மட்டும் நில்லாமல், இப்பாலுக்கு இப்பாலாய் எல்லாவற்றையும் இயக்கி நிற்கும் இயவுளாய் அமைந்து, எல்லாவற்றிலேயும் நம்மை ஆட்கொள்ளும் இன்ப அன்பாய்க் காட்சி தந்து இன்பமூட்டுகிறது. இந்த உண்மையையே முருகாற்றுப்படை முழங்குகிறது.

இதனை ஆண் என்றோ, பெண் என்றோ, ஒன்றுமல்லாதது என்றோ கூறுவதற்கும் இல்லை; கூறாது இருப்பதற்கும் இல்லை. இங்கேயும் ஒரு முடிவை வற்புறுத்திப் பிற முடிவுகளை எதிர்க்கலாம். ஆனால் உண்மையில் இருக்கின்ற பொதுமையினையே திருமுருகாற்றுப் படையிற் காண்கிறோம். முருகன் என்று கூறவே ஆசிரியரின் உள்ளம் துடிதுடித்தாலும், அவ்வாறு நூலின் உள்ளே பாடி வந்தாலும், நூலுக்குப் பெயர் வைக்கும் போது அவ்வாறு ஒருவழி செல்லாமல் பொதுமையினையே பின் பற்றுகின்றார். 'முருகு' என்ற சொல்லின் இலக்கண அமைதி இதனை நன்கு விளக்குகிறது. முருகு என்பது ஆகுபெயர்ப் பொருளாக முருகன் என்றும் முருகி என்றும் பொருள் தந்து சகுண வழிபாட்டை அல்லது சகன வழிபாட்டை வற்புறுத்தக் கூடும். அவ்வாறு அன்றி இயல்பாகக் கொண்டால் நிர்க்குண வழிபாட்டை அல்லது நிஷ்கள வழிபாட்டை வற்புறுத்துவதாகக் கொள்ளலாம். ஆனால் ஆசிரியர் இவற்றில் ஒன்றினைக் கொள்ளாது, இவ்விரண்டினையும் மாறுபாடின்றி அமைகின்ற ஓர் உயர்ந்த பொதுமை நியதியை 'முருகு' என்ற பெயரால் சுட்ட விழைகின்றார். இதனை நாம் மனத்தில் கொண்டாலன்றி நூலின் நுட்பத்தை அறிந்துகொள்வது அருமையேயாம்.

## இலக்கியம்

சிந்தனை செய்யும் ஆன்மாக்களின் சிந்தனையே இலக்கியமாகும்.

**கார்லைல்**

இலக்கியம் ஒரு தொழில். அத்தொழிலை இறக்கும்வரை செய்யலாம்.

**சிசரோ**




## ஜனாதிபதி தேர்தல்

ஜனநாயகக்கட்சி ஜனாதிபதி ஜோன்ஸனை எதிர்த்து 'செனட்டர் கோல்ட்வாட்டர்' இம்முறை போட்டியிடுவார். இவர் அமெரிக்கக் குடியரசுக் கட்சியின் சார்பிலே போட்டியிட அக்கட்சியின் மாநாட்டில் அமோக ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## சைப்ரஸ் கலவரம்

மத்தியதரைக் கடலில் உள்ள சிறுதீவு 'சைப்ரஸ்'; இந்தத் தீவில் 5 இலட்சம் மக்கள் வசிக்கிறார்கள். இவற்றுள் 4 இலட்சம் பேர் கிரேக்க மொழியையும், 1 இலட்சம் பேர் துருக்கி மொழியையும் தங்கள் தாய்மொழியாகக் கொண்டிருக்கிறார்கள். சிறுபான்மை மக்களாகிய துருக்கியரைக் கிரேக்கர் கொடுமைப் படுத்தினர். இதனால் துருக்கியர் தனிநாடு கேட்டுப் போராடத் தொடங்கினார்கள். துருக்கியரின் போராட்டத்தைக் கிரேக்கர் எல்லா விதத்திலும் ஒடுக்கியே வந்தனர். கிரேக்கரின் அடக்கு முறையால் அல்லலுற்ற துருக்கியரின் நிலை கண்ட அருகிலுள்ள துருக்கி நாடு 'சைப்ரஸ்' மீது தாக்குதல் செய்யத் தொடங்கியது. துருக்கியின் திடீர் தாக்குதலால் சைப்ரஸ் நாட்டின் வடமேற்குப் பகுதியில் உள்ள ஐந்துக்கு மேற்பட்ட நகரங்கள், கிராமங்கள் யாவும் அழிவுபட்டன. பல உயிர்ச் சேதங்களுடன் 200க்கு மேற்பட்டவருக்குப் பலத்த காயங்களும் ஏற்பட்டன. இது விசயமாக நன்முடிவை ஆக்குதற்கு ஐ. நா. சபை கூடியது.

## வறுமை ஒழிப்பு மசோதா

வாஷிங்டன் ஆக. — 11

வேலையில்லாத இளைஞருக்கு வேலை கொடுப்பதற்கும் நடுத்தர வகுப்பாரின் குறைந்த வருவாயைச் சீர்படுத்துவதற்கும் 94 கோடி 75 இலட்சம் மான்யம் அளிக்கும் வறுமை ஒழிப்பு மசோதாவை ஜனாதிபதி ஜான்ஸன் தயாரித்து வெற்றி பெற்றுள்ளார். இம் மசோதா ஜனாதிபதி ஜான்ஸனின் சொந்த முயற்சியால் உருப்பெற்றது. காங்கிரஸ் இதை ஏற்றுக் கொள்வதற்காக அவர் எடுத்த முயற்சிகள் இறுதியில் பெரும் பயனை அளித்துவிட்டது. இம் மசோதா சட்டமாகி அமுலாகி விட்டால் முதல் வருடத்திலேயே

நேரடியாகவும் மறைமுகமாகவும் 80 இலட்சம் பேர் பயனடைவார்களென்று தெரியப்படுகிறது.

## இலங்கை - இந்தியப் பிரச்சினை

இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் அக்டோபர் மாதத்தில் இந்தியாவுக்கு விசயம் செய்வதையிட்டு இலங்கை - இந்தியப் பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வு காணப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த காலத்தில் பல தடவை இலங்கை – இந்தியப் பிரதமர்கள் சந்தித்து இதைப்பற்றிப் பேசியபோதெல்லாம் எந்த ஒரு நல்ல முடிவும் ஏற்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

## காவிரியின் பயங்கர வெள்ளம்

தமிழகம் ஆக,—11

மேட்டூரில் தண்ணீர் அதிகமாக வந்ததையடுத்து திருச்சி மாவட்டத்தில் காவிரியிலும், கொள்ளிடத்திலும் அதிக வெள்ளம் ஏற்பட்டது. இதன் காரணமாக 500 ஏக்கர் நிலம் நீரில் மூழ்கியது. குடமுருட்டிப் பாலத்துக்கு அருகிலுள்ள மல்லச்சிபுரத்தை வெள்ளம் சூழ்ந்து கொண்டுவிட்டது. அத்துடன் சிந்தாமணியிலுள்ள 'பாப்பம்மாள்' சத்திரத்தையும் தண்ணீர் வளைத்துக் கொண்டது. இவ்வெள்ளப் பெருக்கின் காரணமாகச் சுமார் 100 குடும்பங்கள் இருக்க இல்லமற்றுத் தவிப்புக்குள்ளாகியிருக்கின்றனர்.

## மீண்டும் அணு ஆயுதச் சோதனை

கம்யூனிஸ்டு சீன கோடைக் கால முடிவில் அணுக்குண்டுகளை வெடிக்குமென 'பிஸினஸ் வீக்' பத்திரிகைச் செய்தியொன்று கூறுகின்றது. சீன தொடர்ந்து இச் சோதனையை நடத்தும். அமெரிக்கா ஹிரோஷிமாவில் வீசிய அணுக்குண்டைவிட சிறிய ரகமாக நான்கு அல்லது ஐந்து கிலோடன் எடையுள்ள அணுக்குண்டுகளை சீன சிங்கியாங் பாலைவனத்தில் வீசும். இதனால் கதிரியக்கத் தூசி யப்பானில் விழுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. கம்யூனிஸ்டு சீனவில் அணுக்குண்டு தயாரிப்பதற்குரிய யுரேனியம், தோரியம் தாதுப் பொருள்கள் நிறையக் கிடைப்பதால் அணுக்குண்டுத் தயாரிப்பில் அந்நாடு முன்னணி காணுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## நீக்ரோக்களின் உரிமைகளுக்குப் பங்கம்

ஜான்ஸன்ஸிட்டி ஜூலை—18

நீக்ரோக்கள் தம் சட்டபூர்வமான உரிமைகளை உபயோகிக்காமல் எல்லாவிதத்திலும் தடுப்பதற்கு, ரகசிய ஸ்தாபனங்களும் துவேச ஸ்தாபனங்களும் பலாத்கார வழியைக் கையாளுகின்றனர். இது விசயமாக ஜனதிபதி ஜான்சன் அவர்கள் இவ்விரு ஸ்தாபனங்களையும் வன்மையாகக் கண்டித்துள்ளார். மேலும் ஜனதிபதி அவர்கள் பிரஜைகளுக்கு ஆபத்து ஏற்படில் சட்டத்தையும் அமைதியையும் பாதுகாக்கும் முகமாக சமஷ்டி ஆட்சி பீடத்தின் உதவி, ஸ்தல அதிகாரிகளுக்கு வழங்கப்படும் என்ருர்.

# பார்லிமெண்டிலிருந்து 64 வருட சேவைக்குப்பின் சர்ச்சில் ஓய்வு

லண்டன், ஜூலை, 28 — பிரிட்டன் காமன்ஸ் சபை அதன் சரித்திரத்திலேயே மிக உருக்கமான காட்சியைக் கண்ணுற்றது. அஃதாவது, — 64 வருடங்களாகப் பாராளுமன்ற அங்கத்தினராகப் பணி புரிந்த யுத்தகாலப் பிரதமர் வினிஸ்ரன் சர்ச்சில் கடைசித் தடவையாக நேற்று சபைக்கு வந்து விட்டுப் போனார். மேலும், சபையிலிருந்து மௌனமாக விடைபெறுவதற்கு முன் வெளிவிவகாரக் கொள்கைகள் சம்பந்தமான கேள்விகளையும், உள் நாட்டுக் கொள்கை பற்றிய விவாதத்தையும் சுமார் $\frac{3}{4}$ மணி நேரம் இருந்து கேட்டார்.

அவர் வெளியேறும் போது பெருந்திரளான கூட்டம் ஆரவாரஞ் செய்து தம் அன்பை வெளியிட்டனர்.

# ஒலிம்பிக்கில் தெ. ஆ. வுக்குத் தடை

ஒலிம்பிக் சர்வதேச விளையாட்டுப் போட்டியில் இன ஒதுக்கல் முறை நடைபெற்று வந்தது. இம் முறை சர்வதேச அரங்கில் இருப்பது உலகப் பண்புக்கு முரணானது என்பது கருதி அவ்விளையாட்டுச் செயற்குழு இன ஒதுக்கல் கொள்கையைக் கைவிடும்படி தென்னாபிரிக்காவைக் கேட்டது. தென்னாபிரிக்காவோ அதைக் கைவிட இணங்கவில்லை. அதனால் இம் முறை டோக்கியோவில் நடக்கவிருக்கும் ஒலிம்பிக் விளையாட்டில் அதற்குத் தடை விதிக்கப்பட்டதாக சர்வதேச ஒலிம்பிக்கின் செயற்குழு அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது.

# மூன்று செயற்கைக் கிரகங்கள்

மாஸ்கோ, ஆக. 18 — ஒரே ராக்கட்டின் உதவியுடன் மூன்று செயற்கைக் கிரகங்களை விட்டுள்ளனர் சோவியத் நிபுணர்கள்; 38, 39, 40 எனப்படும் இந்தச் செயற்கைக் கிரகங்கள் ஒன்றுக்கொன்று மாறுபடாமல் ஒரே மாதிரியாகப் பூமியைச் சுற்றி வருகின்றன. அக்கிரகங்கள் வட்டமிடும் இடத்துக்கும் பூமிக்குமிடையே உள்ள அதிகமான தூரம் 544·3 மைல்களெனக் கணக்கிடப்பட்டுள்ளன.

# கம்யூனிஸ்ட் மாநாட்டுக்குச் சீனாவின் போட்டி

உலக கம்யூனிஸ்ட் மாநாட்டை நடத்த சோவியத் யூனியன் முயன்று வருவது யாவருக்கும் தெரிந்த விடயம். இதையிட்டு சீனா தன் ஆதரவு நாடுகளைத் திரட்டி ஒரு மாநாடைத் தாம் வைக்கத் தற்பொழுது முயன்று வருகின்றது. இம் முயற்சிக்கு நியூஸிலாந்து போன்ற சின்னஞ் சிறு கம்யூனிஸ்ட் நாடுகள் ஆதரவு அளிக்கின்றது.

# கட்டாய இராணுவ சேவை

நிக்கோஸியா, ஆக.—23

துருக்கியின் தாக்குதலில் இருந்து சைப்ரஸ் தம்மைப் பாதுகாக்க எல்லா வகையான நடவடிக்கைகளையும் கையாண்டு வருகின்றது. இதன் காரணமாக சைப்ரஸ் ராணுவ அதிபர் சைப்ரசில் உள்ள எல்லா இளைஞர்களையும் கட்டாய ராணுவ சேவைக்கு அழைத்திருக்கிறார். இன்னும் சைப்ரசில் இனந் தெரியாத ஜெட் விமானங்கள் பறப்பதாக செய்தி வருகின்றது.

## வரவு செலவுத் திட்டம் நிறைவேறியது

கொழும்பு, ஆக.—15

இலங்கையின் புதிய வரவு செலவுத் திட்டம் நீண்ட விவாதத்திற்குப் பின் 43 அதிகப்படியான வாக்குகளால் நிறைவேறியது. இவ்வாக்கெடுப்பில் ஆதரவாக 83 வாக்குகளும் எதிராக 40 வாக்குகளும் கிடைத்தன. சிறிமாவோ பண்டார நாயக்காவின் ஆட்சிக் காலத்தில் 43 பெரும்பான்மையான வாக்குகளால் வரவு செலவுத் திட்டம் நிறைவேறியது இதுதான் முதல் தடவையாகும்.

## இந்து சமுத்திர தளங்களுக்குக் கடும் எதிர்ப்பு

அமெரிக்காவும், பிரிட்டனும் கூட்டாக இந்து சமுத்திரத்தில் போர்த்தளங்களை அமைப்பதற்கு உத்தேசித்து உள்ளனர். தென் வியட்னுமைப் பொறுத்த வரையில் அந்நாட்டைப் பகிரங்கமாக விழுங்குதற்கு அமெரிக்கா எடுத்து வரும் முயற்சியின் அடிப்படைதான் இந்து சமுத்திரத்தின் தளங்களாகும், என்று ரஷ்யக் கம்யூனிஸ்ட் பத்திரிகையான 'பிராவ்டா' குற்றஞ் சாட்டியுள்ளது.

## கராச்சிக்கு நல்லெண்ணத் தூது

கராச்சி, செப்.—5

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் நெடுநாளாக இருந்துவரும் காஷ்மீர் பிணக்கைத் தீர்த்து வைப்பதோடு இருநாடுகளுக்கும் நல்ல பரஸ்பர நட்புறவை ஏற்படுத்தும் நோக்கமுடன் சர்வோதய இயக்கத் தலைவர் திரு. ஜயப்பிரகாஷ் நாராயணன் கராச்சிக்குச் சென்றுள்ளார். மேற்படி இவரின் தலைமையிலே சென்ற இத்தூதில் ஐந்துபேர் அங்கத்தவராவர். இத்தூதின் விளைவால் இத்தியாவுக்கு வருகை தரும்படி பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி விடுத்துள்ள அழைப்பினை அயூப்கான் ஏற்கலாமென்றும், அதனால் இருவரும் சந்தித்துப்பேசி ஒரு பரஸ்பர நன்முடிவின் பலனைக் காணலாமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## மலேசியாவில் இனக் கலவரம்

மலேசியாவில் சீனருக்கும் மலேயருக்குமிடையே இனக்கலவரம் ஏற்பட்டு கைகலப்பு ஆரம்பமாகியுள்ளது. இதனல் தொடர்ந்து இதுவரை 11 பேர் பலியாகியுள்ளனர். 70 பேர் காயமடைந்து உள்ளனர். இக்கலவரத்தையிட்டும்–இந்தோனேஷிய நடவடிக்கை குறித்தும்–மலேசியாவின் எல்லாப் பகுதிகளும் இன்று பந்தோபஸ்து பிராந்தியங்களாகப் பிரகடனப் படுத்தப்பட்டன. சட்டவிரோதமாக ஆயுதம் வைத்திருப்போர் மரண தண்டனைக் குள்ளாவார்களென்றும், அங்குள்ளவர்கள் எல்லாச் சமயத்திலும் அடையாளச் சீட்டு வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், அபாயப்பகுதியென அறிவிக்கப்பட்டுள்ள எல்லைப்பகுதியில் அனுமதியின்று நுழையும் எவரும் சுடப்படுவார்களென்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



# தோன்றலெழு தாயே !

கலைவாணி எனை நாடி வந்தாள் — வந்து
கவியாக உருவாகிக்
கலிதீர்த்து நின்றாள்

விலையேது அவளன்புக் கென்பேன் — எந்தன்
விடியாத கவிதைக்கு
உயிரூட்ட வந்தாள்

தொழிலாளர் கவியாக வேண்டும் — இங்கு
தொல்லைதரு வோர்தமைப்
பழிதீர்க்க வேண்டும்

அழியாத வரமொன்று தாடி — என்று
அவள்பாதம் நான்வீழ்ந்து
தலைதாழ்த்தி நின்றேன்

ஏழைகள் அழுகின்ற கண்ணீர் — இந்த
ஏழுல கெங்கணும்
பாய்கின்ற போது

கோழையாய் நானெழுத லாமோ — என்னைக்
கொன்றுவிடு அல்ல(து)உன்
கோபக்கனல் தாதா

வேளையிது நல்லசுப வேளை - எந்தன்
வேண்டும்வர மீந்தெனது
தோன்றலெழு தாயே.

"திருக்கோணமலைக்கவிராயர்"



# புயலும் பூங்கொடியும்

மின்னற் கொடியொன்று விண்ணகத்திலிருந்து அறுந்து வந்து அந்தப் பெரிய சோபாவில் அமர்ந்திருந்தது. ராஜம் ஏதோ ஒரு புத்தகத்தைப் புரட்டியவாறு அங்கு அமைதியாக அமர்ந்திருந்தாள். கண்ணுச்சாமியும், மீனாட்சியும் கலப்பு மணம் செய்து கொண்டதன் விளைவாகப் பிறந்த காரமான குழந்தைதான் ராஜம். அன்று பிள்ளைச் சிரிப்புடன் துள்ளிக் குதித்து அருகே அமர்ந்து சிரித்து மகிழ்ந்த ராஜமா இவள்? அரையை மறைக்க மட்டும் ஒரு சிறு துண்டை உடுத்திக்கொண்டு அந்த வெண்மணற்

எழுதியவர்
தி. அரியநாயகம்

பரப்பெல்லாம் உருண்டு, புரண்டு திரிந்த ராஜமெங்கே? இன்று கனிந்து சிவந்த கொவ்வை இதழ்க் கடையில் கன்னிச்சிரிப்பும், கள்ளப் பார்வையும் நீலோற்பல விழிக ளிலே நீந்துகின்ற நாணத்துடன் சுந்தரத்தின் வீட்டில் தன் மேல்ப் படிப்புக்காக வந்து தங்கப்பதுமை யென அமர்ந்திருக்கும் ராஜம் எங்கே? திகைப்பிலிருந்து விடு பட சுந்தரத்திற்குச் சில நிமிட நேரங்கள் பிடித்தன. அமைதி நிறைந்த வாழ்வில் அழகான சல னங்களைத் தூண்டிவிட்டிருக்கும் மேரியை ஒரு கணம் நினைத்துக் கொண்டான். பருவப் பதிப்பிலே ஒன்றன்பின், ஒன்ருக இன்ப முத் திரைகளை பதித்துக்கொண்டிருக் கும் அந்தச் சித்திரப்பாவை ஒரு கணம் அவனது நினைவுத் திரை யில் மின்னலைப்போல் தோன்றி மறைந்தாள். "என்னை உங்க ளுக்கு ஞாபகம் இருக்கின்றதா?" ராஜத்தின் குழந்தைத்தனமான இந்தக் கேள்வியில் குறும்புத்தன மும் இளையோடியது. அவள் எதையோ ஞாபகமூட்ட விரும்பு கிருள் என்பதை அவன் ஒரு நொடியில் புரிந்துகொண்டான். ஆமாம் அவைகள்தான் எத்தனை சுகந்தமான நாட்கள். பருவ நினைவு கள் பின்னேக்கி இழுத்தன. பாலைப் பருவத்தில் தென்றல் வீசும் மாலை வேளையில் கடற்கரை ஓரமாக இழுத்து வைத்திருக்கும் கரிய நொடிய தோணிகளின் மத்தியில் அவனும், ராஜமும் சிற்றில் கட்டி விளையாடியதைத் தான் அவள் ஞாபகமூட்ட விரும்புகிருள். என் பதை அவளின் உதட்டோரத்தில் நெளிந்த திருட்டுச் சிரிப்பும், குர லில் தெறித்த பரிகாசத்தொனியும் காட்டிக்கொடுத்துவிட்டன. சுந்த ரம் சிலையானுன். அலை, அலையா கப் புரண்ட பழைய நினைவுகளி லிருந்தே அவனல் மீளமுடிய வில்லை. "நீங்கள் தான் அப்பா வாம், நான்தான் அம்மாவாம் நீங்க வேலைக்குப் போவீங்களாம், நான் சோறு கட்டித் தருவேனும்" ராஜம் தன் பிஞ்சுக்கரத்தால் ஈர மண்ணைக் குழைத்துப் பொட்டலமா கக் கட்டுவாள். ஓட்டைச் சிரட்டை களும் வெறும் பாற்பேணிகளும் அவளைச்சுற்றி பரப்பிக் கிடக்கும். சோற்றுப் பொட்டலத்துடன் அப்பா வேலைக்குப் புறப்பட்டுவிட்டு, பின் வீடு திரும்புவார். குழந்தைக் காத லர்களாகத் தாங்கள் அந்தக் காலத் தில் கும்மாளமடித்த பசுமையான நிகழ்ச்சிகள் அத்தனையும் மின் வெட்டும் நேரத்தில் அவன் உள் ளப் படுதாவில் தோன்றி மறைந் தன. "என்ன நான் கேட்டது உங்கள் காதுகளில் விழுந்ததா?" பழைய நினைவுகளிலிருந்து மீண்ட சுந்தரம் நிதானமாகப் பதில் சொன்னுன். "கண்டிப்பாக எனக்கு ஞாபகமிருக்கிறது." ராஜம் சிரித் தாள். "அதுதானே கேட்டேன் எங்கே என்னை மறந்துவிட்டீர் களோவென்று" பாலிய நினைவு கள் இருவரது உள்ளங்களிலேயும் ஒருவித மென் சிலிர்ப்பை ஏற் படுத்தியது.

மேரியைப்போன்ற பேரழகு வாய்ந்த பெண்ணெருத்தி இங்கு எந்த மூலையிலும் இருக்கமுடியாது என்ற இறுமாப்புடனும், இவளு டைய கடைக்கண் பார்வையைப் பெறுவதற்காகக் காளையர் கூட்டம் ஒன்று தவமிருக்கும்போது அந்தக் கவர்ச்சிப் பாவையின் காதலைப் பெற்ற தான் காவியக் கதாநாயகர் களைவிட உயர்ந்தவன் என்ற எண்ணத்துடன் பெருமையடித்துக் கொண்டு திரிந்த சுந்தரத்தின் உள் உணர்வுகளும் மெல்லிய எண்ணங்களும் ராஜத்தைக் கண்ட தும் கூனிக்குறுகின. தன்னைத் தானே ஒருமுறை வெட்கத்துடன் பார்த்துக்கொண்டான். இருவரை யும் எடைபோடுவதில் அவனு

டைய கருத்தரங்கில் ஒரு பெரும் போராட்டமே நடந்தது. மேரியின் கண்களிலே கவர்ச்சியும், ஏக்கமும் பாவிப் பரவி நின்றன. ஆனால் ராஜத்தின் பேச்சிலோ கனிவும், கண்ணியமும் ஒலித்தது. சுந்தரம் மேரியைச் சந்தித்த நிகழ்ச்சியே ஒரு விசித்திரந்தான். மற்றவர்களால் சுலபமாக நம்பமுடியாத ஒரு காட்சியாகத்தான் அந்தக்காட்சி அமைந்துவிட்டது. சென் மேரிஸ் பாடசாலையின் வாசலில் "இன்று அனாதைக் குழந்தைகளின் நிதிக்காக மாபெரும் விநோத விற்பனை" என்ற விளம்பரப் பலகை ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. வேடிக்கைகளையும், விநோதங்களையும் அவ்வளவு விருப்பத்தோடு நினைப்பவனல்ல சுந்தரன். ஆனால் அன்று விதி அவனை அங்கிழுத்தது. நண்பர்களின் வற்புறுத்தல் பொறுக்க மாட்டாமல் சுந்தரமும் நுழைந்தான் பள்ளிக்குள். பறந்து திரியும் பொன்வண்டுகள் அந்த முற்றமெல்லாம் நடந்து திரிவதைக் கண்டதும் சுந்தரத்தின் தோழர்களின் உற்சாகத்தைக் கேட்க வேண்டுமா? துள்ளிக் குதித்தபடி மூலைக்கொருவராக ஓடி மறைந்தனர். சுந்தரம் தனியானான். எங்கு நோக்கினாலும் இளமையின் இன்பத் தோற்றங்கள் வாலிபத்தின் வண்ண ஜாலங்கள் காட்டும் வாலைக் குமரிகளின் பாளைச் சிரிப்பொலி அந்த இடமெல்லாம் பரவி ஒரு இனிய நாதத்தை எழுப்பிற்று. "டிக்கெட் ஒன்று வாங்குவீர்களா?" திடுக்கிட்டுத் திரும்பிய சுந்தரத்தின் இமைக் கபாடங்கள் மூட மறுத்தன. தாரகைக் கூட்டங்களின் மத்தியில் முழுமதிபோல் கோடி முல்லை மலர்கள் நடுவே ஒரு வெள்ளை ரோஜாவைப்போல சைனாக்காரன் செய்த பாவைப் பொம்மையொன்றை தன் மலர்க் கரத்தில் ஏந்தியவாறு அவனுக்கு அருகாமையில் அவள் நின்று கொண்டிருந்தாள். பிரமதேவனின் பிரத்தியேகமான படைப்புத்தான் இதுவோ? சுந்தரம் திண்டாடினான். இவ்வளவு நெருக்கமாக ஒரு இளம் பெண்ணைப் பார்க்கும் வாய்ப்பு இதுவரை அவனுக்குக் கிடைக்கவில்லை. அவளுடைய கரங்களின் செழுமை, கன்னங்களின் மெருகு, பாதங்களின் மென்மை, கடைந்

### ஆழ்கடலுக்குள்

## பெரும்மலை

இந்து மகா சமுத்திர ஆராய்ச்சிக் குழுவினர் உலகிலேயே பெரும் செங்குத்தான மலைகளை இலங்கையருகேயுள்ள ஆழ்கடலில் கண்டு பிடித்துள்ளனர். இதற்கு முன் யாரேனும் இதுபோன்ற பெரும் மலையைக் கடலுக்குள் கண்டு பிடிக்கவில்லை. இவ்வாராய்ச்சிக்கு அமெரிக்கா முக்கிய பங்கெடுத்துக் கொண்டிருக்கிறது. இதற்குப் 'பயனீர்' என்ற கப்பலைப் பயன்படுத்துகின்றனர். 'பயனீர்' மிதக்கின்ற மாபெரும் சோதனைச் சாலையாகும். இக்கப்பல் ஆறு மாத காலமாக 27 ஆயிரம் மைல்கள் இந்து சமுத்திரத்தில் பிரயாணம் செய்துள்ளது.

இந்தோனேசியா, மலாசியா, பிலிப்பைன், அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளைச் சார்ந்த சிறந்த விஞ்ஞானிகள் இம்மிதக்கும் சோதனைச் சாலையில் உள்ளனர்.



## இலக்கியம்

**நாம்** அணிகின்ற உடைகளின் அமைப்பு காலத்துக்குக காலம் மாறுவதுபோல் இலக்கிய அமைப்பும் காலத்துக்குக்காலம் மாறிக்கொண்டே இருக்கும்.

— டிஸ்ரேலி

* * *

**இலக்கியச்** சுவை அறியாதவன் வாழ்ந்தாலும் இறந்தவனே.

— செனீக்கா

* * *

**இலக்கியம்** உணவுக்காக இயற்றக் கூடியதன்று. ஆன்மாவின் ஆணைப்படி இயற்றும் தூய தொழிலாகும்.

— கிரீலி

தெடுத்த தந்தச் சிலை போன்ற கட்டுடல் எல்லாமே அவனை ஒரு நொடிப்பொழுதில் கிறங்க வைத்தன. "என்ன இப்படிப் பார்க்கிறீர்கள்?" அவள் கல, கலவென்று சிரித்தாள். முத்துக்கள் சிதறி ஒளி வீசின. தொடர்ந்து கண் இமைக்கும் நேரத்தில் டிக்கெட் ஒன்றைக் கிழித்து அவன்முன் நீட்டினாள் மேரி. சுந்தரம் திணறிவிட்டான். வெறும் பைதான் என்று தெரிந்து கொண்டும் குத்திக் குடையும் சுயமரியாதைக்காக கையை விட்டு ஏதோ ஒரு விநோதப் பொருளை வேடிக்கை பார்ப்பது போல் மேரி அவனைப் பார்த்து குமிழ்ச் சிரிப்பொன்றை உதிர்த்தாள். சுந்தரத்தின் முகத்தில் அசடு கொடிகட்டிப் பறந்தது. "வந்து......... வந்து.........நான்.........நான்...... தடுமாறினான் சுந்தரம்". காசு கொண்டுவரவில்லை. இதை வைத்துக்கொள்ளுங்கள். ஆனால் ஒரு நிபந்தனை பரிசு விழுந்தால் எப்படியும் என்னிடம் சேர்த்துவிட வேண்டும். தெரியுமா?" கேலித்தனம் முகத்தில் தவழ, தன்னுடைய சுட்டுவிரலால் அவனுக்கு உரிமையுடன் ஒரு பத்திரம் காட்டிவிட்டு சிட்டாகப் பறந்தாள் அந்தப் பாவை.

விற்பனை முடியும் தறுவாயில் ஒலிபெருக்கி அதிஸ்டச் சீட்டிழுப்பின் விபரத்தை அறிவிக்கத் தொடங்கியது. சுந்தரம் காதுகளைக் கூர்மையாக்கிக் கேட்கத் தொடங்கினான். அவனுக்கும் ஒரு நப்பாசை. திடீரென்று அவனுடைய பெயர் ஒலிபரப்பப்படவே பர, பரப்புடன் இடத்தைநோக்கி விரைந்தான். மேரியின் கையிலிருந்த அதே சைனாப் பொம்மை சுந்தரத்துக்குப் பரிசாக வழங்கப்பட்டது. வாளிப்பும் வனப்பும் ஒருங்கே கலந்த அந்தப் பொம்மையைச் சுந்தரம் உற்று நோக்கினான். அந்த அழகுப் பொம்மையின் உதட்டோரத்தில் நெளிந்த சிரிப்பு மேரியின் குமிழ்ச் சிரிப்பைத்தான் அவனுக்கு ஞாபகமூட்டியது. "பரிசு விழுந்தால் பத்திரமாக என்னிடம் சேர்த்துவிடவேண்டும்," என்று அவருடைய உரிமை வேண்டுகோள் அவனது காதுகளில் ஒலிக்கவே அந்த இடமெல்லாம் அவளைத்தேடி அலைந்தான். மேரியை அங்கு காணவில்லை. காணாமல் போன குழந்தையை தேடித்திரிந்த தாயின் ஏக்கத்தோடு வீடு திரும்பினேன். மறுநாள் எப்படியாது அவளைச் சந்தித்துவிடலாம் என்ற நம்பிக்கை, பாலைவனத்தின் மூலைப்புறத்தில் சோலைவனம் ஒன்று இருப்பது போல அவனுடைய இதயத்தின் அடித்தளத்தில் இல்லாமற்போக

வில்லை. மறுநாள் அவன் நினைத்தது நடந்தது. பள்ளிக்கூடத்தின் உணவேற்பாட்டு விடுதியில் அவளைச் சந்தித்தான் அவன். பொம்மையை வாங்கிக்கொண்ட மேரி நன்றிகலந்த உணர்வுடன் எந்த வித சலனமுமின்றி பார்வையொன்றை உதிர்த்து விட்டு உள்ளே சென்றாள். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு சுந்தரம் மேரியை அடிக்கடி சந்திக்க முயன்றான். தனியாக சந்தித்தால் சரளமாகப் பேசும் மேரி தோழிகள் மத்தியில் செல்லும்போது அவனைப் பார்த்தும் பார்க்காததுபோல் போவது அவனுக்கு என்னவோ போல் இருந்தது. ஆனால் அவனது கடைக்கண் பார்வைக்குப் பின்னால் கள்ளப் புன்முறுவல் ஒன்று ஓடிச் சென்று அவன் உள்ளத்தைக் குத்திக் குடையும்.

''இன்னும் நீங்கள் சாப்பிடவில்லையா? எனக்குப் பள்ளிக்கூடத்திற்கு நேரமாகிவிட்டது,'' கனிவுடன் கடிந்துகொண்டாள் ராஜம். ராஜம் அந்த வீட்டில் காலடி எடுத்துவைத்த நாள் முதல் சுந்தரத்தின் தேவைகளையெல்லாம் அவனைக் கேட்காமலே அவள் நிறைவேற்றி வந்தாள். சேவை செய்வதில் அவள் ஒரு தாயானாள். ''என் ராஜம் நீ தானே நாளை முதல் பள்ளிக்கூடத்து உணவேற்பாட்டு விடுதியில் தங்கப் போகிறாய்.'' இந்தக் கேள்விக்குப் பின் இதயச் சுமையொன்று இறங்கியதுபோல் இருந்தது சுந்தரத்துக்கு. விட்டது சனியன் என்று நினைத்தான், அவன். ''ஆமாம் படிப்பதற்கு சற்று இலகுவாக இருக்கும், அதுமட்டுமல்ல அம்மாவின் நச்சரிப்பால்தான் நான் அங்கு போகவேண்டியிருக்கிறது. ஆனால் என்னைமட்டும் அடிக்கடி வந்துபார்க்க மறந்துவிடாதீர்கள். சிறைச்சாலைக்குப் போவதுபோல் உணர்கின்றேன். மனம் விரும்பாத இடத்தில் கால்கள் நடந்தால்கூட அது சிறைதானே சுந்தரம்.'' ராஜத்தின் குரலில் ஏக்கத்தின் சாயல் படித்திருந்தது. சுந்தரம் ஒருபிடி சோற்றை மென்று விழுங்கிய வண்ணம் மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தான். ''ராஜம் உனக்கு மேரி என்ற பெண்ணைத் தெரியுமா? உன்னுடைய வகுப்பில் தான் படிக்கிறாள்.'' ராஜம் ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தாள். ''மேரியை எனக்கு நன்றாகத் தெரியும் தமிழ் கட்டுரைகளும், கதைகளும் எழுதி வகுப்பில் முதல் புள்ளிகள் வாங்குவாள். நல்ல கெட்டிக்காரி,'' பெருமையுடன் கூறினாள் ராஜம். அந்தத் தனிச் சிறப்பு வாய்ந்த கட்டுரைகளுக்கும், கதைகளுக்கும் சொந்தக்காரன் சுந்தரம் தான் என்பதை அறியப் போகிறாள் அந்தப்பேதைப் பெண் ராஜம். தனக்குத் தெரியாமலே தன்னை மிக அக்கறையுடன் ராஜம் கவனித்துக் கொண்டு வருகிறாள் என்பதை அவன் புரிந்துகொண்டிருக்கிறான். இது அவனுக்குப் பிடிப்பதே இல்லை. எவ்வளவு தூரம் தன்னை அவளிடமிருந்து மறைத்துக்கொள்ள வேண்டுமோ, அவ்வளவு தூரம் முயற்சி செய்தான். வீட்டாருக்குத் தெரியாமல் எத்தனையோ உதவிகளை அவள் செய்ய முன்வந்தும் எதையும் அவன் ஏற்றுக்கொள்ளவில்லை. மேரியின் காதல் உணர்வுகள் ராஜத்தின் கனிவுச் சேவையை அவனுடைய உள்ளத்தில் ஏற்க மறுத்தன. ராஜம் சுந்தரத்திடம் இறுதியாக விடைபெறும் போது விழிகளைக் குளமாக்கிக்கொண்டே பிரிந்தாள்.

மாதங்கள் பல கடந்தன. ராஜத்தின் விடுதிக்கு அடிக்கடி சென்றுவந்தான். சுந்தரம் தங்கையென்று கூறிக்கொண்டு உரிமை

யுடன் உள்ளே சென்றவன் ராஜத்தைப் பார்க்கவில்லை, உண்மையில் மேரியைத்தான் சந்தித்தான். ராஜத்தின் எதிரிலேயே மேரியும், சுந்தரமும் நயன பாஷையில் எதையெல்லாமோ பேசினர். தொட்டுப்பழகினர். இன்பவானில் சிறகடித்துப் பறந்தனர். ராஜம் உள்ளம் பொருமினாள். அவளது இதயமும், எண்ணமும் மௌனமாக அழுதது. ஒருபுறமும் ஏக்கப் பெருமூச்சு மறுபுறம் இன்ப கீதம். ஒருநாள் இருந்தாற் போல் இருந்து மேரி தன் உள்ளக்கிடக்கையை சுந்தரத்திடம் வெளியிட்டாள். சுந்தரம் பயத்தினால் நடுங்கினான். அவனுக்கு எதைப் பேசுவது என்ன செய்வது, எப்படி நடந்து கொள்வது என்று ஒன்றுமே தெரியவில்லை. திடீரென்று கீழே சரிந்து விழுந்து அவனது கால்களைப் பிடித்துக்கொண்டு விசும்பினாள் மேரி. இப்படி ஒரு நெருக்கடியான கட்டத்தில்தான் என்ன செய்யவேண்டும் என்பதை முன்னாலேயே யோசிக்கவில்லையென்று தன்னைத்தானே நொந்துகொண்டான். "சுந்தரம் மறுத்துமட்டும் கூறிவிடாதீர்கள் என்னால் இனி மேலும் பொறுக்கமுடியாத நிலை." "அவனது முழங்காலில் முகத்தைப் புதைத்துக்கொண்டாள். சுந்தரத்தின் உடலில் எங்கோ ஒரு மூலையில் முடங்கி உறங்கிக் கிடந்த குறளி ஒன்று பயங்கரமாக ஆடத் தொடங்கியது. உடலெல்லாம் ஒரு குறுகுறுப்புத் தலைநீட்டியது. மேரியின் வார்த்தைகளுக்கு முன்னால் தான் வெறும் தலையாட்டிப் பொம்மையாக மாறியதற்குக் காரணம் இந்தக் குறுகுறுப்புத்தான் என்பதை அவன் அன்று உணர்ந்து கொள்ளவில்லை. இளம் இரத்தம் சூடேறி உணர்ச்சி நரம்புகளைப் புடைக்கச் செய்தது. "கண்டிப்பாக வருகிறேன் மேரி காத்திரு." அவளது பதிலுக்குக்கூட காத்திராமல் எழுந்து போய்விட்டான் சுந்தரம்.

சென்மேரிஸ் பள்ளிக்கூடத்தின் பெண்கள் விடுதி பிரேதக்களையுடன் பிரக்ஞை அற்றுக்கிடந்தது. பனியுடன் கூடிய காற்று அந்த விடுதியைச் சுற்றியுள்ள பூஞ்செடிகளின் மேல் பட்டுச்செல்லும்போது அந்த நிசப்தம் நிறைந்த இரவில் ஏதோ ஒரு சோக நிகழ்ச்சி நடைபெறப் போவதை எண்ணிப் பெருமூச்சு விடுவதுபோல் கேட்டது. அமைதி நிறைந்த அந்த விடுதியின் இரு

## புதைபொருள் ஆராய்ச்சி

இலங்கையின் தென்கிழக்குப் பகுதியிலுள்ள கல்லோயாவில் நிலத்தைத் தோண்டியபொழுது காலத்தால் மிகப் பழமை வாய்ந்த ஓவியங்கள் — சிற்பங்கள் — குகைகள் வெளிவருகின்றன.

கல்லோயாவில் கல்கமுவ என்னும் இடத்தில் சில குகைகள் கண்டுபிடிக்கப்பட்டன. அங்கு மனிதர் பாவிப்பதற்குரிய சில தளபாடங்களும் பல வண்ணந் தீட்டப்பட்ட ஓவியங்களும் காணப்படுகின்றன. ஓவியங்களில் உள்ள கலைத்திறனைத் தளபாடங்களில் காணமுடியவில்லை, மேலும் அக் குகையின் நீளமோ 1000 அடி. இக்குகையின் அமைப்பைப் பேராசிரியர் பர்ணவிதாரண அவர்கள் பார்வையிட்டு இக்குகை 'மொகஞ்சதாரோ' குகைகளை ஒத்திருக்கின்றன என்று கூறியுள்ளார்.

அறைகளில் ஒன்றில் ராஜம் அமைதியாகவும், எதையும் அறியாமலும் இமை கவிழ்ந்து நன்ருகத் தூங்கிக்கொண்டிருந்தாள். அயர்ந்த உறக்கத்தின் மத்தியிலே அவளது உதடுகளில் புன்னகை ஒரு இலட்சுமி கரமான ஒளியை அவள் முகத்தில் பரப்பிக்கொண்டிருந்தது. சரித்திர நூலொன்று அவளது மார்பகத்தில் குப்புறவிழுந்து தழுவிக்கொண்டிருந்தது. அடுத்த அறையில் மேரி தூக்கம் பிடிக்காமல் துடித்துப் புரண்டுகொண்டிருந்தாள். உடலை ஒருமுறை வில்லாய் வளைத்து எழுந்து உட்கார்ந்த அவளது கண்கள் செந்தணலாக பழபழத்துக் கொண்டிருந்தது. பழுக்கக் காய்ச்சிய இரும்புத் துண்டைப்போல் இங்குமங்கும் புரண்ட அவளது உடல் கொதிப்பேறி கணகணத்தது. இரைக்காகத் தவிக்கும் பெண்புலியைப் போல் அறையில் அங்குமிங்கும் உலாவினுள். மெதுவாகத் திறந்து வைத்திருந்த கதவை ஒரு முறை கண்கொட்டாமல் பார்த்தாள். திடீரென்று ஏதோ வெளியில் சலசலப்புச் சத்தம். மேரியின் கண்களிலே புதிய ஒளி இலேசான ஒரு வெறிப் புன்னகை உதட்டிலே நெளிந்து புரண்டது. தன்னுடைய கட்டுமஸ்தான உடலை ஒருமுறை கவர்ச்சியுடன் பார்த்துக்கொண்டாள். மேல்த் துண்டை எடுத்துப் போர்த்திக்கொண்டு ஜன்னலை மெதுவாகத் திறந்து எட்டிப் பார்த்தாள். கடுவன் பூனையொன்று சுந்தரத்தின் உருவில் சுவர்ஏறிக் குதிக்கத் தயாராக நின்றுகொண்டிருந்தது. குளிர்ந்துவந்த பனிக்காற்று அவனது உதடுகளை வெடிக்கச்செய்தாலும்கூட, பயத்தினுல் உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது. மயக்கம் வந்துவிடாமல் இருப்பதற்காக பக்கத்தில் தொங்கிய ஏதோ ஒரு கொடியை மெதுவாகப் பற்றிக் கொண்டான். திக்...— திக்...... என்று காரணம் அறியாமலே அடித்துக்கொண்டது அவனது மனம். மேரியின் அறையை அவன் கண்கள் ஆவலோடு தேடின. அது அதோ கையைக் காட்டுவது யார்? ஆமாம் மேரிதான். அவளேதான் நினைத்துக்கூடப் பார்க்க நேரம் வைக்காமல் குதித்து விட்டான் சுந்தரம். ''யாரது?'' எங்கிருந்தோ ஒரு ஆந்தையின் பயங்கர அலறல். கோட்டானின் குலை நடுக்கச் சத்தம், அபாயச் சங்கின் அவல ஒலி. பீரங்கிகளின் பேரிரைச்சல். விடுதியின் வேலைக்காரன் சகாயத்தின் உறுமல் குரலைத்தொடர்ந்து அவனது கைவிளக்கின் வெளிச்சம் சுந்தரத்தின் முகத்தில் பாய்ந்து பரவி அவன் கண்களை ஒளி இழக்கச் செய்தன. இரத்தம் உறைந்து, இதயம் வறண்டு, உணர்ச்சிகள் மரத்து வெறுங்கூடாக நின்ருன் சுந்தரம். விடுதியெங்கும் ஒரே பரபரப்பு மின் விளக்குகள் பிரகா

## அதிசய வாவி

**இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் ஓர் அதிசயமான வாவி காணப்படுகின்றது. இவ்வாவியில் மலையுச்சியிலிருந்து ஒரு விஞடிக்கு ஒரு துளியாக நீர் விழப் பெறுகின்றது. இதன் ஆதியையும் அந்தத்தையும் இன்னும் எவருமே வரையறுக்கவில்லை. இந் நீர்த் தேக்கத்தை மக்கள் இன்றுவரை எதற்குமே பயன்படுத்தக் காணேம். விலங்குகள் சுதந்திரமாகவும் சுறுசுறுப்பாகவும் இவ்வாவியில் நீராடியும் உண்டு மகிழ்ந்தும் வாழுகின்றன.**

சித்து அந்த இடத்தைப் பட்டப் பகல்போல் ஆக்கியது. சகாயத்தின் இரும்புப்பிடியிலிருந்து விடுபட அவன் எந்த முயற்சியும் செய்ய வில்லை. மேரியின் பரிசுத்த அன்பினுல் எந்தப் பயங்கரத்தையும் வென்றுவிடாலாமென்ற நினைவு அவனுக்கு துணிச்சலைக் கொடுத்தது. விடுதியின் பெரிய தாயார் அவர்களின் கண்டிப்பான கேள்விக்கு கனிவாகப் பதில்கொடுத்தான், சுந்தரம். ''மேரி அவள்தான் எனது அன்புக்காதல் உயிரிலும் மேலாக நேசிக்கும் அந்த உத்தமியின் வார்த்தைக்கு மறுவார்த்தை பேசமுடியாமலே இங்கு வந்தேன். அதுமட்டுமல்ல அவளை நான் வெகு விரைவில் திருமணம் கொண்டு வாழப்போகிறேன். இதுதான் உண்மை.'' களவு ஒழுக்கத்திற்குச் சென்ற காவியக்காலக் கதாநாயகனின் துடுக்கும், மிடுக்கும் அவனது பேச்சில் தொனித்தது. சிஸ்டர் அன்னுவின் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. ''என்ன மேரியா உன்னை வரச் சொன்னுள்? அழைத்துவா அவளை'' கண்டிப்பான உத்தரவு மேரியின் அறையை நோக்கிப் பறந்தது.

எந்த வித சலனமுமின்றி என்றுமே காணுத ஒரு மனிதனைப் பார்ப்பதுபோல ஆச்சரியத்துடன் சுந்தரத்தின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள் மேரி. சுந்தரம் அவளை நிமிர்ந்து நோக்கினுன். ''மேரி நீ என்னை இந்த இக்கட்டிலிருந்து காப்பாற்று. நான் உன்னை வாழ்வில் முழுதுமே காப்பாற்றுவேன்'' என்று கெஞ்சுவது போல் இருந்தது அந்தக் கனிந்த பார்வை. ''மேரி உன்னுடைய வேண்டுகோளின் பேரில்தானு இவர் சுவர் ஏறிக் குதித்து இங்கு வந்தார்?'' சிஸ்டர் அன்னுவின் குரல் கண்டிப்புடன் தொனித்தது. மேரியின் மேலுதடுகள் துடித்தன. மேரி பேசினுள்:- ''சிஸ்டர் நான் இவரை என்றுமே சந்தித்தது கிடையாது. இவர் எனக்கு முன்பின் தெரிந்தவர் அல்ல, இவரை நான் வரச் சொல்லவும் இல்லை''

''மேரி...... என்ன சொன்னுய்'' அந்த இரவின் நிசப்தத்தைக் கிளித்துக்கொண்டு அண்டமே பிளக்கும்படி கத்தினுன் சுந்தரம். கண்கள் இருண்டது. நாக்கு வரண்டது. எனினும் தட்டுத்தடுமாறி சகாயத்தின் உதவியோடு ஆடி அலைந்து அங்கு நின்ருன் சுந்தரம். பேரழகுப் பதுமை மேரி புனிதவதி என்று சுந்தரம் பலமுறை கூறிய மேரி ஆடி அசைந்து தனது மெல்லடிகளை எடுத்து வைத்து அறைக்குத் திரும்பிக் கொண்டிருந்தாள். சுந்தரத்தின் கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் அவளது உருவத்தை மறைத்தது. ''சகாயம், பொலீசுக்கு டெலிபோன் செய்து அவர்களை இங்கு கூப்பிட்டு இவனை ஒப்படைத்துவிடு'' உத்தரவு போட்டுவிட்டு சிஸ்டர் அன்னு தன் அறைக்குத் திரும்பி நடந்தார். ''இல்லை, சிஸ்டர் நான்தான் இங்கு அவரை வரும்படி கட்டாயப்படுத்தினேன். அவருடைய முறைப் பெண் நான். என்னுடைய தூண்டுதலின் பேரில்தான் அவர் சுவர் ஏறிக் குதித்தார். நரன் அவரைத் திருமணம் செய்துகொண்டு மகிழ்ச்சியாக வாழப்போகிறேன். தயவு செய்து அவரைமட்டும் போலீசில் ஒப்படைத்து விடாதீர்கள். என்னுடைய எதிர்காலக் கணவரின் மானத்தையும் அந்தஸ்தையும் காப்பாற்றுங்கள்.'' எங்கிருந்தோ மிக அமைதியாகவும் ஆனுல் உறுதியாகவும் ஒலித்தது அந்தக் குரல். குரல் வந்த திக்கை நோக்கி எல்லோருமே திரும்பினர். ராஜம் தனது பெட்டி படுக்கைகளுடன் வெளியில் செல்வதற்கு ஆயத்தமாய் சாந்தமே உருவாக நின்று கொண்டிருந்தாள். ''ராஜம் என்ன

உள்ளுகிருய். உன் படிப்பை வீணுக்கிவிடாதே, யாரோ முன்பின் தெரியாத ஒரு காமுகனுக்காக உன் எதிர்காலத்தையே பாழாக்கவா போகிருய்?'' சிஸ்டர் அன்னுவின் குரலில் அளவுக்கு மீறிய கடுகடுப்புக் கலந்திருந்தது. ''இல்லே சிஸ்டர், என்னே மன்னித்துவிடுங்கள். என் எதிர்காலமே அவராகிவிட்ட பிறகு — என் இல்லறத்தின் பிறப்பிடமே அவராகிவிட்ட பிறகு எனக்கு எதற்குப் படிப்பு, அறிவு எல்லாம்?'' ராஜம் மெல்ல நடந்து வந்து சிஸ்டர் அன்னுவை நன்றி கலந்த பார்வையுடன் ஒருமுறை பார்த்துவிட்டு சுந்தரத்தின் கைகளே மெதுவாகப் பற்றினுள். சூடேறிக் கொதித்துக்கொண்டிருந்த அவனது கரம் அந்தப் பிடியினுல் குளிர்ந்து ஒரு இனிய சுகத்தைக் கொடுத்தது. அந்த 'நீண்ட கரிய இரவின் இருளில் இரு இளம் ஒன்றுபட்ட உள்ளங்கள் தங்கள் கரங்களே ஒன்ருகப் பிணேத்து, ஒரு நீண்ட பெரும்பயணத்தை ஆரம்பித்தன. இல்லறத்தின் மணம் அந்த இடமெல்லாம் பரவ தனது புது வாழ்வைச் சுமந்துகொண்டு சுந்தரமும் தனது எதிர்கால வாழ்வைக் கசக்கிப் பிழிந்து இன்னெரு ஜீவனுக்கு வாழ்வளித்த பெருமையுடன் ராஜமும் ஒருவரோடு ஒருவர் ஒன்றிப் போக அந்தப் பள்ளிக்கூடத்தின் பெருஞ் சுவர்களேக் கடந்து வீதியில் அமைதியாக வீடு நோக்கி நடந்துகொண்டிருந்தனர். மேரி தன் அறையில் குறட்டை விட்டு ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கி இருந்தாள். *

வான வெளியில்

## பாம்புடன் போர்

ஒரேயொரு பிரயாணியை ஏற்றிக்கொண்டு காசிக்குப் பறந்து செல்லும் விமானமொன்றில் கப்டன் ஐ. பி. சிங் என்பவரின் கையில் பச்சைப் பாம்பொன்று சுற்றிக் கொண்டது. அவ்விமானக் கப்பலுக்குள் பாம்பு வந்ததே பெரும் புதிராகிவிட்டது. கப்டன் சிங் என்பவர் தம் மனவலியாலும் புத்தி சாமர்த்தியத்தாலும் பாம்பு கையைச் சுற்றிக் கொண்டதும் அதை ஆட்டாமல் மரக்கட்டைபோல் வைத்திருந்தார். பாம்பு சற்று நேரத்தின் பின் கருவிகளின் மேல் போர்டில் ஏறியது. சிங் இது தான் தக்க தருணமென்று எண்ணித் தன் மெத்தையால் பாம்பை இறுக அமுக்கிப் பிடித்தார். நல்ல வேளேயாக அமாசி விமான நிலேயத்தின் அருகே விமானம் வந்ததால் சாமர்த்தியமாக அந்நிலேயத்தில் கொண்டுவந்து இறக்கினுர். தரையிலே விமானம் இறங்கியதும் பாம்பு நழுவப் பார்த்தது. ஊழியர்கள் விடவில்லே. பாம்பைச் சாக அடித்தார்கள். பாம்பு ஏனேய பாம்புகளேக்காட்டிலும் அபூர்வமானதும் கொடிய விசமுள்ளதுமாம். இதையிட்டு கப்டன் ஐ. பி. சிங் என்பவர் மிக மிகப் பாராட்டுக்குரியவராகிவிட்டார்.

# தமிழ் நாடகக் கலை

ஆ. கல்யாணசுந்தரேசன் பி. ஏ.

நுண் கலைகள் என்று சொல்லப்படுவனவற்றுள் முக்கியமாக இசை, நடனம், நாடகம் யாவும் அடங்கப்பெறும். ஆயகலைகளைப் போற்றி எந்த நாடு வாழுகின்றதோ அந்த நாடு நாகரீகத்திலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்கவும் காணுகின்றோம். "ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் என்னம்மை" என்று நம்மவரால் எடுத்தோதப்பட்டதிலிருந்து தமிழர் தம் கலை வளர்க்கும் பொறுப்பை எவ்வளவு தூரம் பெருமையாகவும் அருமையாகவும் போற்றி வளர்த்தார்களென்பது நன்கு புலனாகும்.

எனினும் எல்லாவித கலைகளுள்ளும் தமிழ் மக்கள் முத்தமிழுள் ஒன்றாகிய நாடகத் தமிழுக்கே முதலிடம் கொடுத்திருக்கிறார்களென்பது மிகவும் கூர்ந்து கவனிக்கவேண்டியதொன்றாகும். ஏனெனில் நாடகக்கலை படித்தவன் படியாதவன், ஏழை, பணக்காரன் என்னும் இரு திறத்தாரையும் தன்பால் ஈர்த்து, நல்ல அறிவோடு கூடிய பண்பையும் ஒழுக்கத்தையும் வளர்க்க உதவி செய்கின்றது. தமிழ் நாடகக் கலை, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை முதலில் சமய சம்பந்தமான தொடர்பாலேதான் வளர்ச்சியடைந்ததென்று அறுதியிட்டுக்கூறுவர் அறிஞர். நாடகத்தில் பாட்டு, வசனம், நடிப்பு, நடனம் ஆதியன யாவும் ஒன்றுபடக் கலந்து வருவதினால், மக்கள் அதனைப் பெரிதும் விரும்புகின்றனர் என்பது இன்னொரு காரணமாகும். இத்தகைய தமிழ் நாடகத்தின் தொன்மையும் அதன் சிறப்பும் முக்கியமாக சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டிருக்கின்றன. சிலப்பதிகாரத்தில் கூத்து என்பதுதான் நாடகம் என்னும் பெயருடன் வழங்கப்பெற்றிருக்கின்றது. நாடக மகளிர் என்று சொல்லப்படும்போது நடனம் அல்லது கூத்த மகளிர் என்ற பொருளையே குறிப்பதாகும். இதனாலன்றோ என்னமோ இன்றும் நம் "நாடகம்" என்பதற்குப் பதிலாக "கூத்து" என சொல்வதை மக்களிடையே காணலாம். சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய இடம் "நாடக அரங்கு" எனப் பெயரைப்

பெற்றது. "நாடகம் என்பது அடியார்க்கு நல்லார் உரையும் அதன் தொன்மையையும் பெருமையையும் எடுத்துக் காட்டுகின்றன. அடியார்க்கு நல்லார் காலத்துக்கு முன்னும்; அவர் காலத்தும் இருந்தனவென்றும் சொல்லப்படும் கூத்த நூல்களான பரதம், அகத்தியம், முறுவல், இசைநுணுக்கம், பஞ்சமரபு, பரத சேனாபதீயம், கூத்த நூல், இந்திர காளியம், குணநூல் முதலியவைகளோடு மதிவாணனார் நாடகத்தமிழ் என்ற நூலும் இருந்ததாக அறியக்கிடக்கின்றோம். இந்நூல்களுள் தற்போது ஒன்றேனும் இல்லாதிருப்பினும் மதிவாணனார் நாடகத் தமிழ் மாத்திரம் நம்மிடம் பிழைத்திருக்கிறது.

தமிழிலுள்ள மிகவும் தொன்மையான நூல் தொல்காப்பியமாகும். அந்நூலில் வரும் ஒரு சூத்திரத்தில்,

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்"

என ஒரு சொற்றொடர் எடுத்தாளப்படுகின்றது. இதனைக் கொண்டும் தமிழ்நாடகம் மிகவும் தொன்மையுடையது என்பதை நன்கு உணரலாம். இந்த நிலையில் தமிழ்நாடகம் இருந்திருந்தபோதிலும் அக்காலத்தில் எழுதப்பட்ட தமிழ் நாடக நூல்கள் ஒன்றேனும் நமக்கு இக்காலம் கிடைக்கவில்லை. அடியார்க்கு நல்லார் எழுதிய உரையையும், சிலப்பதிகாரத்தையும் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அச்சிட்டு வெளியிடாவிட்டால் அக்காலத்தில் தமிழ் நாடகங்கள் இருந்திருக்குமோ என்று இன்று நாம் சந்தேகப்பட வேண்டியிருக்கும். தொல்காப்பியர் காலத்தில் "வள்ளி நாடகம்" இருந்ததாக "வாடா வயவர் ஏத்தும் வள்ளி" என்னும் சூத்திரத்தால் அறிந்து அது வள்ளிக் கூத்தையே குறிப்பதாகவும் உணருகின்றோம். இது மட்டுமன்றி "பால சரிதை நாடகம்" என்னும் நாடகமும் அக்காலத்தில் இருந்ததாக அறிகின்றோம். ஆனால் இவ்வகைத் தமிழ் நாடகங்கள், ஏனைய தேசத்து நாடகங்கள்போல மதசம்பந்தமான தொடர்பாலேதான் ஆதியில் இயங்கிவந்தன என்பது நன்கு அவதானிக்க வேண்டியதொன்றாகும். கோவில் பெருமைகளையிட்டும் நாடகங்கள் அவ்விடங்களிலேயே நடத்தப்பட்டு வந்தனவென்பதும் அக்கோவில்களிலுள்ள கல்வெட்டுக்களினால் அறியக்கிடக்கின்றோம்.

நாட்டியத்தில் ஏற்படும் இன்பம் சிற்றளவென்றால் நாடகத்தால் ஏற்படும் இன்பம் பேரின்பமாக மக்களுக்குத் தென்பட்டது. பாட்டும் அபிநயமும் நீடித்துச் செல்லாததோடு அதன் நுட்பங்களையும் நன்கு உணர்வது மிகவும் கஷ்டமானதாகுமென்பதே இந்த வேறுபாட்டுக்குரிய முக்கிய காரணமாகும். இதனால் மக்கள் மனம் திருப்தியடைய, கதை தழுவியதும் நாட்டியக்கலையோடு தொடர்புடையதுமாகிய நாடகத்தை விரும்பினர் எனலாம். ஒரு நடிகனோ அல்லது நடிகையோ ஒரு கதையைப் பின்பற்றிப் பல பாத்திரங்களையும் ஏற்றுக்கொண்டு பாட்டுக்களாலும் அபிநயத்தாலும் குறிப்பிட்ட கதையை நடத்தி வந்த முறையிலிருந்துதான் தற்காலத் தமிழ்நாடக முறை தோன்றியதெனலாம்.

இத்தகைய நாடகங்கள் இருந்தனவென்பதற்குப் பல சான்றுகளும் உண்டு. தொடக்க காலங்களில் நாடகத்திற்குரிய கதைப்பொருளை தருவனவாக சமயங்களே முதலிடத்தைப் பெற்றன. இதனால் இந்நாடகங்கள் பெரும்பாலும் கோயில்களிலேயே நடைபெற்று வந்தன. உதாரணமாக, தஞ்சை

யில் இருந்த முதல் இராசராசன் எடுப்பித்த கோயிலில் "இராச ராசேசுவர நாடகம்" ஆண்டு தோறும் நடிக்கப்பட்டு வந்ததாகக் கல்வெட்டுக் கூறுகின்றது.

இவ்விதம் உன்னத நிலையில் இருந்த தமிழ்நாடகம் பிற்காலம் ஏன் தாழ்ந்த நிலையை அடைந்தது என்பதற்கும்; அக்காலத் தமிழ் நாடக நூல்கள் ஏன் இக்காலம் இல்லாமல் இருக்கின்றனதென்ப தற்கும் தக்க காரணங்கள் இல் லாமலில்லை. ஒரு குறிப்பிட்டகால அளவுக்குள் இயங்கும் தன்மை யுடைய ஓலைகளில் இவை எழு தப்பட்டபடியினாலும் அவ்வாறு அழியும் காலங்களில் அவற்றை வேறு புதிய ஓலைகளில் பெயர்த்து எழுதுவோர் வரவரக் குறைந்து கொண்டு வந்ததினாலும் ஏற்பட்ட விளைவுதான் இது என அறிய லாம். கி. பி. பத்தாம் நூற்றாண் டளவில் தமிழ் நாடகம் கீழ் நிலையை அடைந்தமையினால் அவற்றோடு தொடர்புகொண்டவர் களையும் கீழ்ப்பட்டவர்களாகவும் கூத்தாடிகளாகவும் மதித்து, நாடக நூல்களைப் பெயர்த்து எழுதுபவர் களது அலட்சிய மனப்பான்மை தான் எமது பழைய தமிழ் நாடக நூல்களும், நாடக இலக்கண நூல் களும் மறைந்து போனதற்குரிய முக்கிய காரணமாகும். மீண்டும் பிற்காலம் முஸ்லீம்களது படை யெடுப்பினால் தமிழ் நாட்டிலுள்ள கோவில்கள் அழிக்கப்பட்டு மக்கள் குழப்பங்களினாலும் கலவரங்களினா லும் துன்பப்பட்டிருந்தனர். இத் துன்பங்களினாலும் துயரத்தாலும், மக்கள் அழுந்தியபோது, கோவில் களிலேயே தங்கியிருந்த நாடகக் கலையும் கவனிப்பாரற்று கீழ்நிலை அடைந்து தெருக்கூத்தாய் வந்து முடியும் நிலையும் ஏற்பட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் கூறும் நல்லுலகெலாம் மேனாட்டுக் கல்வி பரவி ஆங்கிலம் கற்போர் பலராய் பரவத் தொடங் கினர். சிலர் அவ்வறிவுடன் வட மொழியிலும் பாண்டித்தியம் பெற்று அம்மொழி நாடகங்களைத் தமிழில் தழுவியும் மொழிபெயர்த் தும் எழுதினர். இன்னும் பலர் ஆங்கில நாடகாசிரியர் ஜெகசிற்பி யின் நாடகங்களை மொழிபெயர்த் தும் தழுவியும் தமிழ் நாடக நூல் கள் இயற்றத் தொடங்கினர். இதன் காரணமாக இழிந்த நிலை யிலிருந்த அல்லது அமிழ்த்தப்பட் டிருந்த தமிழ் நாடகம் சிறிது சிறி தாக முன்னேறி பழைய பெருமைக் குரிய நிலையை மீண்டும் வந்த டைய முடிந்திருக்கின்றது. பிற் காலத்தில் தோன்றிய ஆசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றிய "மனோன்மணியம்" தமிழ் நாடகங் களில் தனிச்சிறப்புடன் கூடியதாக இருக்கின்றது.

அண்மைக் காலந் தொட்டு தமிழ் நாடகத்தின் பெருமையை யும் சிறப்பையும் நாளொருவண் ணம் சிறப்பிக்கச் சிறந்த நடிகர்–ஆசிரியர்–கலைவாணர் ஆகிய திரு. பம்மல் சம்பந்த முதலியார் அரும் பாடுபட்டார் என்பதை எழுதித் தெரிவிக்க வேண்டியதில்லை. இவர் தம் அரும்பணியைத் தொடர்ந்து தமிழகத்தில் பல சிறப்புமிக்க நாடக ஆசிரியர்கள் தோன்றி நாடகத் தமிழை வளர்த்து வருகின்றனர். குறிப்பாக தமிழ் நாட்டின் பெர் னாட்சோ என அழைக்கப்படும் திரு. சி. என். அண்ணாதுரை அவர் களைக் குறிப்பிடலாம். ஈழத்திலும் நிலையான தொண்டைச் செய்து தமிழ் நாடகத்தின் தரத்தை உயர்த்தியவர்களுள் முக்கியமான பெருமை கலையரசு திரு. சொர்ண லிங்கம் அவர்களையே சாரும்.

# கேள்வி ?

வ. நாகலிங்கம்,
திருக்கோணமலே.

**கே:** வட வியட்நாம் விசயத்தில் அமெரிக்கா நடந்துகொண்டது சரியா?

ப: இப்பொழுது எதையுமே சரி பிழையென்று கூறமுடியாது. டொன்கின் வளேகுடாவில் அமெரிக்க நாசகாரிகள் அத்துமீறிப் பிரவேசித்ததினுல்தான் தாக்குதலேச் செய்தோம் என்கிறது வடவியட் நாம்; அமெரிக்காவோ அதை மறுத்து – நாம் சர்வதேசக் கடலில் வரும்போது வட வியட்நாம் திடீரென நம்மைத் தாக்கியதினுல்தான் பதிலடித்தாக்குதல் செய்தோம் என்கிறது, இவற்றுள் யாருடைய கூற்றை நம்புவது? இது விசயமாகப் பரிசீலனே செய்வதற்கு ரஷ்யாவின் முயற்சியால் வடவியட்நாம் பிரதிநிதியை ஐ. நா. சபை அழைக்க முற்பட்டுள்ளது. எதுவாக இருப்பினும் அமெரிக்கா கொஞ்சம் தாமதித்துப் பெருந்தன்மையோடு நடந்திருந்தால் இவ்வளவு தூரம் உலக யுத்தம் மூளுமோ என்று எல்லா நாடுகளும் பீதியடையக்கூடிய அளவுக்கு நிலேமை இவ்வளவு மோசமாக வந்திருக்குமா?

ச. சபாநேசன்,
காரைநகர்.

**கே:** நம் வாழ்வுக்குக் கலே முக்கியமா? விஞ்ஞானம் முக்கியமா?

ப: இரண்டும் முக்கியம்.

அ. நற்குணம்,
யாழ்ப்பாணம்.

**கே:** காட்சி என்னும் சொல்லே நான் தமிழ்ச் சொல் என்கிறேன். என் நண்பரோ அதை வடமொழி என்கிருர். யாருடைய கூற்றுச் சரியானது?

ப: உம்முடைய கூற்றுத்தான் சரியானது. 'காட்சி' தூய்மையான தமிழ்ச் சொல்லாகும். அது காண் என்னும் பகுதியடியாகப் பிறந்தது.

சி. அரியதம்பி,
கரவெட்டி.

**கே:** என் முகத்தில் அதிகமாகப் பருக்கள் போடுகின்றன. அதை எப்படி மாற்றலாம்?

ப: முகத்தில் அதிகமாகப் பருக்கள் போடுதற்கு மலச்சிக்கல்தான் முக்கிய காரணம். அதிக வெப்பத்திஞலும் முகத்தில் பருக்கள் போடுவதுண்டு. அதைப் போக்குதற்கு முதலில் மலச்சிக்கல் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். உண்ணும் உணவிலே நிறைய கீரை வகைகளேச் சேர்த்துக் கொள்ள வேண்டும். தினமும் குளிக்க வேண்டும்.

# பதில் !

**வேல்மாறன்**

க. நித்தியானந்தன்,
கட்டுடை.

**கே:** சிவாஜி, திலீப்குமார் இரு வருள் தலைசிறந்த நடிகர் யார்?

**ப:** மேலைநாட்டு நடிகரைக் காட்டிலும் ஒப்பற்ற நடிகராக சிவாஜி இலங்கும்போது திலீப்குமார் எம்மாத்திரம்?

யோ. மெஷியோ,
யாழ்ப்பாணம்.

**கே:** சந்திரனில் மனிதர் வசிக்க முடியுமா?

**ப:** முடியும் அண்மையில் அமெரிக்கா அனுப்பிய 'ரேஞ்சர் – 7' என்ற ரொக்கெற் சந்திரனில் அரை மைல் சமீபமாய் நின்றுகொண்டு படம்பிடித்து அனுப்பியது. அப்படத்தின் துணைகொண்டு விஞ்ஞானிமார் ஆராய்ந்து பார்த்தவிடத்து, அங்கு மனிதர் தாராளமாக வசிக்கலாம் என்று தெரிகின்றது.

செ. யோ. செச்சா செல்வராசா
யாழ்ப்பாணம்.

**கே:** 'காதல் என்பது எதுவரை கழுத்தில் தாலி விழும்வரை' என்று கூறிய கவிஞர் கண்ணதாசன், காதல் - கட்டையில் போகும்வரை யென்று பாடியிருக்கக்கூடாதா?

**ப.** கட்டையில் போகும்வரையுள்ள காதல் இன்று இல்லாததினால்தான் கவிஞர் அப்படிப் பாடிவிட்டார்.

செ. இலங்கைநாயகம்,
கொல்லங்கலட்டி.

**கே:** சந்திர மண்டலம் செல்லுதற்கு முயலும் அமெரிக்கா, ரஷ்யா புற்றுநோயை அழிப்பதற்கு முயன்றுலென்ன?

**ப:** முயலாமலல்ல. பல ஆண்டுகளாகப் புற்றுநோய் ஆராய்ச்சியில் இவ்விருநாடுகள் முயன்றும் இன்னும் நல்லதொரு பயனைக் காணவில்லை. இதற்காக மேலும் ஐரோப்பா, தென்கிழக்காசியா நாடுகள் யாவுமே பலத்த ஆராய்ச்சியில் இறங்கியுள்ளன.

மு. இரத்தினசபாபதி,
கொழும்பு.

**கே:** சினிமாப் பாடல்களில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியவர் ஆர்?

**ப:** பட்டுக்கோட்டை 'கலியாணசுந்தரனுர்'. இவர் மிக இளமையோடு காலமானவர். இவருடைய இறப்பு தமிழன்னைக்கே பேரிழப்பாகும்.

ப. ஸ்ரீபதி,
உரும்பராய்.

**கே:** 'சைப்ரஸ்' கலவரத்தைப் பற்றி சுருக்கமாகக் கூறுவீர்களா?

**ப:** இதைப்பற்றி உலகச் செய்தியில் குறிப்பிட்டுள்ளேன் - பார்க்கவும்.

இ. நிர்மலாதேவி,
கற்றன்.

**கே:** பத்துப் பாட்டென்றுல் என்ன?

**ப:** பத்துப் பாட்டென்றுல் நீண்ட செய்யுளால் ஆகிய சங்க இலக்கியங்களைக் குறிக்கும். இவை ஒவ்வொன்றும் தனித்தனி வெவ்வேறு பொருள்களைப் பயப்பன. எல்லாமாகப் பத்து நூல்கள் இவற்றுள் அடங்கும். அவை பின்வருமாறு:– திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணுற்றுப்படை, பெரும்பாணுற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி,

நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பனவாம்.

ம. தங்கராசன்,
சென்னை—10.

**கே:** காதல் எத்தன்மையது?

**ப:** மலரைவிட மெல்லியது, தெய்வீகம் நிறைந்தது, எவற்றினும் அழிக்கமுடியாத பெருஞ்சக்தி வாய்ந்தது.

பி. பீற்றர்,
சிலாபம்.

**கே:** தமிழ்த் திரையுலகில் அதிக பணம்வாங்கும் நடிகரைக் குறிப்பிடுவீர்களா?

**ப:** எம். ஜி. ஆர்., சிவாஜி இருவரைத்தான் குறிப்பிடலாம்.

க. யோன்,
வெண்ணப்புரை,

**கே:** தமிழ்ப் படங்கள் எல்லாம் வெறும் உப்பில்லாப் பண்டங்களைப் போல் ஆகிவிட்டனவே?

**ப:** அந்த அபிப்பிராயத்தை அண்மையில் வெளிவந்த 'கைகொடுத்த தெய்வம்' மாற்றிவிட்டதே.

த. சுப்பிரமணியம்,
வண்ணார்பண்ணை.

**கே:** கலைவாணியின் முக்கிய நோக்கம் என்ன?

**ப:** தமிழ் இலக்கியம்–கலை–பண்பாடு மூன்றையும் உலகெங்கும் பரப்புதலாகும்.

சி. சுந்தரேசன்,
திருநெல்வேலி,

**கே:** சீதனத்தை ஒழிக்க முடியுமா?

**ப:** ஆடவர் பிறருடைய கையிருப்பை எதிர்பார்க்காத ஆண்மையுள்ளவராகவும், மகளிர் தன் கையே தனக்குதவியாக வாழும் ஆடவரைத் திருமணம் புரிய முன்வருபவர்களாகவும் இருப்பின் சீதனத்தை ஒழிக்க வேண்டியதில்லை. அது தானே ஒழிந்துவிடும்.

தா. விவேகானந்தன்,
கந்தர்மடம்,

**கே:** நான் கவிஞனாக வேண்டும். யாப்பிலக்கணம் சொல்லித் தருவீர்களா?

**ப:** யாப்பிலக்கணம் படித்துக் கவிஞனாகலாம் என்ற எண்ணத்தை அடியோடு விட்டுவிடும். முதலில் அழகுணர்ச்சியை உம்மிடத்தே வளர்த்துக்கொள்ளும். அவ்வுணர்ச்சி நாளாந்தம் மேலோங்க உம்முடைய அந்தர ஆத்மாவில் ஏதோ ஒருவகை உணர்வு உம்மை எழுதும்படி தூண்டும், உடனே எழுதும். அவ்வெழுத்துக் கருவூலங்கள் முதலில் கட்டுக் கோப்புக் கலைந்ததாக இருக்கலாம். அதற்காகச் சோர்ந்து விடலாகாது. தொடர்ந்து எழுதுவதை நீர் பழக்கமாகக் கொள்ள வேண்டும். அப்பழக்கமே நாளடைவில் உங்களை ஓர் மாபெரும் கவிஞனாக ஆக்கிவிடும். அப்புறம் தற்பாதுகாப்புக்காக யாப்பிலக்கணத்தைப் படிக்க முற்படுங்கள். அச்சமயம் என்னாலான ஒத்துழைப்பைத் தருவேன்.

ந. ஸ்ரீரங்கன்,
மட்டக்களப்பு.

**கே:** இந்திய எல்லையில் சீனத் துருப்புக்கள் குறைந்துவிட்டதாமே?

**ப:** அங்கொன்றும் குறையவில்லை. தருணம் எப்போது வருமெனப் பதுங்கியிருக்கிறார்களாம்.

நா. சிங்காரவேலன்,
மதுரை.

**கே:** தனித்தமிழை வளர்த்த பெருமை யாருக்கு உரியது?

ப: உயர்திரு மறைமலை யடிகளாருக்கே உரியது.

க. ரங்கசாமி,
கொழும்பு-2.

**கே:** 'காதலிக்க நேரமில்லை' யைப் பற்றி தங்களின் அபிப்பிராயம்?

ப: படமோ வெறுங் கோமாளிக் கூத்து. அதைப் பார்க்கிற நாமோ அதைவிடக் கோமாளிகள். முற்றிலும் கோமாளி — கோமாளி — கோமாளி.

வி. பார்த்தசாரதி,
திருச்செந்தூர்.

**கே:** விரைவில் மூன்றாவது உலகப்போர் மூண்டுவிடுமா?

ப: சைப்ரஸ் - வியட்நாம் கலவரங்களைப் பார்க்குமிடத்து உலகப் போருக்குரிய அறிகுறிகளே தென்படுகின்றன. ஐ. நா. துருப்புகள் சைப்ரசுக்குப் பாதுகாப்பு அளித்த போதும் துருக்கியின் வேவு விமானங்கள் இடையிடையே சைப்ரஸ் எல்லையில் தலைகாட்டியே வருகின்றன. சைப்ரசின் பெரும்பான்மையான கிரேக்கர் சிறுபான்மையான துருக்கியருக்கு எல்லா விதத்திலும் சமஉரிமையான வாய்ப்பினைக் காட்டி ஆட்சிபீடத்தை நடத்துவார்களானால் நிலைமை ஓரளவு தணியலாம். சைப்ரஸ் கலவரந் தணிந்தாலும் வடவியட்நாம் கலவரம் இப்போதைக்குத் தணியாது. என்றோ ஒருநாள் பூகம்பம்போல் வெடித்து உலகப் போரை உண்டாக்கி விட்டுத்தான் தணியும் போலிருக்கிறது.

எ. ரெத்தினம்,
திருக்கோணமலை.

**கே:** அமெரிக்காவின் 7-ம் கடற்படையின் பிரமாண்டமென்ன?

ப: உலகத்திலேயே முதன்மை வாய்ந்த கடற்படையென்றால் அமெரிக்காவின் 7-ம் கடற்படையைத்தான் கூறலாம். அக்கடற்படை, பல யுத்தக்கப்பல்கள்—எண்ணற்ற நீர்மூழ்கிகள் - விமானந் தாங்கிகள் குண்டு வீசும் விமானங்கள்—ஆயிரக்கணக்கான போர்வீரர்கள் அடங்கியதாகும்.

வி. பிரான்சிஸ்,
ஊர்காவற்றுறை.

**கே:** கூட்டரசாங்கத்தால் இலங்கைக்கு விமோசனம் உண்டா?

ப: உண்டா — இல்லையா என்பதை இனிமேல்தான் கண்டறியலாம்.

வ. யோகமணி,
யாழ்ப்பாணம்.

**கே:** சங்க இலக்கிய காலத்தைப் பலரும் பலவிதமாகக் கூறுகின்றார்களே உங்களுடைய அபிப்பிராயம் என்ன?

ப: பத்துப்பாட்டு எட்டுத் தொகை நூல்களின் பண்பியல்புகளை ஆராய்ந்து பார்க்குமிடத்து (கடைச்) சங்ககாலம் கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. மூன்றாம் நூற்றாண்டு வரையெனக் கொள்ளலாம்.

தோப்பூர், க. வீரகத்திப்பிள்ளை,
காரைநகர்.

**கே:** வாழ்வுக்கு உயர்வு தருவது அறிவுடைமையா பொருளுடைமையா?

ப: அறிவுடைமைதான்; "அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார் என்னுடைய ரேனும் இலர்".

இ. ஞானசோதி,
யாழ்ப்பாணம்.

**கே:** நம் தமிழ் அறிஞருள் அதிக மொழி தெரிந்தவர் யார்?

**ப:** பன்மொழிப் புலவர் அப்பாத்துரை அவர்களைத்தான் குறிப்பிடலாம்.

சேகரன்,
திருகோணமலை.

**கே:** எனக்கு அடிக்கடி கண் நோய் ஏற்படுகின்றது. இதனால் படிக்கவோ முடியவில்லை. இந்நோயை மாற்றுவதெப்படி?

ப: நீர் வசிக்கின்ற திருமலை மிகவும் வெப்பமான நிலமாய் இருப்பதும் இந்நோய்க்கு முக்கிய காரணமெனலாம். தினமும் செம்பரத்தம் இலைச்சாற்றை உச்சியில் தேய்த்துக் குளிக்கவேண்டும். நிறையப் பழவகைகளை உணவுடன் சேர்த்துக்கொண்டு உறைப்புப் பண்டங்களை அடியோடு விட்டுவிட வேண்டும். அத்தோடு 'நந்தியாவட்டைப்' பூவின் சாற்றைப் படுக்கைக்கு முந்தியும், காலையிலும் மாலையிலும் ஒரு நாளைக்கு மூன்று விசையாகில் கண் குழிகளில் விட்டு ஒற்ற வேண்டும். இவற்றை ஒரு வாரத்துக்கு மேற்கொண்டு வருவீரானால் பலன் முற்றாகத் தெரிந்துவிடும்.

வி. கிருஷ்ணன்,
மருதானை.

**கே:** கண்ணுக்கு இமை காவல்—பெண்ணுக்கு எது காவல்?

**ப:** பெண்ணுக்குப் பெண்மை தான் காவல்.

ந. வேலப்பன்,
கோயம்புத்தூர்.

**கே:** மாணிக்கவாசகர் திருஞானசம்பந்தருக்கு பிற்பட்டவரா-முற்பட்டவரா?

**ப:** இருவருடைய பாடல்களின் பொதுமைப் பண்புகளையும்—சொல்லமைப்பு வழக்குகளையும் - பொருட்பண்புகளையும்—ஆராய்ந்து பார்க்குமிடத்து மாணிக்கவாசகர் திருஞானசம்பந்தருக்குப் பிற்பட்டவராகவே விளங்குகின்றார்.

ம. கனகரத்தினம்,
கண்டி.

**கே:** தமிழ் உலகில் சிறுகதைக்குப் பெரும் வித்திட்ட பெருமை யாருக்குரியது.

**ப:** அப்பெருமை புதுமைப் பித்தனுக்கே உரியது.

எ. இராமசாமி,
அனுராதபுரம்.

**கே:** புதிய பறவையில் நூறு இசைக்கருவிகளுடன் ஒரு பாடலை அமைத்திருக்கிறார்களாமே?

**ப:** சினிமா உலகில் பாடல் எழுதக் கவிஞர் கண்ணதாசனும் இசையமைக்க இரட்டையரும் இருக்கும் போது நூறென்ன இனிமேல் இருநூறு முந்நூறு இசைக்கருவிகள்கூட பாடலில் இடம்பெறும்.

எ. தியாகராசன்,
யாழ்ப்பாணம்.

**கே:** உங்கள் இதழிலே ஆங்கிலக் கட்டுரை இடம்பெறுவதின் நோக்கமென்ன?

**ப:** தமிழ்ப் பண்பாடை உலக மக்கள் யாவரும் அறியவேண்டும் என்பதற்காக ஆங்கிலக் கட்டுரையையும் நம் இதழிலே இடம்பெற வைத்துள்ளோம்.

சோ. வீரபாண்டியன்,
பதுளை.

**கே:** நான் ஒரு சிறுகதை எழுதியுள்ளேன். அனுப்பினால் பிரசுரிப்பீர்களா?

**ப:** முதலில் சிறுகதையை அனுப்பி வையும். பின்பு அதை நாம் படித்து நன்றெனக் கண்டால் பிரசுரிப்போம்.

ப. கந்தசாமி,
இரத்தினபுரி.

**கே:** இலங்கையின் சிறுகதை வளர்ச்சி எந்த நிலையில் இருக்கின்றது?

**ப:** இன்னும் ஆரம்ப நிலையில் தான் இருக்கின்றது. அதில் ஒரு சிலர் சிறந்த சிறுகதை மன்னர்களாக ஒளிவிட்டுப் பிரகாசிக்கத் தான் செய்கின்றார்கள்.

கு. சம்பந்தன்,
காலி.

**கே:** நிலையுள்ள வாழ்வு எப்பொழுது தொடங்குகிறது?

**ப:** நிலையற்ற வாழ்வு முடிந்த பின்.

வே. முருகையன்,
காஞ்சிபுரம்.

**கே:** கலைவாணி எத்தனை ஆண்டுகள் வாழ்வாள்?

**ப:** அவளின் வாழ்வுக்கு ஆண்டுக் கணக்கு ஏது? அவள் என்றும் வாழ்வாள் — எங்கும் வாழ்வாள்.

ஆ. சரோஜா,
கொழும்பு.

**கே:** சுவைக்கச் சுவைக்கச் சுவை கெடாதது எது?

**ப:** தமிழ்!

# கேளுங்கள்

**கலைவாணி அன்பர்களே!**

சிறந்த கேள்விகளை எம்மிடம் கேளுங்கள். அவற்றுக்குத் தகுந்த பதில்களை நாம் அளிப்போம். கேள்வி அனுப்புவோர் தம்பெயரையும் முகவரியையும் முக்கியமாகக் குறிப்பிட்டு தபால் அட்டையிலேயே அனுப்பவேண்டும்.

**சிறந்த கேள்விகளைக்**
கேட்போருக்கு இலவசமாக
**எம் 'கலைவாணி'**
இதழொன்றை
அனுப்பி வைப்போம்.

முகவரி :
**கேள்விப் பகுதி**
**ஆசிரியர்,**
**'கலைவாணி',**
10, *பிரதான வீதி,*
**யாழ்ப்பாணம்.**

# கவிதைப் பூங்கா

## வந்திருந்தாள் ஏனே?

வைகறையில் நீர்தெளித்துக் கோலமிட வந்தஇவள்
செய்கைமறந் தேதிகைத்த தென்ன? நான்
தெருவினில் சென்றால் இவளுக் கென்ன?

கொல்லைவழி போகையிலே கோடியிலே மீண்டளை
வல்லியவள் ஏன்திரும்பிப் பார்த்தாள்? உடன்
முல்லைநகை ஏன்விரும்பிச் சேர்த்தாள்?

நீர்த்துறைக்குப் போவதற்கு நேர்வழியொன் றிருக்கையிலே
வேர்க்களைப் பார்த்துவிட்டுச் செல்ல — என்
வீட்டுவழி ஏன்வருவாள் மெல்ல?

இடுப்பதனில் சிறுகுடத்தை ஏந்தியவள் செல்லுகையில்
''சடக்''கெனவே குடந்தவற விட்டாள் — எதிர்
சார்ந்தனை ஏன்விழியால் சுட்டாள்?

தோழியரோ டாடுவதும் துடுக்குடனே பேசுவதும்
சூழமெனைக் கண்டதுமேன் மறையும்? உடன்
செக்கர்நிறம் ஏன்முகத்தே நிறையும்?

மாலையிலே யான்வருமோர் வேளையிலே நூறுமுறை
வேலையின்றி வாயிலுக்கேன் வருவாள் — நான்
வேண்டுமென்று புன்னகையைத் தருவாள்?

மாளிகைபோல் வீடிருக்க மங்கையவள் மாலைகட்டச்
சாளரத்தின் பக்கம் வரல் எதற்கோ? — என்னைச்
சந்திக்கும் ஆசைதெரி வதற்கோ?

கோட்டையிலே புதுமைவிழா பார்த்துநின்ற கூட்டத்திலே
வாட்டமுடன் யாரைத்தேடி நின்றாள்? — நான்
வந்திருப்பேன் எனநினைத்தோ சென்றாள்?

யாருமிலா நேரத்திலே சோலையிலே வந்தளை
நேருக்குநேர் பார்த்துவிடத் தானே — அந்த
நீள்விழியாள் வந்திருந்தாள் ஏனே?

— ஏ. வர்ணன்

# சாளரமே சற்றே திற!

நாளும் அவள்முகத்தை நான்காணச்
செய்கின்ற
சாளரமே! சற்றே திறப்பாய்!
தமிழனைய
வாள்விழியைக் காண விழைகின்றேன்!
வாய்த்தஇரு
தோள்அழகும் பார்க்கத் துடிக்கின்றேன்!
இன்பத்தைத்
தேக்கி இருக்கும் திருவிழியின்
காட்சியையும்
நோக்கிக் களிக்க விழைகின்றேன்!
நுண்செவிக்கு
வள்ளையோ? கத்தரியோ? வாய்த்த
உவமையெனும்
உள்ள நிலையும் உணர
நினைக்கின்றேன்!
பட்டுநிகர் கன்னத்தைத் தொட்டு
நடனமிடும்
துட்டமனக் கேசமுமே காணத்
துடிக்கின்றேன்!
மெல்லத் திறப்பாயே! இல்லையெனிற்
காற்றினிடம்
சொல்லித் திறப்பேன் துணிந்து.

— புலவர் ம. பார்வதிநாதசிவம்



# துணை

"திமிலைத்துமிலன்"

முற்றும் அறியாப் பருவத்திலே—எனை
முத்தமிட் டேஎழிற் கன்னத்திலே—உன்றன்
சிற்றிதழ் வைத்துச் சிரிப்பாயடி—கட்டிச்
சேர்த்திட வந்தால் துடிப்பாயடி—உன்னை
மற்றவர் கண்டு களிக்கவில்லை—உன்றன்
மாம்பழக் கன்னஞ் சுவைக்கவில்லை—வெறும்
புற்றரை மீதுப டர்ந்திருப்பாய்—நெஞ்சிற்
போதையை ஏற்றக் கிடந்திருப்பாய்.

நீலச்சிற் றுடைபு னைந்திருப்பாய்—என்றன்
நெஞ்சினி லெங்கும் நிறைந்திருப்பாய்—பசும்
பாலைப் பழித்த குயிற்குரலில்—என்னைப்
பாரடா "என்று படுத்திருப்பாய்"—"அடி
கோலச் சுடர்விழி" என்றணைத்தால்—கரம்
கொண்டு விழிகளை நீமறைப்பாய்—அந்த
வேலையி லென்னை மறந்திருப்பேன்—என்னை
விட்டொரு திக்கில்நீ சென்றிருப்பாய்.

தென்னையில் தென்றல் சிலுசிலுக்கும்—நிலாத்
தேரதும் வானில் மிதந்திருக்கும்—அதில்
என்னைமறந்து படுத்திருப்பேன்—அந்த
எண்ணத்தில் உன்னைத் தொடுத்திருப்பேன்—ஒரு
மின்னலாய் வந்து விழுந்துவைப்பாய்—என்றன்
மேனியில் பூப்போல் குழைந்திருப்பாய்—உடற்
பொன்னிலே முத்தம் பொழிந்துவைப்பேன்—கன்னப்
பூக்களின் மீதும் சொரிந்துவைப்பேன்.

என்னை விலக்கத் திமிறிநிற்பாய்—அணைப்
பென்னும் தடுப்பில் குமுறிநிற்பாய்—விழி
மின்னலில் கண்ணீர் சுரந்துவரும்—உடன்
விம்மலும் நெஞ்சிற் கலந்துவரும்—எனின்

உன்னை விலக்கிட நான்தரியேன்—இதழ்
ஊற்றை நுகர்ந்து முணர்ந்தறியேன்—அடி
என்னைத் தடுக்க எவருமில்லை!—இந்த
இன்பத்துக் கெல்லை எதுவுமில்லை!

விட்டதும் சிட்டாய்ப் பறந்து விட்டாய்—ஒரே
வெட்கத்தில் என்னைத் துறந்துவிட்டாய்—ஈன
விட்டிலாய்த் தீயில் விழுந்திருந்தேன்—உன்றன்
வேட்கையில் நீருய்ப் பொடிந்திருந்தேன்—வெறும்
பொட்டலில் மேகம் பொழிந்ததுபோல்—அல்லிப்
பூவில் நிலவொளி பட்டதுபோல்—இன்று
கட்டெழில் நாணிக் கவிழ்தல்கண்டேன்—மீண்டும்
கண்வரப் பெற்றவனுய் நிமிர்ந்தேன்.

தெரியாத் தனத்தில் நடத்திவிட்டேன்—உனைச்
சின்ன வயதில் வருத்திவிட்டேன்—அந்தப்
புரியாத போக்கை மறந்திடடி—எனப்
போற்றிநின்றேன் நாணம் பூக்கநின்ருய்—வெறும்
கரியாக என்னைக் கிடக்கவிடாய்—முழுக்
காலமும் ஒன்ருய்க் கலந்திருப்பாய்—எனக்
குரிய கனியே! நிதிக் குவையே!—இன்ப
ஊற்றெனும் காதற் கொருபொருளே!

கண்ணெளி என்னைத் தொடுவதிலே—காதற்
காவியம் கோடி பிறக்குதடி—உன்றன்
வண்ண வளைக்கரம் சேர்க்கையிலே—இந்த
வாழ்க்கையின் சொர்க்கம் வளருதடி—உன்றன்
தண்ணளி மிஞ்சிய காவலிலே—சோர்பு
தானே விலகி நடக்குதடி—உன்றன்
புன்னகை ஊட்டிய போதையிலே—பகை
போக்கிட மின்றிப் புகையுதடி.

முன்னைப் பழம்பொரு ளாயிருந்தேன்—அதில்
மோகன வித்தென நீயிருந்தாய்—வரும்
பின்னைப் புதுமையாய் நானிருந்தேன்—அதில்
பேசும் கலையென நீயிருந்தாய்—நீல
வண்ணக் கடலென நானிருந்தேன்—பெய்யும்
வான மழையென நீயிருந்தாய்—இன்பக்
கன்னல் அமுதென நிற்பவளே!—என்றன்
காதற்குகந்த கவிமகளே!

# துப்பாக்கி முனையில்

இரண்டாம் மகா யுத்த காலமது. உலக நாடுகள் அனைத்தும் அல்லோலகல்லோலப் பட்ட வேளையது. நாடு அமைதி இழந்து நலிவுற்றிருந்த காலமும் அது.

இலங்கை ஆங்கிலேயரின் ஆட்சியில் இருந்தது. ஆங்கிலேயரின் ஆட்சியில் இலங்கைத் தமிழர் பலர் அரசாங்கத்தின் பொறுப்புள்ள வேலைகள் செய்ய நியமிக்கப்பட்டிருந்தனர். அந்நேரத்தில் நான் இலங்கைப் படையின் பிரதம அதிகாரிகளில் ஒருவனாகக் கடமையாற்றிக் கொண்டிருந்தேன்.

எங்கள் உயிர் எந்த நேரமும் மரணத்துடன் போராடக் காத்திருந்தது.

இப்படி இருக்கும் சமயத்தில் ஒரு நாள் போர் அலுவல்களைக் கவனிப்பதில் கண்ணும் கருத்துமாய்க் காரியாலயத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். அந்தி சாயும் நேரத்தில் எனது அறைக் கதவு தட்டப்பட்டது. வேலை மும்முரத்தில் நான் எழுந்து சென்று கதவைத் திறக்கச் சுணங்கவே கதவு திடீரெனத் திறக்கப்பட்டது. திரும்பிப் பார்த்தேன். அங்கே......

படைத் தளபதி ஜெனரல் வின்சன் அவர்கள் நின்று கொண்டிருந்தார். அவரை நான் எழுந்து சென்று வரவேற்கு முன்னரே அவர் என்னண்டையில் வந்து "ராஜ்! உடனே புறப்படும். அவசர வேலை ஒன்று காத்திருக்கிறது. இன்னும் அரை மணி நேரத்தில் ஒரு இடத்தை அடைய வேண்டும். சீக்கிரம் புறப்படும்!" என்று என்னை அவர் அதட்டவில்லை; அவசரப்படுத்தினார்.

தளபதியின் அவசரத்தை அவதானித்த நானும் செய்த வேலைகளை அரைகுறையாக விட்டு விட்டுப் புறப்பட்டுவிட்டேன்.

தளபதி தனது காரில் ஏறி உட்கார்ந்ததும் என்னைத் தனது அருகே அமர்த்திக் கொண்டார். கார் புறப்பட்டது.

கார் பிரதான வீதிகளைக் கடந்து கொண்டிருந்தது. காரின் வேகமும் காற்றின் வேகமும் போட்டி போடக் கார் பறந்து சென்று கொண்டிருந்தது. இடையிடையே நேரத்தைப் பார்த்த வண்ணம் தளபதி காரை விரைவாகச் செலுத்திக் கொண்டிருந்தார்.

ஈற்றில் நகரத்தைக் கடந்து காட்டுப் பாதையில் கார் சென்று கொண்டிருந்தது. பல மைல்கள் கடந்ததும் தளபதி காரை நிறுத்தினார். என்னை இறங்கி நிற்கும்படி கூறினார். நான் இறங்கி நின்றதும் கார் புறப்பட்டது. எங்கே? மறைவிடத்தைத் தேடி.

**இ. டோறஸ்**

காரை மறைவிடத்தில் விட்ட பின் தளபதி என் அருகே வந்தார்.

எனக்கோ எல்லாம் புதிராகவே இருந்தது, ஆனுல் ஏதோ முக்கிய நிகழ்ச்சி நிகழவிருக்கிறது என்பதை மட்டும் ஊகித்துக்கொண்டேன்.

என்னருகே வந்த தளபதி என்னிடம் ஒன்றும் கூருமல் என் கையில் ஒரு துப்பாக்கியைக் கொடுத்தார். எனக்கு இப்போது எல்லாம் புரிந்த புதிராகவே இருந்தது. ஆனுல் இது உங்களுக்குப் புரியாத புதிர்தானே. (யுத்த காலமாய் இருந்தமையினுல் விசேட விபரங்களை வெள்ளையர்கள் வேறு ஆட்களுக்கு வெளிக்காட்டவே மாட்டார்கள்.)

என்னை அழைத்துக்கொண்டு காட்டு மரங்களினூடே தளபதி சென்ருர். ஈற்றில் ஒரு ஒற்றையடிப் பாதை குறுக்கே வந்தது.

அப்பாதையை அடைந்ததும் தளபதி எதையோ நினைத்துக் கொண்டவராய் நின்றுவிட்டார். மீண்டும் சொற்ப தூரம் நடந்து சென்றதும் என்னை நிறுத்தினுர். பின் ஒரு மறைவிடத்தில் மறைந்து நிற்க இடம் பார்த்துவிட்டு என்னையும் அழைத்துச் சென்ருர்.

மறைந்து நின்ருேம். அங்கே......

சுமார் அரை மணி நேரம் சென்றுவிட்டது, ஒரு நிகழ்ச்சியும் நிகழவில்லை. காரில் ஏறியது தொடக்கம் இதுவரை எதுவித முக்கிய பேச்சும் நிகழவில்லை.

மாலை நேரம் போய் இருள் கவியத் தொடங்கிற்று. இன்னும் சற்று நேரத்தில் சந்திரனும் பவனி வரத் தொடங்கிவிடுவான். அப்போது...... சரியாக ஏழு மணி.

சற்று நேரத்தின் பின் தூரத்தில் ஏதோ ஓசை திடீரெனக் கேட்டது.

அவ்வோசையைக் கேட்டதும் தளபதி உசார் ஆகிவிட்டார். அந்த ஒற்றையடிப் பாதையில் வெகு தூரத்தில்......

இரண்டு உருவங்கள் அசைந்தாடிக்கொண்டு நாம் இருந்த திசையை நோக்கி வந்து கொண்டிருந்தன. யார் அந்த உருவங்கள்? பேயா பிசாசா? இல்லை; இரண்டும் மனித உருவங்களே. ஜன சஞ்சாரமே இல்லாத இந்தக் காட்டில் இந்த நேரத்தில் இவர்கள் வரக் காரணம்? புரியவில்லை. பொறுத்திருந்து பார்ப்போம்.

அந்த மனித உருவங்கள் சமீபத்தில் வந்துகொண்டிருந்தன. தளபதி துப்பாக்கியைத் தயாராக வைத்திருக்கும்படி கூறினுர். நான் எதற்கும் தயாரானேன்.

தூரத்தில் வந்த இருவரும் எங்களைக் கடந்து சொற்ப தூரம் சென்றனர். ஒரு மரத்தின் கீழே சென்ற இருவரும் திடீரென மறைந்துவிட்டனர்.

எங்கே மறைந்தனர்? மாய மனிதர்களா இவர்கள்? தளபதியின் முகத்தில் ஒருவித மாற்றமும் ஏற்படவில்லை. ஆனுல் எனக்கோ திகைப்பாகவே இருந்தது.

நேரம் சென்று கொண்டே இருந்தது. சுமார் அரை மணித்தியாலத்தின் பின் மறைந்த மனிதர்கள் இருவரும் திடீரென மரத்தின் கீழே தோன்றினர். அவர்

கள் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவம் ஆட- வந்த வழியே திரும்பிச் சென்றுவிட்டனர்.

என்னை மறைவிடத்திலேயே நிறுத்திவிட்டு அம்மனிதர்கள் மறைந்து தோன்றிய மரத்தருகே சென்று சொற்பநேரம் ஆராய்ச்சி செய்தார். அங்கே ஏதேதோ செய்துவிட்டுத் திரும்பி வந்து என்னை அழைத்துக்கொண்டு புறப்பட்டார். காரில் ஏறியதும் கார் வேகமாகப் புறப்பட்டது.

* * *

இந்நிகழ்ச்சி நடந்து ஒரு வாரம் சென்றுவிட்டது. அந்த வாரத்திலேதான் கொழும்பில் யப்பானியர் குண்டு போட்டு நாட்டு மக்களைத் திகில் கொள்ளச் செய்தனர்.

எங்களுக்கு ஓயாத வேலை. நாட்டின் பாதுகாப்பிற்காகத் துரித கெதியில் வேலை செய்யவேண்டியிருந்ததால் இளைப்பாற்றியோ கிடைப்பது அரிதாயிருந்தது.

ஒரு நாள் சாயந்தரம் 6-30 மணியளவில் மீண்டும் தளபதி அவர்கள் என்னை அழைத்துக்கொண்டு அதே இடத்தை நோக்கிப் புறப்பட்டார்.

சரியாக 7-00 மணிக்கு நாங்கள் சென்ற தடவை காரை மறைத்து வைத்த அதே இடத்தில் காரை விட்டுவிட்டு — நாம் மறைந்து நின்ற அதே இடத்தில் ஒளிந்து இருந்தோம்.

"ராஜ், துப்பாக்கியைத் தயாராக வைத்திரும்" என்றார் தளபதி. நானும் தலையை ஆட்டிவிட்டு எதற்கும் தயாரானேன்.

## கடலுக்கு அடியில் மண் எண்ணெய் ஊற்று

**தமிழ் நாட்டில் காவிரியாறு கடலோடு கலக்கும் பகுதியில் மண் எண்ணெய்ப் படிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதனால் கடலுக்கு அடியில் மண் எண்ணெய்ப் படிவங்கள் இருக்கலாமெனக் கருதி நிபுணர் பலர் கடற் பகுதிகளை ஆராயத் தலைப்பட்டனர். இது விசயமாக ரஷியாவைச் சேர்ந்த 'அகடமிக் ஆரக்கங் கெல்கி' என்னும் கப்பல் தமிழ் நாட்டுப் பகுதியில் வந்துள்ளது. மாலுமிகளும் நிபுணர்களும் மொத்தம் 60 பேர் இக்கப்பலில் இருக்கிறார்கள். தொடர்ந்து நிபுணர்கள் தமிழ்நாட்டில் நாகபட்டினம் – சதுரங்கப்பட்டினத்துக்கிடையேயுள்ள கடற்பரப்பின் அடியை ஆராய்கின்றனர்.**

எங்கும் மௌனமே நிலவிற்று. சமார் அரை மணி நேரம் சென்றுவிட்டது. எதுவித நிகழ்ச்சியும் நிகழவில்லை.

அப்போது சரியாக 7-30 மணி இருக்கும். திடீரென ஒரு தொனி கேட்டது. ஆம்; தொனிதான். அதே தொனி. நாம் சென்ற தடவை கேட்ட அதே தொனிதான்.

தொனி காதில் கேட்டதுதான் தாமதம். தளபதி என்னைத் தட்டிக் கொடுத்தார். பின் "ராஜ்! துப்பாக்கியிலிருந்து குண்டு பாய்வதைப்

போல் புறப்படத் தயாராக இரும். சுடுவதற்கும் சூழ்நிலை ஏற்படலாம். எனவே எதற்கும் தயாராக இரும் என்ருர்.

"எதற்கும் தயாராக இரு" என்பது சாரணச் சிறுவர்களின் விருது வாக்கியமல்லவா? அவ்விருது வாக்கைப் பின்பற்றும் முன்னை நாள் சாரணனுயிருந்தமையினுல் அவ்வாக்கியம் எனக்குப் புதிய தென்பையும் துணிவையும் ஏற்படுத்திற்று. நான் சரியென்று சொல்லிவிட்டு அதனைச் செயல்படுத்தவும் தயாரானேன்.

அந்த ஒற்றையடிப் பாதையை நோக்கி எமது பார்வையைச் செலுத்திப் பார்த்தோம். அப்பாதையில்......

சென்ற தடவை வந்த அதே மனிதர்கள் வந்து கொண்டிருந்தார்கள். சென்ற தடவை அவர்கள் மறைந்து தோன்றிய அதே மரத்தண்டை சென்றனர் இருவரும். அங்கே......

அவர்களைக் காணவில்லை. மறைந்துவிட்டனர் அம்மாய மனிதர்கள்.

அவர்கள் மறைந்ததும் தளபதி அம்மரத்தண்டை விரைந்து சென்ருர். நானும் அவரைப் பின்தொடர்ந்து சென்றேன். காலில் றபர் சப்பாத்து அணிந்திருந்தமையினுல் எதுவித ஓசையும் கேட்காதவாறு தளபதியுடன் விரைந்து சென்றேன்.

மரத்தை அடைந்ததும் தளபதி ரிவால்வரினுல் ஆகாயத்தை நோக்கிச் சுட்டார். பின் மரத்தின் மேலே பார்த்து "துரோகிகளே! நகராதீர்கள்; நகர்ந்தால் பிணமாவீர்கள்" என்ருர். பின் என்னைப் பார்த்து "ராஜ்! துப்பாக்கியைத் தயாராக வைத்துக்கொள். அப்படி இப்படி நகர்ந்தால் சுட்டுத்தள்ளு" என்ருர்.

தளபதியின் ஆணையை ஏற்றுக்கொண்டு செயல்படுத்த ஆயத்தமானேன்.

தளபதி மீண்டும் அவர்களை நோக்கி "இறங்குங்கள் கீழே!" என்ருர். அவரது தொனி அஞ்சாத என்னையே கிடுகிடுக்க வைத்ததென்ருல், அவர்கள் எப்பாடு பட்டிருப்பார்களோ யார் அறிவர். அவர்கள்......

அவர்களோ! திகிலும், திகைப்பும், பயமும் பீதியும் முகத்தில் மரணக்களை தோன்ற மரத்தினின்று இறங்கினர்.

தளபதி அவர்கள் பைகளைச் சோதனை செய்தார். அவர்களிடமிருந்த பொருட்களைப் பறிமுதல் செய்தார். அவற்றுள் இரு ரிவால்வர்களும், சில கடிதங்களும் தளபதியின் கவனத்தைக் கவர்ந்தன. மின்பொறி விளக்கின் உதவியினுல் அக்கடிதங்களைப் பார்வையிட்டுப் பத்திரப்படுத்திவிட்டு துப்பாக்கி முனையில் அவர்களுக்கு விலங்கிட்டார். அவர்களைக் கவனித்துக் கொள்ளும்படி எனது துப்பாக்கி முனையில் அவர்களைவிட்டு விட்டு மரத்தில் ஏறினுர்.

மின்பொறியின் உதவியுடன் மரத்தில் ஏறிய அவர் பதினைந்து நிமிடத்தின் பின் சில பச்சை நிறக் கயிறுகளுடனும் ஒரு சிறு பெட்டியுடனும் இறங்கினுர். அப்பொருட்களைக் கண்டதும் வியப்பு ஏற்பட்டது. ஏனென்ருல் அந்தப் பெட்டி யுத்த அலுவலகங்களில்தான்

பாவிக்கப்படும். எங்கள் வசம் இருந்த இயந்திரப் பெட்டிக்கும் இப்பெட்டிக்கும் சில வேறுபாடுகள் இருந்தன. அவற்றை ஆராய வேண்டுமென என் மனம் துடித்தது. ஆனல் துப்பாக்கி முனையில் இருவர் இருந்தமை இதற்கு இடற லாய் இருந்தது.

கடமையில் கண்ணுங் கருத்துமாய் இருப்பதில் கைதேர்ந்த நான் கடமையே பெரிதென மதித்து ஆராய்ச்சியில் இறங்க மனதைச் செலுத்தவில்லை.

தளபதி அருகே வந்தார். வந்ததும் பொருட்களை ஒன்று சேர்த்துக் கட்டினர். பின் அம்மனிதர்களை நோக்கினர்.

சில கேள்விகளைக் கேட்டார். அவர்கள் வாயிலிருந்து பதில் கிடைப்பதோ அரிதாகவிருந்தது. பலவித மிரட்டல்களுக்குப் பின் அவர்கள், யப்பானியர்களின் கைக்கூலிகள் என்பதை மட்டுமே தெரிந்து கொண்டோம். வேறு ஒரு விபரமும் கிடைக்காமையினல் கோபங்கொண்ட தளபதி அவர்களைக் காரில் துப்பாக்கி முனையில் வைத்திருக்கும்படி கூறினர்.

துப்பாக்கி முனையில் அவர்களை இட்டுச் சென்று காரில் ஏற்றினேன். இதற்கிடையில் மரத்தருகே தென்பட்ட கொடித் தண்டுகளை அறுத்தெறிந்துவிட்டு பாதுகாத்த பொருட்களுடன் காரில் தளபதி ஏறினர். கார் புறப்பட்டது.

* * *

காரின் வேகம் வரவரக் கூடியது. நாங்கள் வந்த வழியைவிட்டுக் கார் கடலோரப் பாதையிற் சென்று கொண்டிருந்தது.

மக்கள் நடமாட்டம் இல்லாத கடலோரத்தில் காரை நிறுத்தினர் தளபதி.

துப்பாக்கி முனையிலிருந்த கைதிகளைக் கீழே இறங்கும்படி ஏவினர் தளபதி.

அக்கைதிகள் பேசாது இறங்கினர். இறங்கியதும், அவர்களைச் சற்றுத்தூரத்திற்கு அழைத்துச் செல்லும்படி கூறினர். நானும் அவர்களை இட்டுச்சென்றேன்.

சொற்ப தூரம் சென்றதும் அவர்களை நிறுத்தும்படி கூறிவிட்டு மீண்டும் சில கேள்விகளை அவர்களிடம் கேட்டார்.

பதில் இல்லை. பின் அவர்களின் கால்களைக் கயிறுகளால் பிணித்தார். முரடன்போல் தோன்றிய ஒருவனை மீண்டும் தளபதி அதட்டிப் பார்த்தார்.

அவன் அசைந்து கொடுக்கவில்லை. அவனைச் சற்றுத்தூரம் அழைத்துச்சென்று நிறுத்திவிட்டு மீண்டும் அதட்டினர் முடியவில்லை.

அவனை நிறுத்திவிட்டுக் கார் அருகே சென்று ஒரு பெட்ரோல் பேணியுடன் எண்ணெய் கொண்டு வந்து அந்த முரடன்மேல் ஊற்றியதும், அவன் மேல் நெருப்பைக் கொளுத்திவிட்டார்.

அவன் துடித்தான், துவண்டான், கத்தினன், கதறினன், ஈற்றில் உயிரற்ற பிணமானன். அக்காட்சியைக் காண என்னல் சகிக்க முடியவில்லை. முகத்தைத் திருப்பிக் கொண்டேன்.

பின் தளபதி மற்ற மனிதன் அருகே வந்தார். விலங்கு பூட்டிய கைகளுடனும், கயிறுகட்டிய கால்

களுடனும், முகத்தை வேறு திசையில் செலுத்திய வண்ணம் நின்ருன் அவன்.

தளபதி அதட்டலுடனும் மிரட்டலுடனும் அவனருகே வந்து அவனையும் அதட்டிப் பார்த்தார். அதற்கு அடிபணியவில்லை அவன்.

அவனின் மேலும் பெட்ரோல் ஊற்றி நெருப்பு வைத்துவிட்டார். அவனும் முதல் இறந்த முரட்டு மனிதனைப் போல் எரிந்து பிணமாஞன்.

இப்படித்தான் அந்தக் காலத்தில் தேசத் துரோகிகளை வெள்ளையர்கள் வெறிகொண்டு கொன்று குவித்தார்கள்.

இந் நிகழ்ச்சியைக்காண மனம் சகிக்காத நான் காரில் ஏறி உட்கார்ந்து கொண்டேன்.

# கிரேக்கமும் - தமிழும்

கிரேக்கர் நாகரிகம், மொழி, இலக்கியம் ஆகியவற்றின் முன்னைய நிலை, இற்றைநிலை ஆகியவை பலவகையில் தமிழகத்தை நினைப்பூட்டுபவையாகும். கிரேக்க நாகரிகம் இறந்துபட்டது. ஆனால், உலகோர் அதன் புகழுடம்பைப் போற்றினர். தமிழ் நாகரிகம் நலிந்தும் இறந்துபடவில்லை. ஆனல், உலகோர் அதன் புகழைக் கவனியாமலிருக்கின்றனர். கிரேக்க இலக்கிய வாழ்வு காலன்வாய்ப்படினும் இலக்கியம் காலன்வாய்ப்படவில்லை. தமிழிலக்கியத்தின் பெரும்பகுதி காலன்வாய்ப்பட்டும் இலக்கிய வாழ்வு காலங்கடந்து வாழ்கிறது. கிரேக்கர் புகழையும் வடமொழிப் புகழையும்கூட உலகொப்பினும், தமிழ்ப்புகழ் தாயற்ற நிலையிலிருக்கிறது. ஆயினும் கிரேக்கர் புகழும் வடமொழிப் புகழும் அந்நாகரிகங்களைப் பிழைப்பிக்க உதவா. தமிழ் வாழ்வோ, தமிழர் முயன்ருல் பழம்புகழ் புதுப்பிக்கப் பெற்றுப் புதுப்புகழாகலாம்.

தமிழர் ஆராய்ச்சிக்கு எட்டாத் தமிழின் பலசிறப்புக்களை அறியக் கிரேக்க இலக்கியம் உதவக்கூடியது. தமிழை வளம்படுத்தும் முறையில் தமிழறிஞர் சிலரல்லர், பலர் அறிந்தாராய்ந்து பயிலவேண்டிய ஒருமொழி கிரேக்கமொழி என்பது உறுதி.

— பன்மொழிப் புலவர் **கா. அப்பாத்துரை**

தளபதி வின்சன் "தொலைந் தார்கள், தொல்லைக்காரர்கள்!" என்றவாறு என் அருகே வந்தார்.

"ராஜ்; என்ன மனம்சோர்ந்து உட்கார்ந்துவிட்டீர்!" என்றார்.

'மனிதர்களை இப்படியா ஸார்! வாட்டி வதைப்பது?" என்றேன்.

"விளங்காமல் மனம் சோர்ந்து பேசுகின்றீர்! விபரம் அறிந்தால் நீரே துள்ளிக்குதிப்பீர்" என்றார்.

"அப்படியானால் விபரம்தான் என்ன?" என்று கேட்டு வைத்தேன்.

"இந்தக் கிழமை யப்பானியர்கள் இங்கே குண்டுபோடக் காரணம் இவர்கள்தான்" என்றார் அவர்.

"இவர்கள்தான் காரணம் என்று எப்படி சார் துணிந்து கூறுகின்றீர்கள்?" என்றேன்.

"பையில் கையைவிட்டுச் சில கடிதங்களைக்காட்டி இவைதான் இதற்குச் சான்று" என்று கூறிவிட்டு என்னை நோக்கி "ராஜ்! நீர் ஆராய்ச்சியின் நிபுணராச்சே! நான் அந்த மரத்தில் இருந்து இறக்கிக் கொண்டுவந்த இயந்திரப் பெட்டியும், பச்சைநிறக்கயிறு போன்றவையும் என்னவென்று தெரியுமா உமக்கு? என்று கேட்டார்.

சோர்வுற்று இருந்த எனக்கு இக்கேள்வி புதிய ஒரு வலுவைக் கொடுத்தது.

"அதை ஆராயும் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. இனித்தான் ஆராயப்போகிறேன்" என்றேன்.

உமக்கு அதற்கு இடம் வைக்காமல் நானே ஆராய்ச்சி செய்துவிட்டேன். பச்சைக்கயிறு போன்றவை என்ன தெரியுதா? அவைதான் மின்சாரம் செல்லத்தக்க கம்பிகள் உள்ள வயர்களாகும். அந்த இயந்திரப் பெட்டி தொலைபேசிக் கருவியாகும். இதன் மூலமாய்த்தான் யப்பானியர்களுக்கு இவர்கள் செய்தி அனுப்பிவந்திருக்கிறார்கள். மேலும் கொடிபோன்றிருந்தவைகளும் வயர்கள்தான். நான் மரத்தில் ஏறி இயந்திரப்பெட்டியருகே சென்றதும் "ஹல்லோ! எல்லாம் ஆயத்தமா என்றேன்" அதற்கு "கப்பல் படை புறப்படத் தயாராய் இருக்கிறது. சமயம் சரியாயிருக்கிறதா?" என்ற பதிலுடன் கேள்வியும் வந்தது. "இன்னும் சரியான சந்தர்ப்பம் வரவில்லை. வந்ததும் தெரிவிக்கிறேன். இப்பொழுது அவசரவேலை காத்திருக்கிறது என்று கூறினேன். "அப்படியானால் சரி வேலையைக் கவனிக்கவும்" என்று சொல்லித் தொடர்பை அறுத்துக் கொண்டனர். நானும் கருவியைக் கழட்டி வயர்களைத் துண்டித்துவிட்டு இறங்கினேன்". என்றார் தளபதி.

நான் வியப்புடன் "அப்படியா!" என்றேன்.

அவர் "இன்னும் அநேக வேலை பாக்கி இருக்கிறது. போகும் வழியில் மற்றவற்றைக் கூறுகின்றேன்." என்று சொல்லிக்கொண்டே காரில் ஏறி உட்கார்ந்தார், கார் புறப்பட்டது.

என் மனமோ துப்பாக்கி முனையில் இருந்த இருவர் செயலையும் வியந்து கொண்டிருந்தது.

# மாணவர் மன்றம்



## அன்புள்ள மாணவருக்கு!

இதோ எம் கலைவாணி உங்கள் கரங்களில் எழிலோடு இலங்குகின்றாள். ஆவலோடு என்றுவரும் - என்றுவரும் என்று கலைவாணியை எதிர்பார்த்த உங்கள் முகத்தில் இன்று முதல் இன்பநகை பூத்துக் குலுங்கப்போகின்றது.

காலம் விலைமதிக்க முடியாத பெருஞ்செல்வம். பணம் படைத்த பெருஞ்செல்வருக்கும் பாட்டாளிகளுக்கும் இளைஞருக்கும் முதியவருக்கும் உலகில் உள்ள யாபேருக்குமே சிறந்த பொதுவுடைமையாக இயங்குந் தன்மை காலத்துக்கே உண்டு. அதல்லாமல் உலகத்தின் வரையறையான இயக்கம் காலத்தையே மையமாகக் கொண்டது. ஆதலால் காலத்தின் அருமைப் பாடையுணர்ந்து உங்களுக்காக அமைந்துள்ள மாணவப் பருவத்தைப் பயனுடைய பருவமாக ஆக்கிக்கொள்ளுங்கள். ஒவ்வொரு பெற்றோரும் அரும்பாடுபட்டு தியாகத்தின் உருவமாக அமைத்துத் தந்ததுதான் உங்களுடைய மாணவப் பருவம் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். இப்பருவத்தில் வருங்கால சமுதாயம் - நாடு - உலகு

இவற்றுக்காக உங்களைத் தினமும் தயார் படுத்திக்கொள்ளுங்கள். வீடுதோறும் ஒவ்வொரு தாய்மாரும் தத்தம் மக்கள் நன்றாகப்படித்து நன்மக்களாக வரவேண்டுமென்று எவ்வளவு தூரம் இரவு பகலாகக் கற்பனை செய்கின்றார்கள். அவர்களுடைய கற்பனையின் நிழலுக்குக்கூட சிறு பங்கத்தையேனும் ஏற்படுத்தாதீர்கள்.

கலைவாணியைப் பாருங்கள் - அவள் உங்களுக்கு என்றும் அழியாத கல்விக் களஞ்சியமாகத்தான் நிலவுவாள். உங்களுக்கென்ற கடமையுணர்வை என்றுந் தட்டியெழுப்புதலையே தன் வாழ்நாளின் குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றாள். வருங்கால சமுதாயத்தை உருவாக்கும் உங்களுக்கென அமையாது - அவள் வேறுயாருக்காகத்தான் அமைவாள்?

இளமைப்பருவம் ஓர் அருமையான பருவம். இதன் அருமைப்பாடை ஒரு கணப்பொழுதேனும் சிந்தித்தீர்களா? இளமை இன்பத்தைப் பயக்கும் பருவம். இன்பமென்றால் - எத்தனையோ இன்பங்கள் உலகில் உள. வீண் ஆசாபாசங்களின் இன்பந்தான் உண்மையான இன்பம் என்று ஏமாந்துவிடாதீர்கள். அவ்வின்பம் உண்மைபோல் சிறுபொழுது காட்டி - பெரும்பொழுது உங்களைத் துன்பத்திலேயே ஆழ்த்தி விடுகின்றது. நான் இங்கு குறிப்பிடும் இன்பம், அத்தன்மையதல்ல. அவ்வின்பம் என்றும் இன்பம் - எங்கும் இன்பம் - என்றுமே துன்பமில்லாத இன்பம் - அதுதான் அறிவாகிய இன்பம்.

கலைவாணி உங்களுக்குத் தரவல்ல இன்பமும் அறிவாகிய இன்பத்தையே; அவள் தாங்கிய பெயருள் கலையென்ற தொழிற்பெயர் கல்லென்ற முதனிலையடியாகப் பிறந்தது. எல் என்றால் - அறிவு நிலையைக் குறிக்கும் சொல்லன்றோ! இதை நீங்கள் உணர்ந்திருப்பின் அவள் எத்தகையினள் - அவள் தரும் இன்பம் எத்தகைய இன்பம் என்பவற்றை யான் கூறாமலே அறிந்திருப்பீர்கள்.

அறிவின்பம் அழிவில்லாத இன்பம் - மணற்கேணியைப் போல் தொட்டனைத் தூறுகின்ற (குறள் 396) இன்பம்; இவ்வின்ப நிலையிலேயே உங்கள் வாழ்நாளை இரண்டறக் கலவுங்கள். ஓய்வு கிடைத்த பொழுதெல்லாம் சிறந்த அறிஞரின் கட்டுரை - நாவல் - வரலாறு - முதலியவற்றைப் படியுங்கள். பாடநூல் மாத்திரம் உங்கள் அறிவு நிலைக்குப் போதாது. வாழ்க்கை வாழ்வதற்கு வரலாற்று நூல் துணை புரிவதைப்போல் பூகோள நூல் துணை புரியாது. தாய் மொழியிலே சிறந்த அறிவைப் பெருக்குங்கள். எங்கள் மொழியான இன்பத்தமிழ்-இனியதமிழ் - வளத்தையெல்லாம் அறிந்து அதைப் போற்றி வாழப் பழகுங்கள்.

திருக்குறளிலே காணும் உண்மைப் பொருளின் நிறைவைப் பகவத்கீதையிலோ சேக்ஸ்பியரின் காவியங்களிலோ காணமுடியாது. தினமும் படித்ததைச் சிந்தித்து வாழப் பழகுங்கள். சிந்தித்தவற்றை எழுதுங்கள். தினமும் எழுதிப் பழகும் பயிற்சி - நாளடைவில் உங்களைப் பேனு மன்னர்களாகவே ஆக்கிவிடும். இதற்குரிய ஆக்கங்களாக-நீங்கள் படைத்து அனுப்புகின்ற எழுத்து ஓவியங்களைக் கனிந்த முகத்தோடு எம் கலைவாணி ஏற்று வெளியிடத் தவறமாட்டாள்.

வணக்கம்!

இவ்வண்ணம்,
**அன்புள்ள ஆசிரியர்.**

## இலக்கியம்

இலக்கியம் இல்லாத நாடு யாருக்கும் விளங்காத நாடேயாகும்.
— கார்லைல்

இலக்கியமே வாழ்க்கையின் தொழிலாக இருக்கக்கூடாது. அப்படி இருக்குமென்றால் அது துன்பமே தவிர இன்பமில்லை.
— ரோஜர்ஸ்

இலக்கிய உலகில் எல்லாம் குடியரசே. — மோலியர்



# பாரதியின் தேசிய உணர்ச்சி

செல்வி. ஸ்ரீமுருகஜோதி கனகசூரியம்

பாரத நாடு அடிமையிருளில் மூழ்கி அமைதியற்று வாழ்ந்த காலம்—தமிழ்நாடும் தமிழினமும் செய்வதறியாது துயரத்தால் திகைப்புண்ட காலம்—அக்காலத்திலேதான் பாரதி கவிக்குயிலாகப் பாரதநாட்டில் தோன்றினார். இராமன் ஆண்டாலென்ன? இராவணன் ஆண்டாலென்ன? என்று வாழ்ந்த தாழ்வு மனங்கொண்ட சமுதாயம், அவனுடைய சிந்தனைப் பாடல்களால் சீர்மை பெற்றது.

பரந்து விரிந்த பாரத தேசம் பல மொழி இனத்தைக்கொண்டதாக இருந்தபோதிலும், யாவரையும் ஒருமித்துத் தட்டியெழுப்பி தேசிய உணர்வெனும் அமுதை ஊட்டினார் பாரதி; தேசிய உணர்வு மக்களிடத்தில் இல்லாது போனால் சுதந்திர உணர்வு எப்படித்தான் எழமுடியும்? அதனால்தான் அம்மகாகவி முதற்கண் பாரத நாடு—பாரததேசம் என்றெல்லாம் தன் கவிதைதோறும் அமைத்துக் காட்டத் தலைப்பட்டார்.

அவர் பிறந்த தமிழ்நாடு பிறப்புரிமையால் அவருக்குச் சொந்தமாக இருந்தபோதிலும், வெள்ளிப் பனிமலையையும், மேலைக் கடலையும், சொந்தம் கொள்ளுமளவுக்கு அவருடைய சிந்தை தேசிய உணர்வில் பெருக்கெடுத்தது. 'வங்கத்து ஓடிவரும் நீரின் மிகையால்—மையத்து நாடுகளில் பயிர்செய்குவோம்' என்றும், 'சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்—சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்' என்றும் பாடக்கூடிய அளவுக்குப் பாரதத்தின் பரந்த தேசிய உணர்வை பாரதி கண்டு அதை மக்களிடத்திலும் பரப்பினார். வாழ்க்கையமைப்பில் அவர் கண்ட தேசியந்தான் இந்திய வாழ்வை வளம்பெறச் செய்தது. பாரதநாட்டின் வடபுலத்திலுள்ள சிந்துநதியில்—சேர நாட்டிளம் பெண்களு

டன்—சுந்தரத் தெலுங்கிசையில் பாட்டிசைத்து—தோணிகள் ஓட்டி வரும் வாழ்வியலை தமிழினத்துக் குக்காட்டும் பாரதியின் தேசிய உணர்வுதான் என்னென்பது?

**சிந்து நதியின் மிசை நிலவினிலே**
**சேரநன் னுட்டிளம் பெண்களுடன்**
**சுந்தரத் தெலுங்கினில் பாட்டி**
**சைத்துத்**
**தோணிக ளோட்டிவிளை யாடிவரு**
**வோம்**

என்று நம் தமிழினத்துக்கு அழ காகத் தேசிய உணர்வை ஊட்டிய பாரதி—விடுதலை உணர்வையும் தேசிய அமைப்பின் கீழே ஊட்டி ஞன்.

ஆயிரம் ஆயிரம் சாதிப்பிரிவு களையும், அதனுல் சண்டைகளை யும் கீழ்த்தரமான சமுதாயப் பூசல் களையும் கண்ட பாரதி முதலிலே இப்பிளவுப்பாடுகளைக் களைய முற் பட்டார். அதனுல் பாரத மக்களை ஒரு தாயின் வயிற்றில் பிறந்த மக்க ளாகவே அமைத்து—அவர்கள் ஒவ் வொருவருக்கும் சகோதரத் தத் துவத்தைப் புகட்டுமுகமாக

**ஆயிரம் உண்டிங்கு**
**ஜாதி—எனில்**
**அன்னியர் வந்து**
**புகல்என்ன நீதி?—ஓர்**
**தாயின் வயிற்றில்**
**பிறந்தோர்—தம்முள்**
**சண்டைசெய் தாலும்**
**சகோதரர் அன்ருே**

என்று பாடினுர். சகோதர மனப்பான்மை எல்லோரிடமும் தோன்றிவிட்டால் நாடு விடுதலை உணர்வுபெற்று சுதந்திர நாடாக ஆகிவிடும் என்பது பாரதியின் சித் தாந்தம்.

மனிதன் மனிதனுக வாழ வேண்டும். அம்மனிதப்பண்பு சுதந் திர நாட்டில்தான் ஒளிரமுடியும். சுதந்திர நாட்டில் உருவாகாத மனி தாபிமானம் அடிமை நாட்டில் உரு வாகுமென்பது முயற்கொம்பிலும் முயற்கொம்பு; பாரதி தன் உள்ளு ணர்வையெல்லாம் தேசிய மக்க ளின் மனிதாபி மானத்துக்காகச் செலவிட்டார். அவருடைய 'நாட்டு வணக்கம்' படைப்பிலே தேசிய வுணர்வுக்காக படைத்துக்காட்டு கின்ற நாட்டுப்பற்றின் கருவூலத் தையே நாம் காணமுடிகின்றது. பாரத நாட்டை, எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவியிருந்த நாடென் றும் - முன்னே உள்ளவர் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து தம் வாழ்நாளைக் களித்த கவின்பெறு நாடென்றும் - அவர்தாமே தம் சிந்தைதோறும் ஆயிரம் நல்லெண் ணங்களை வளர்த்து சிறப்புறுதற் குச் சீர்மைபெறு நாடென்றும் கூறிய அவரின் உள்ளப்பெருக்கு,

**மங்கைய ராயவர் இல்லறம் நன்கு**
**வளர்த்ததும் இந்நாடே—அவர்**
**தங்க மதலைகள் ஈன்றமு தூட்டித்**
**தழுவிய திந்நாடே—மக்கள் [கள்**
**தங்கம் உயர்ந்து வளர்கெனக் கோயில்**
**சூழ்ந்ததும் இந்நாடே—பின்னர்**
**அங்கவர் மாய அவருடற் பூந்துகள்**
**ஆர்ந்ததும் இந்நாடே—இதை**
**வந்தே மாதரம் வந்தே மாதரம்**
**என்று வணங்கேனே?**

என்னும் பேரொலியோடு ஓரளவு அமைதி பெறுகின்றது. தேசியத் தில் வாழும் மனிதவர்க்கத்தில் ஆணும் பெண்ணும் சமத்துவ நிலை யில் வாழவேண்டும். வீட்டிலே சமத்துவ உணர்வு இல்லாவிட்

டால் நாட்டிலே எப்படித்தான் சுதந்திர உணர்வு எழமுடியும்?! மக்களிடையே காணப்படும் பெண்ணடிமை என்னும் அரக்கத்தன்மை அடியோடு அழிந்தால்தான் தேசியம் சுதந்திரமுள்ள தேசியமாக இலங்க முடியும். இதனுல்தான் மாதர்தம்மை இழிவுசெய்யும் மடமையைப் பூண்டோடு ஒழித்துக்கட்டப் பாரதி வீறுகொண்டு எழுகின்ருர்.' பெண்மையிலே' அவன் பேசுகின்ற பெருமை மொழிகள்—பெண்மைக்கே பெரும் உயர்நிலையாகும்.

**வலிமை சேர்ப்பது**
**தாய்முலைப் பாலடா!**
**மானஞ் சேர்க்கும்**
**மனைவியின் வார்த்தைகள்**
**கலிய ழிப்பது**
**பெண்க ளறமடா!**
**கைகள் கோர்த்துக்**
**களித்துநின் ருடுவோம்.**

என்ற கவிதையால் பெண்மைக்கே தனிப்பெரும் தகைமையை வாழ்வியலில் காட்டுகின்ருர். அதையடுத்து 'பெண்கள் விடுதலைக் கும்மிப்' பாடலில், மாதரின் கல்விச் சமத்துவம் வீட்டுச் சமத்துவம் - அரசியல் சமத்துவம் முதலியவற்றை எடுத்து இயம்புகின்ருர்.

**ஏட்டையும் பெண்கள்**
**தொடுவது தீமையென்**
**றெண்ணி யிருந்தவர்**
**மாய்ந்து விட்டார்**
**வீட்டுக்குள்ளே பெண்ணைப்**
**பூட்டிவைப் போமென்ற**
**விந்தை மனிதர்**
**தலைகவிழ்ந் தார்.**

**பட்டங்கள் ஆள்வதும்**
**சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள்**
**நடத்த வந்தோம்**
**எட்டு மறிவினில்**
**ஆணுக்கிங்கே பெண்**
**இளைப்பில்லைக் காணென்று**
**கும்மியடி.**



என்ற பாக்களால் பெண்மையை ஆண்மையுடன் சமநிலையில் வைத்துப் பாரினுக்குக் காட்டுகின்ருர்.

பாரதி படைத்த: **" நாட்டு வணக்கம்—பாரத நாடு—பாரத தேசம்—எங்கள் நாடு - பாரத மாதா—எங்கள் தாய்-பாரத மாதா திருப்பள்ளி எழுச்சி—பாரத மாதா நவரத்தினமாலை - பாரத தேவியின் திருத்தசாங்கம்-பாரத சமுதாயம் "**— முதலிய பகுதிகள் யாவும் மக்களை ஒரு நிகரான தேசிய உணர்வின் கீழ் வைத்து அவர்களைச் சுதந்திர வீரர்களாகத் தட்டியெழுப்பின. அடுத்து வருகின்ற பாரத சமுதாயத்தைக் கற்பனையாகக் கண்டவன் யாவருக்கும் வீர உணர்ச்சியை ஊட்டும் விதமாக

**ஒளிபடைத்த கண்ணினுய்**
**வா வா வா**
**உறுதிகொண்ட நெஞ்சினுய்**
**வா வா வா**
**களிபடைத்த மொழியினுய்**
**வா வா வா**
**கடுமைகொண்ட தோளினுய்**
**வா வா வா**

என்றெல்லாம் படைத்துக் காட்டுகின்ருர்.

தேசியம் என்பது பொதுமை உணர்வில் தோன்றக் கூடியது. அங்கு அடிமை விலங்கு அகல வேண்டுமானுல் அனைத்து இனமும் தேசியமென்ற ஒருமை யுணர்வில் இயங்க வேண்டும்.

அவ்வியக்கத்துக்குப் பாதையையும், பார்முழுதும் வழிகாட்டும் பேரொளியையும், மகாகவி பாரதியே காட்டிச் சென்ருர். அவர் தேசிய உணர்ச்சியிலே கண்ட கனவுகள் எத்தனை?! எத்தனை?! அதற்காக அவர் படைத்த ஓவியங்கள் இன்றும் என்றும் நிலைத்திருக்கும் காவியங்களன்றோ.

*வாழ்க பாரதியின் தேசியவுணர்ச்சி!*

# கட்டுரைப் போட்டி

## கலைவாணி மாணவர் மன்றத்தின்

சார்பாகக் கட்டுரைப் போட்டியொன்றை

ஏற்படுத்தியுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன்
அறியத்தருகின்றோம்.

போட்டியில் பங்குபெற விரும்புவோர்

## 30-12-64

ஆம் நாளுக்குள்

கட்டுரையை எமக்கு அனுப்பி வைக்கவும்.

கட்டுரைத் தலைப்பு :

★ தாய்மொழிக் கல்வி

★ வாழ்வும் கலையும்

★ நாடும் வீடும்

அனுப்பப்படும் கட்டுரைகளில் சிறப்பான மூன்றைத் தெரிவுசெய்து அவற்றை எம்மிதழில் பிரசுரிப்பதோடு அவற்றை எழுதியோர்க்கு ஓர் ஆண்டு பூராவும்

எம் 'கலைவாணி' இதழை

இலவசமாக அனுப்பி வைப்போம்.

மாணவர்களே!

இன்றே கட்டுரை எழுதுதற்கு முயலுங்கள். உங்களுடைய முயற்சி எம் கலைவாணியால் என்றும் உயிர் பெறட்டும்.



# விஞ்ஞானம்

அன்பு மிக்க சாந்நிக்கு !

நீர் கொழும்பில் மகளிர் கல்லூரியில் படிக்கின்றீர். நாங்கள் சிறு பிள்ளைகளாக இருக்கும் பொழுது நீர் படிப்பதுபோல் சகல வசதிகளுமுள்ள கல்லூரியில் படிக்கும் பாக்கியம் கிடைக்கவில்லை. உமக்கு இருப்பதுபோல் சகல வசதிகளுமில்லை. ஆகவே உம்மைப் போல் சகல வசதிகளுமுள்ளவர்கள் விவேகமாகப் படித்து எங்கள் நாடு முன்னேறுவதற்குப் பல வழிகளை வகுக்க வேண்டும். உலகில், அமெரிக்கா, இங்கிலாந்து, ருஷ்சியா, ஜெர்மனி போன்ற பல தேசங்களில் விஞ்ஞானம் பல துறைகளிலும் துரிதமாக வளர்ந்து முன்னேறுகிறது. எங்கள் நாட்டிலுள்ள மாணவர்களுக்கும் விஞ்ஞானத்தில அதிக கவனத்தை உண்டாக்கினல் நம் நாடும் முன்னேற வழியுண்டு. ஏட்டுப் படிப்பிளுல் மட்டும் விஞ்ஞான அறிவு வளராது. எதையும் துருவி ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆசிரியர்கள் சொல்வதை எல்லாம் வேத வாக்காகக் கருதாது, எதையும் "ஏன்?", "எப்படி?", "எதற்காக?" என்று கேட்டு அறிய வேண்டும். அது உமது அறிவு வளர்ச்சிக்குப் பெரும் உதவியாக இருக்கும்.

நான் உன்னைச் சந்திக்கும் கும் பொழுதெல்லாம் பல கேள்விகளைக்கேட்பாயே! சிலவேளைகளில் அவற்றுக்குத் தகுந்த மறுமொழிகளைக் கூறக் கூட எனக்கு அவகாசமிருப்பதில்லை. அதைக் குறித்து நீர் அதிருப்தி அடைவதும் எனக்குத் தெரியும். எனவே உமக்கும் உன்னைப்போன்றவர்களுக்கும் நன்மை பயக்கும் வண்ணம் சில விடயங்களைக் கூற முயலுவேன்.

முகில்கள் அற்ற தெளிவான வானத்தை இரவில் பார்த்திருக்கிருயல்லவா? அப்பொழுது பல கோடி உடுக்கள் (நட்சத்திரங்கள்) மின்னுவதை அவதானித்திருக்கிருயா? நாம் இவைகளை ஏன் இரவில் மட்டுந்தான் காண்கிறோம். பகலில் இவைகள் எங்கு ஓடி ஒளித்துக் கொள்கின்றன?

உடுக்கள் எல்லாம் மிகவும் பரந்த வானவெளியிலுள்ளன. இவை மிகவும் தொலைவிலிருப்ப

தால் நமக்குச் சிறியனபோல் தெரிகின்றன. நாம் வாழும் இப்புவிக்கு அண்மையிலுள்ள உடு சூரியனே. உடுக்கள் வானத்தில் தானிருக்கின்றன. ஆனால் மிகவும் தொலையில் இருப்பதனால் எமக்குச் சிறிதாகத் தோன்றுகின்றன.

எல்லா உடுக்களிலும் நமக்கு முக்கியமானது சூரியனே. ஆதி மனிதன் வேட்டையாடியே சீவித்தான் என்று சரித்திரப்பாடத்தில் படித்திருப்பாய். அவன் பகலில் வேட்டையாடியும் இரவில் தூங்கியும் வந்தான். இவர்கள் சூரியனை வானவெளியிலுள்ள ஒரு மிகவும் முக்கியமான பொருளாகக் கருதியிருக்கக்கூடும். பின்பு இரவு, பகல் காலங்கள் முதலியனவற்றுக்கும், உணவு வகைகளுக்கும் காரணமாயிருந்த சூரியனை, பயிர்செய்யத் தொடங்கின மனிதன்—தெய்வமென்றே போற்றிவந்தான். பின்பு சிலர் சூரியனுக்குக் கோவில் கட்டியும் வணங்கத் தொடங்கினார்கள். இதனால்தான் சூரியனை இன்னும் நம்மவர் வணங்குகின்றனர். சூரியன் நமக்கு வெப்பத்தையும் வெளிச்சத்தையும் தருகிறது. சூரியன் இல்லாவிட்டால் எங்கும் இருள் சூழ்ந்திருக்கும். தாங்கமுடியாத குளிராயிருக்கும். பனிமலைகள் நிறைந்திருக்கும். சூரியன் இல்லாவிட்டால் ஓர் உயிரினமும் வாழ முடியாது. சூரியன் எரியும் வாயுக்களைக் கொண்ட ஒரு பிரமாண்டமான உருண்டையாகும். அதிலிருந்து பலகோடி மைல்கள் நீளமான சுடர்கள் கிளம்புகின்றன. புவி மிகவும் தூரத்தில் இருப்பதனாலேயே நாம் சுட்டெரிக்கப்படாமல் இருக்கிறோம். எமது புவி சூரியனிலிருந்து 93, 000, 000 மைல் தூரத்திலிருக்கிறது.




வானவெளியில் சூரியனைச் சுற்றி, புதன், சுக்கிரன், புவி, செவ்வாய், வியாளன், சனி, உரானசு, நெத்தியூன், புளுத்தோ என்னும் ஒன்பது பெரிய கோள்கள் கிரகங்கள் வலம் வருகின்றன. சூரியனும் இந்த ஒன்பது கோள்களும் சேர்ந்து சூரியகுடும்பமாகும். இக்கோள்களுக்கு சூரியனுக்கு இருப்பதுபோல் சுயஒளியில்லை. இவை சூரியனிலிருந்தே

ஒளியைப் பெறுகின்றன. இவை உடுக்களைப்போல் மின்னுவதில்லை. சில கோள்களுக்கு உபகோள்களு முண்டு. நாமிருக்கும் புவியின் உபகோள் மதியாகும் (சந்திரன்). இதுவே நமக்கு இரவில் குளிர்ந்த ஒளியைத் தருகிறது. தமிழர் இதற்கு திங்கள் நிலா என்று பெயரிட்டனர். சனிக்கு ஒன்பது உபகோள்களும், அழகிய வளையமு மிருக்கின்றன. புவியிலிருப்பது போல் மறுகோள்களிலும் உயிரி னங்களிருக்கின்றனவா என்று விஞ்ஞானிகள் இப்பொழுது ஆராய்ச்சி செய்கிறார்கள். உன் வாழ்நாளில் சில கோள்களுக்கும் இவர்கள் போய்விடுவார்கள் என் பது என் நம்பிக்கை.

சூரியனைச் சுற்றி எல்லாக் கோள்களும் மிகவும் விரைவாக வலம் வருகின்றன. இவை வழி தவறாது தத்தம் பாதையில் வரு வது எவ்வாறு சாத்தியமாகிறது. என்று தெரியுமா? நாம் ஒரு கல்லை நூலிற் கட்டி சுழட்டும்பொழுது கல்லு விழாமல் சுற்றிவருகிறது அல்லவா? நாம் நூலைப்பிடித்து இழுக்கின்றோம். அதே நேரத்தில் மறுபக்கமாய் கல்லின் நிறை இழுக் கின்றது. இதனால் கல்லு பறந்து போகாது சுழன்று வருகிறது. அதே போன்று சூரியன் கோள் களைத் தன்வசம் இழுக்கிறது. அப் பொழுது கோள்களும் சூரியனைத் தம்மை நோக்கி இழுக்கின்றன. இக்கவர்ச்சியினால்தான் இவை தத் தம் பாதைகளை விட்டுவிலகாது ஒழுங்காகச் சென்று கொண்டு இருக்கின்றன. இவ் ஈர்ப்புச்சக்தி இல்லாவிட்டால் இவை செல்லும் வேகத்தில் வானவெளியில் நேர் கோட்டில் பறந்து சென்றுவிடும்.

> இன்றைய மனித வாழ்க்கை விஞ்ஞானத்தின் சுற்றுப் புறத்திலே இயங்கி வருவ தையே காணுகின்றோம். விஞ் ஞானத்தை நம் தமிழினம் அனுபவிக்கத்தானே பிறந் தது! அவற்றின் ஒரு கூறை யாவது ஆக்கப் பிறக்க வில்லையே!

சூரியனைச்சுற்றி வலம்வரும் கோள்கள் பலவேறுபட்டவை. சில சிறியவை; சில பெரியவை; சில வெப்பமானவை; சில குளிரா னவை. ஆனால் புவியே உயிரி னம் வாழ்வதற்கு ஏற்றமுறையில் அமைந்திருக்கிறது. புவியில் நாம் சுவாசிப்பதற்கு வேண்டிய காற்று (ஒட்சிசன்), நீர், உணவுவகை எல் லாமுண்டு. இவ்வாறு நாம் வசிப் பதற்கு ஏற்ற முறையில் அமைந் திருக்கும். புவி எவ்விதமுண்டா னது? எவ்வாறு அதில் சீவராசி கள் வளரத் தொடங்கின? இவற்றை' எல்லாமறிய நீ ஆவ லாயிருப்பாய் என்பது நிச்சயம். அதை அடுத்த முடங்கலில் வரை வேன்.

வணக்கம்.

இங்ஙனம்
அன்புள்ள,

**ம. பரமானந்தன்**

# கலையுணர்வு

சோ. செல்வநாயகம்
விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக் கழகம், பேராதனை.

கலைகள் பற்றியும் கலைகளினது தத்துவம் பற்றியும் காலத்திற்குக்காலம் மாறுபட்ட கருத்துக்கள் நிலவி வந்துள்ளன. இத்தகைய மாறுபட்ட கருத்துக்களினுல் கலைகள் பற்றிச் சில தவருன முடிபுகளும் அவ்வக் காலங்களில் ஏற்றுக்கொள்ளப் படுகின்றன. கலைகள் இத்தகையன, இன்னவரம்புகட்கு உட்பட்டன. இவ்வாறுதான் அமைய வேண்டும் என்று கூறுவாருமுளர். இவரது வரம்புகட்கு அமையக் கலைகளை ஆக்க முயன்று இடர்ப்படுவார் இன்றும் உள்ளனர். இம்முயற்சியினுல் கலையம்சமற்ற பொருள்களைப் படைக்க நேரிடுகின்றது.

மேலைநாடுகளில் - ஓரளவுக்குக் கீழைத்தேய நாடுகளிலும்- தனவந்தர் பெருந்தொகையான பணம் செலவுசெய்து விலை மதிப்புடைய பல ஓவியங்களை வீடுகளில் சேர்த்து வைக்கின்றனர். மைக்கேல் அஞ்செலோ போன்ற புகழ்பெற்ற பழைய இத்தாலிய ஓவியர்கள் முதல் பிக்காஸோ வரை பல ஓவியர்கள் வரைந்த விலைமதிப்புடைய ஓவியங்களை இவர்கள் பெரும் பணம் கொடுத்து வாங்கி வைக்கின்றனர். விக்ரோறியா இராணி காலத்துத் தளவாடங்கள் முதல் நவீன தளவாடங்கள் வரை விதம் விதமான பல தளவாடங்களை விலைகொடுத்து வாங்கி வைக்கின்றனர். சில தனவந்தர் தமது வீடுகளைப் பலவித முறைகளில் திட்டமிட்டு அழகுடையனவாக அமைக்கின்றனர். வேறு சிலர் பெரும் பணம் விரையஞ்செய்து நவீன உடைகளைத் தயாரித்து அணிகின்றனர். இவர்கள் யாவரும் தம்மிடமுள்ள பணத்தை மற்ருேருக்குக் காட்டவும், சாதாரண மக்கள் தமது வாழ்க்கை முறையைக் கண்டு தாழ்மையுறவும் வேண்டியே இவ்வாறு செய்கின்றனர். பணம் படைத்த

பிரபுக்கள் கலையுணர்வினுல் இங்ஙனம் செய்கின்றனர் எனக் கோடல் தவருகும். இவர்கள் கலைகள் பற்றித் தவருன கருத்துடையரா தலினுலேயே இவ்வாறு செய்கின்றனர். இவர்களது நடையுடைபாவனைகளில் கலைப்பண்பைக் காணமுடியாது. இவை யாவும் புறவுலகப் பாவனைகளல்லாது கலையுணர்வினுல் அமைந்தனவன்று.

உண்மையான கலைப் பண்பை நாம் சாதாரண கிராம மக்களின் வாழ்க்கையிலே காணலாம். கிராமப்புறத்தில் வாழும் ஏழைப் பெண்ணெருத்தி அதிகாலையில் எழுந்து அயலேயுள்ள பூங்காவிற்குச் சென்று மனத்திற்குப் பிடித்த மலர்களைக் கொய்து அழகாக மாலைதொடுத்துத் தன் உள்ளத்தில் உறைந்துள்ள கிராமத்துத் தெய்வத்திற்குச் சாத்துகின்ருள். உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிகளின் உந்துதலால் அவள் அழகுடைய மாலை ஒன்றைத் திறம்படத்தொடுக்கின்ருள். அவளது கைத்திறனில் உண்மையான கலையுணர்வு காணப்படுகின்றது. அவ்வாறே கிராமங்களில் உள்ள வினைத்திறன் மிக்க தொழிலாளர் பலர் கலையுணர்வுடையவராய் விளங்குகின்றனர். தச்சர், தட்டார், கம்மாளர் போன்ற சாதாரண தொழிலாளர் தாம் இயல்பாகப்பெற்ற அறிவையும் பரம்பரை பரம்பரையாக வந்த அனுபவத்தையும் கொண்டு கவின்மிக்க பொருள்களையெல்லாம் சமைத்துவிடுகின்றனர். இத்தகைய பொருள்களினுல் அவர்கள் பெறும் இலாபம் மிகக்குறைவாகும்.

கலையுணர்வு பணம் படைத்த பிரபுக்களுக்குத்தான் உண்டு, கலைப்பொருள்களை அனுபவிக்கும் ஆற்றலும் அவர்களுக்குத் தானுண்டு எனக்கருதுவது தவருகும். அல்லாமலும் தனிப்பட்ட துறைகளில் நின்று கலைப் பொருள்களைப் படைப்போரிடமே கலையுணர்வு உண்டு எனக் கருதுவதும் உண்மையன்று. இத்தகைய கருத்துக்கள் யாவும் ஒரு முகமாகக் கொண்ட நோக்குக்களாகும். எமது உணர்ச்சிகளுக்கு இன்பம் பயக்கவல்ல தேனினுமினிய இசையையே, காலத்தை வீணே விரையஞ் செய்யும் நிகழ்ச்சி என எள்ளிநகையாடுவாருமுளர். கருநாடக சங்கீதம் போன்ற இசைக்கலைகளைச் செம்மையாகக் கற்க நீடியகாலம் செல்லும். அவ்வாறே பரத நாட்டியம் முதலிய நடனக்கலைகளைச் சாஸ்திர ரீதிப்படி கற்றுத் தேறுவதற்குப் பல வருடங்கள் செல்லும். நீண்டகாலப் பயிற்சியும் அயராத உழைப்பும் இத்தகைய கலைகளைப் பயிலுவதற்கு அவசியமாக இருக்கின்றன. அவ்வாறு முயன்று இக்கலைகளிற் புலமை பெற்ருேரைக் கலையுணர்வற்ருேர் எங்ஙனம் உணர்ந்து கொள்ளமுடியும்?

கலைப்படைப்புக்களையும் இசைநடனம் முதலிய நுண் கலைகளையும் உணர்ந்து அனுப விப்பதற்கு உண்மையான கலை யுணர்வு வேண்டும். உண்மை யான கலையுணர்வு கலைஞானத் திற்கும் ஆத்மீக உணர்வுக்கும் பயனுடையதாக அமைதல் வேண்டும். பொதுவாக உணர்ச்சி வழிப்பட்டு ஒருவனு டைய ஆற்றல் தீயவழியிலும் உபயோகிக்கப்படலாம். கலையு ணர்வும் அவ்வாறே. கலையுணர் வைத் தீயவழியில் செல்லாது தடுத்து நல்வழியில் புகுத்த முய லுதல் வேண்டும். இதற்குக் கலை களின் உண்மையான தத்துவத் தினை உணர்ந்து அதற்கேற்ப ஆற்றல் உணர்ச்சி முதலியவற் றைப் பயன்படுத்துதல் அவசிய மாகும்.

இனி, கலைகள் பற்றிய அறிவு பொதுக் கல்வித்திட்டத் திற்குப் புறம்பானது எனவும், பிரத்தியேக முறையில் அமைய வேண்டியது எனவும் சிலர் கருதுகின்றனர். எமது நாட்டி லும் ஏனைய பல நாடுகளிலும் இத்தகைய கலைகள் பொதுக் கல்வித்திட்டத்திற்குப் புறம் பானவையாகவே கொள்ளப்படு கின்றன. ஆனால் சிறந்த கல்வி யறிவுக்குக் கலைபற்றிய அறிவும் அவசியமாகும். கலையுணர்வு வாழ்க்கையில் மேலான பல காரியங்களைச் செய்யத் தூண்டு கின்றது. இன்றைய கல்வி பெரும்பாலும் புத்தகக் கல்வி யாகும். பாடசாலையிலும் பல் கலைக் கழகத்திலும் பெரும் பாலும் புத்தகங்களை மனப் பாடஞ் செய்யும் முறையையே

## இலக்கியம்

மனிதன் படைத்துக்கொண்ட நாகரிகக் கருவிகளுள் மிகச் சிறந்தது மொழி என்பது. பேசுவதற்கும் எழுதுவதற்கும் உரிய தாக மனிதன் படைத்துக்கொண்ட மொழி இல்லையாயின், இன் றைய நாகரிக வளர்ச்சியே இல்லை எனலாம்; மக்கள் சேர்ந்து பழக வாயில் இல்லை, அமைப்புக்கள் இல்லை, மன்றங்கள் இல்லை, நீதிகள் இல்லை, சமயங்கள் இல்லை, சட்டங்கள் இல்லை, அரசு இல்லை, நாடுகள் இல்லை, உலக உறவு இல்லை, வாணிகம் இல்லை, நூல்கள் இல்லை, அறிவியல் இல்லை என்ற நிலையே ஏற்பட்டி ருக்கும். ஆகவே, மன்பதையின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்குமே அடிப்படையான மொழி மிகச் சிறந்த நாகரிகக்கருவி எனலாம். அத்தகைய மொழியை—மொழியின் சொற்களையே—ஊடுப் பொரு ளாகக் கொண்டு அமைவது இலக்கியம் ஆகையால் அது கலைக ளில் சிறந்தது என்பது பொருந்தும்.

டாக்டர் மு. வரதராசன்

நாம் காணுகின்றோம். இத்தகைய கல்வியினால் உள்ள நிறைவோ அனுபவமோ ஏற்படமாட்டாது. கல்வி பயனுடையதாக அமையக் கலைகள் பற்றிய அறிவும் கலையுணர்வும் அவசியமாகும். வாழ்க்கையைச் செம்மையாகவும் பண்புடைய தாகவும் அமைக்க இத்தகைய அறிவு இன்றியமையாதது.

எமது நாட்டிலும் இந்தியா, பாக்கிஸ்தான், மலாயா முதலிய ஏனைய நாடுகளிலும் கல்வி முறைகள் பெரும்பாலும் பிரித்தானிய முறைகளைத் தழுவியனவாகவே இன்னும் உள்ளன. பாடசாலைகள் பல்கலைக் கழகங்கள் முதலியவற்றில் பெரும்பாலும் பிரித்தானிய முறைகளைப் பின்பற்றியே கல்வி போதிக்கப்படுகின்றது. இந்நாடுகள் சுதந்திரம் பெற்றபின்பும் இம்முறைகளில் அதிக மாற்றம் ஏற்படவில்லை. எமது கல்விமுறைகள் எமது சூழலுக்கும் மக்களின் பண்பாடு, பாரம்பரிய இயல்புகள், தேசிய நோக்கு முதலியவற்றிற்கும் பொருந்துவனவாக இருத்தல் வேண்டும். இதனைக் கல்வித் துறையில் ஈடுபட்டார் பலர் எடுத்துக் காட்டியுள்ளனர். இந்தியாவில் ரவீந்திரநாததாகூர் போன்றோர் இதனை ஏலவே உணர்ந்திருந்தனர். பொதுவாக வங்காள மாகாணத்தார் நீடிய காலமாகவே தேசியப்பற்று மிக்கவராகவும் கலைகளில் ஈடுபாடுடையவராகவும் இருந்தனர். இவர்களது சூழலுக்கும் பண்புக்கும் ஏற்ற கல்வி முறையை வளர்ப்பதற்காகவே ரவீந்திரர் சாந்திநிகேதன், விஸ்வபாரதி முதலிய கலைக்கூடங்களை நிறுவினார். இவை இன்று பல்கலைக் கழகங்களாக உயர்த்தப்பட்டிருப்பதோடு சிறந்த கலைக்கூடங்களாகவும் திகழுகின்றன. கலையுணர்வு மிக்க ரவீந்திரர் நிறுவிய பள்ளிகளின் கல்வித்திட்டத்தில் கலையம்சம் முக்கியமாகக் கொள்ளப்பட்டது. இசை, நடனம், சிற்பம், ஓவியம் முதலிய பல கலைகளும் இக்கலைக்கூடங்களில் பயிற்றப்பட்டு வருகின்றன. இந்திய அரசாங்கம் இன்று இக்கலைகளை வளர்ப்பதில் ஓரளவு ஆர்வம் காட்டி வருகின்றது. எனினும் கல்வி முறைகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் இதுவரை ஏற்படவில்லை என்றே கூறவேண்டும். எமது நாட்டிலும் கடந்த சில வருடங்களில் இத்துறைகளில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது தனிப்பட்ட முறையில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளபொழுதும் கல்விமுறைகளில் மாற்றம் அதிகமாக இல்லை. பொதுக்கல்வித்திட்டத்தில் இத்தகைய கலைகளுக்கு இடமளிப்பதோடு பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் இக்கலைகளைப் பயிற்ற வசதிகளை ஏற்படுத்துவதும் அவசியமாகும்.

தமிழ் மணங் கமழும் ஈழ
நாட்டுத் திங்களிதழென்றால்

# "கலைவாணி"

ஒன்றைத்தான் கூறலாம்.

தமிழ்ப் பெருமக்கள் படித்துப் பயன்பெறும்
நோக்கமாக,

முத்தமிழ் இலங்கும்

இலக்கியம் - கலை - பண்பாடு

யாவற்றையும் சித்திரிக்கும்

பல அறிஞர்களின்

கருத்து ஓவியங்கள்

இவ்விதழில் இடம்பெறும்.

அரசியல்
கட்டுரை
கவிதை
சிறுகதை
தொடர்கதை
நாடகம்
கேள்வி பதில்
மாதர் உலகம்
மாணவர் மன்றம்
நகைச்சுவை
விஞ்ஞானம்

தமிழ்ப் பண்பாட்டை விளக்கும்

ஆங்கிலக் கட்டுரை

முதலியன எம்

“கலைவாணி”

திங்கள் இதழை

என்றும் அழகுபடுத்தும்.

தமிழ் மக்கள் யாவரும்

“கலைவாணி”யை

என்றும் வரவேற்று — எம்முயற்சிக்கு ஆக்கமும்

ஊக்கமும் அளிப்பார்களென்று நம்புகின்றோம்.



# மாதர் உலகம்

## பெண்மை

பெண்மையின் உயர்வை நாம் என்னென்றுதான் உரைப்போம்? இதுவரை முற்றிலும் விளக்கங் கூறமுடியாத பகுதி இருக்குமென்றால், ஒன்று கடவுள் - மற்றொன்று பெண்மை.

பெண்மைக்கு உயர்வழிக்காத நாடு - பழி பாவத்துக்கு அஞ்சாத நாடு! அந்நாட்டில் வாழ்வதைவிட நரகத்தில் உழல்வது மேல் !

பெண்மையே உன்னைப் போற்றுகின்றோம்! வணங்குகின்றோம்! உன்னை நாம் போற்றாவிட்டால் - செய்நன்றி மறந்தவராவோம்! வணங்கா விட்டால் - அன்பற்ற முரடராவோம்.

நாம் மனிதர்! எமக்கு உணர்ச்சியுண்டு! உணர்வுண்டு! உணர்ச்சியையும் உணர்வையும் எமக்கு அளிப்பது எது?! பெண்மை! பெண்மை!! பெண்மை!!!

ஆண்மையில்லாவிட்டால் பெண்மையில்லை. பெண்மையில்லாவிட்டால் ஆண்மையில்லை.

நாம் பிறந்தது வாழ்க்கை வாழ்வதற்கே. வாழ்க்கை வளமுள்ள வாழ்க்கையாக அமையவேண்டும். அவ்வளத்துக்கு ஆக்கம்அளிக்கும் உயிர்ப்பேறு பெண்மையிடந்தான் உண்டு.

தீராத வேதனையையும் பெண்மையின் அன்புமொழி தீர்த்து விடுகின்றது.

பெண்மை பிறந்து - வளர்ந்து - மடியுந்துணையும் தியாகத்தின் சின்னமாகவே ஒளி விடுகின்றது.

பெண்மைக்கு உயர்வளிக்கும் பகுதி தாய்மையிலே முழுமை பெறுகின்றது!

பெண்மை மென்மையிலும் வன்மையுடையது!

பெண்மை அழிந்துவிட்டால் நாமும் அழிந்துவிடுவோம். நமக்கு என்றும் உயிரூட்டி - நம்மைக் காத்தளிப்பதும் பெண்மைதான்.

வேதனையைக் கண்டு அஞ்சி ஒதுங்கி வாழும் உள்ளம் பெண்மைக்கு என்றுமே கிடையாது. வாழ்க்கை நாடகத்தில் போராடிப் போராடி வெற்றி பெறும் கதா பாத்திரம் பெண்மை ஒன்றுதானே?

சக்திக்கு ஒரு வடிவம் இருக்குமென்றால் - அவ்வடிவம் பெண்மையைவிட வேறெது?! இதை இன்று உணராத தமிழினம் அன்றே உணர்ந்துவிட்டது. சிவன் உமையின் தெய்வப் படைப்பெல்லாம் பெண்மையின் சக்தி நிலைக்கே ஓர் உயர்ந்த கோபுரமன்றோ.



# தமிழ் நெஞ்சம்



செம்பவள வாய்திறந்து — தமிழ்
பேசுகண்ணே பேசு—தமிழ்த்
தெம்மாங்கு பாடிடுவேன் — சேர்ந்து
பாடுகண்ணே பாடு.

வண்ணத்தமிழ்ப் போதனைகள்
— வாழ்வை
வளப்படுத்தும் கண்ணே
— உன்னைக்
கண்மணிபோல் காத்திடுவேன்
— தமிழைக்
காப்பதுஉன் கடமை

நாவினிலே உண்மையானாய்—உலகை
நன்றாக்கி வாழ்வாய்—மனக்
கோவிலிலே தூய்மையனாய்—கலைக்
கோபுரமாய் வாழ்வாய்.

— 'முல்லைக்கொடி'

# மனையியல்

வாழ்க்கையின் உயர்ந்த இன்பமே மனையியலின் குறிக்கோள். அதைப் பெறுவதற்காக அது, பல கலைகள் அறிவியல்கள் ஆகியவற்றின் அறிவைப் பயன்படுத்தி, மனிதப்போக்கைச் சரிவர வகுக்கிறது. வாழ்க்கைக்குக் குறிக்கோளைத் தந்து, அக்குறிக்கோளைத் தெளிவாக்கி, அதை அடைய வழிகாட்டி, மனித உள்ளத்தைப் பண்படுத்தி, குடும்பத்தை மலரவைத்து, சமூகத்தை வனப்புறுத்துகிறது. ஆகவே அது எக்காலத்தினர்க்கும், எந்நாட்டினர்க்கும், ஆண், பெண், இளைஞர், முதலியோர் ஆகிய பலதரப்பட்டவர்களுக்கும் பயன்படக்கூடிய செல்வமாவது. மேலும் மக்கள் நலத்தையே அது முதன்மையாகக் கொள்வதால் கல்விக்கு உயிர்நாடி போலாகிறது.

டாக்டர் இராஜம்மாள் தேவதாஸ்

# தாய் தந்தை

குடும்ப நலனையும், குழந்தைகள் நலனையும் பொறுத்துத் தன்னலத்தைக் கருதாது அதை விட்டுக்கொடுப்பவனே நல்ல தந்தையாவன். தங்களைப் பற்றியும், தங்கள் சுகவாழ்வைப் பற்றியுமே பெரிதாக எண்ணும் எத்தனையோ தன்னலவாதிகள் இருக்கிறார்கள். அவர்கள் என்றுமே நல்ல தந்தையர்களாக முடியாது. அது போன்றே குடும்பம் தழைக்க வேண்டும். குழந்தைகள் நலமுற வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி, அன்பும் நேசமும் அமையப் பெறாதவள் சிறந்த தாயாக மாட்டாள். தன்னலம் எப்போதும் இருக்கத்தான் செய்யும். ஆனால், அன்பின் அடையாளம் தியாகமே.

திரு. தி. சு. அவினாசிலிங்கம்

# வீட்டுக்கலை

←——→

பொதுப்படையாகக் கலையில் ஆர்வம் காட்டுவதில் பெண்களுக்கே மிகுந்த ஆற்றல் உண்டு. இல்லக்கிழத்தி ஒருத்தி தன் மனையிலும், அதிலுள்ள பொருள்களிலும், தோட்டத்திலும், ஆடை அணிகலன்களிலும், அணி செய்துகொள்வதிலும், ஏன் குழந்தைகளின் பராமரிப்பிலுங்கூடத் தன் கலைத் திறனைக்காட்டுதல் கண்கூடு. அவள் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் கலை மிளிர்கின்றது. இல்லத்தி லுள்ள பொருள்களின் அழகுமுறை அமைப்பைப்பற்றிமட்டுமே இக் கட்டுரையில் ஆராய்வோம்.

இல்லத்தின் புற அழகை விட, இருக்கும் பொருள்களைத் திறம் பட அடுக்கி, வீட்டை அணிசெய்வதே ஒரு தனிக்கலை. இது மிக எளிது. ஆனல் ஆற்றல் வேண்டும். உள்ள பொருள்களை ஒழுங்கு பெற அடுக்கி, அழகுறச் செய்வதனல் ஏற்படும் இன்பம் எதற்கும் ஈடாகாது. எழிலுடைய பொருள் என்றுமே மகிழ்ச்சி தரும் என்கிருர் ஆங்கிலக் கவி "கீட்ஸ்". ஆகவே, அகத்தை முதலில் அழகுபடுத்துவது இன்றியமையாதது. இதனல் அக (மன) அழகும் மன நிறைவும் ஏற்படும்.

திருமதி கோதாவிரி கமலநாதன்

# குழந்தையின் முக்கியத்துவம்

←——→

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, குழந்தை வளர்ப்பதற்குத் தனித் திறமையும் பயிற்சியும் வேண்டும் என்று ஒருவர் கூறியிருப்பாராயின் மக்கள் ஏளனம் செய்திருப்பார்கள். ஒரு பெண்ணிற்கு இயற்கையாகவே குழந்தையை வளர்ப்பதற்கான அறிவும் ஆற்றலும் அமைந்திருக்கின்றன என நம்பி வந்தார்கள். சமீபகாலத்தில் ஏற்பட்டுள்ள உளவியல் வளர்ச்சி காரணமாக இந்த நம்பிக்கையில் பெரிதும் மாறுதல் ஏற்பட்டுவருகிறது. மேலும், தந்தைதான் ஒரு வீட்டிற்கு முக்கியம் என்றும், அவனது நன்மைக்காகத்தான் மனைவி மக்கள் பாடுபட வேண்டும் என்றும் மக்கள் கொண்டிருந்த எண்ணம் மாறிவிட்டது. அதற்குப் பதிலாக ஒரு குடும்பத்திற்குக் குழந்தைதான் முக்கியம் என்றும், பெற்ருேர்களும், சுற்றத்தார்களும் அதன் நன்மைக்காகவே உழைக்கவேண்டுமென்றும் உணரத் தலைப்பட்டார்கள்.

தா. ஏ. சண்முகம்

# முத்தமிட்டான் !

கண்ணன் வரக்காணேன் — கமலக்
கண்ணன் வரக்காணேன்
மண்ணிற் தோன்றியவை — யாவும்
வண்ணனின் தோற்றமடி.

குளத்தங் கரைதனிலே — அவரைக்
கண்ட நாள்முதலாய்
உளத்திற் காதலென்ற — மரம்
ஓங்கி வளருதடி.

அரும்பு மீசையுடன் — அவன்
அன்பின் முகப்பொலிவைக்
கரும்பின் மிகவினிதாய் — நான்
கண்டு களித்தேனடி.

கண்டதைக் கண்டுவிட்டான் — தலை
கவிழ்ந்தேன் கற்சிலையாய்
கொண்டேன் உயிருன்னைக் — காதல்
கொண்டேன் என்றுரைத்தான்.

கூந்தலைப் புயலுமென்றான் — துணிந்து
கொத்து மலரணைத்தான்
காந்தச் சிலையுமென்றான் — அறியேன்
கட்டி முத்தமிட்டான்.

— 'செந்தாமரை'







இரா

# அவள்

ராஜம் வற்றித் துரும்பாகிவிடடாள். இளமையும் அழகும் நிறைந்த ஒரு பெண் காய்ந்து கருவாடு ஆவதற்கு ஒரு காரணம் வேண்டுமே! இல்லாமலிருக்குமா? உலகத்தின் மனிதன் தோன்றிய நாள் முதல் இளம் பெண்களின் வரலாறு ஒரே மாதிரித்தான் போலும். வெளியே உணர்ச்சிகளைக் காட்டாமல் அடக்கி உள்ளே மனதில் கல்லாய்ச் சுமக்கும் பெண்களின் மனதின் அடிப்படை பெற்றவனாலும் கொண்டவனாலும் கூட நிச்சயப்படுத்த முடியாத, உணர இயலாத மூடுமந்திரந்தான். காற்றி

லாடும் பாவை போல் சிவத்து உயர்ந்த கொடி போன்ற தேகம் ராஜத்தின் பிறப்புரிமை. இலேசாக உடலின்மீது சுற்றிவிட்ட புடவை அவள் அழகை மறைக்கும் சாதனமன்றி வேறல்ல. அழகூட்டும் பொருட்களை அவள் உபயோகித்ததில்லை. அதனுல்தான் குளித்தவுடன் பார்த்தால் ஒரு குழந்தை எப்படிக்



கவர்ச்சியாகக் காணப்படுமோ அதைப்போல எப்போது பார்த்தாலும் பசுமையும் புதுமையும் பொலிந்த பெண்ணுயிருந்தாள்.

கண்டவரைத் திரும்பிப் பார்க்கச் செய்யும் கவர்ச்சியல்ல அவளுடையது. அடக்கத்திலும் எளிமையிலும் பலதில் ஒன்ருய் பதுங்குந் தன்மையிலும் ஆடம்பரமின்மையிலும் துலங்கும் சௌந்தரியம். அதை ஒரு ஆடவன் கண்டதும், கவனித்ததும் பெரிய ஆச்சரியமல்ல. இன்னும் பலரின் குறுகுறுப்பான கண்களைத் தன்பால் ஈர்க்கவில்லையே என்பதுதான் ஆச்சரியம். பெண்களைக் கண்டவுடன் 'ஆ'வென்று வாய் பிளக்கும் பிறவியல்ல அவன். இவளும் 'ஓகோ'

# ஓடவில்லை

தேவன்

என்று கண்டவர்களை எல்லாம் பின்னால் தொடரும்படி தூண்டும் காந்தமல்ல. அப்படியிருக்க, எனக்கு நீ, உனக்கு நான் என்று நம்புகிற அளவுக்கு அவர்கள் உறவு வளர்ந்தது. அப்படி முன்னேறும் வரை கண்ணை மூடிக் கொண்டிருந்த உலகம் முற்றிய பிறகு விழித்துக்கொண்டது.

தனி மனிதனின் நடத்தையில் உலகத்துக்கு என்ன அக்கறை? கூட்டுவாழ்வில் நடுவழியே சிதறி விழும் துளிகளைப் பொருட்படுத்தாமல் தன்பாட்டுக்குப் போகலாமே! அதுதான் இல்லை. சமூகம், சமுதாயம், மக்கள் என்று பலவற்றின் சேர்க்கையை ஒன்றாய்க் கருதி, தவறி விழும் தனிமனிதரை அலட்சியம் செய்பவர்கள்கூட இப்படியான ஒரு நிலையில் 'ஆகா! ஊகூ!' என்று குதித்து 'கட்டுப்பாடு போச்சு, மானம் போச்சு. வெளியில் தலைகாட்ட முடியாது' என்றெல்லாம் கூத்தாடத் தொடங்கி விடுகிறார்கள். எங்கேயும் பெற்றவர்களுக்கு வில்லன் பாத்திரந்தான் பொருத்தமாய் அமைகிறது. ராஜத்தின் கதையில் வேறு விதமாயிருந்திருந்தால் அது அதிசயத்தை விளைவிப்பதாயிருக்கும்.

பட்டும் படாமலும் தெரிந்தும் தெரியாமலும் வாழ்வதில் உள்ள சௌகரியங்கள் பல. ரராஜத்துக்கு அத்தகைய ஒரு அனுகூலம் அமைந்திருந்தது-தோற்றத்திலும், பேச்சிலும், வாழ்க்கை நடைமுறையிலும். அதனால் ராஜம் – தருமு காதல் இத்தனை இன்னல்களுக்கு மத்தியிலும் இடையூறு எதுவும் இல்லாதது போல் இனிதே வளர்ந்தது. உறுமிக்கொண்டு வரும் 'ஸ்கூட்டருடைய' நாதம் ராஜத்துக்கு ஒரு தனிப்பட்ட இன்ப அலைகளைப் பாய்ச்சும் தன்மை பெற்றிருந்தது. உலகத்தின் பேரிரைச்சல்களுக்கு நடுவே வெவ்வேறு சுருதிகளில் ஒலிக்கும் சத்த அலைகளின் மத்தியில் நாய்களுக்கு எஜமானனின் வாகனத்துடைய இரைச்சலைப் பல மைல்களுக்கு அப்பால் வரும்போதே கிரகிக்கும் திறமையுண்டாமே, அதைப்போல ராஜத்துக்கும் அத்தகைய ஒரு 'நாய்க்குணம்' (இதில் இழிவு எதுவுமில்லை) வாலாயமாயிற்று.

எல்லா நேரமும் மௌனமாய் யந்திரப்பாவை போல் வீட்டில் இயங்கும் அவள் அந்தச் சத்தம் கேட்டதும் எப்படியோ, எங்கிருந்தோ அவனுக்கு திவ்ய தரிசனம் தந்துவிடுவாள். இவ்வளவோடு நின்றிருந்தால் ஒன்றுமில்லை. எப்படியோ கடிதங்களும் பரிமாறப்பட்டன. ஐந்து, பத்து சதத்து மிட்டாயினால் ஏமாற்றக் கூடிய சிறுவர்கள் தூதானார்களோ, நாயின் கழுத்துப் பட்டியில் 'மெயில் வண்டி' குடிகொண்டதோ, 'காகிதச் சுருளைச் சுமந்து கல் வீச்சுகள் 'ராக்கெட்' பாய்ச்சலில் செய்திகளைப் பரிமாறினவோ- யாருக்கும் தெரியாது. கட்டுக் காவல், கதவுகள், பூட்டுகள் எல்லாமிருந்தும் இருவரும் இடைக்கிடை சந்தித்தும் கொண்டார்கள். அதெப்படிமுடியும் என்றுதான் பெற்றவர்கள் நினைத்தார்கள். நினைத்தால் மட்டும் போதுமா? உண்மை உறுத்தியது.

கெடுபிடி இரட்டிப்பாக்கப்பட்டது. பிறந்து வீட்டிலேயே அத்தியளாய், அசோக வனத்துச் சீதையாய், உண்ணும் உருக்கும் உறங்கும் நிலையற்றது, கண்ணீரை வெளிவிடாது உள்ளே கரைத்து திருவுருவம் கலைத்து தீய்ந்தது. பகலிலும் இரவிலும் உறங்காமலே கனவு காணும், தட்டியெழுப்ப சக்தியற்ற நினைவுகளில் மூழ்கி, சோர்ந்து துவண்டாள். சுற்றிவரக் கிடந்த சஞ்சிகைகள், கதை நூல்கள் காவியங்கள் எல்லாம் தொட்டால் பொசுக்கும் நெருப்பாக அவள் கைக்கெட்டும் தூரத்தில் வேண்டாப் பொருளாக சீத்துவார் யாருமின்றி சீரழிந்தன. ஆணும் பெண்ணும் கூடி நடமாடாமல் கதை உண்டா? காவியம் உண்டா? கன்னி அவளுக்கு அவை மூட்டிய உளைவுத்தீ வெறுப்பை மூட்டியது. சாகலாம் ஆனால் எதற்கு? காத்திருக்கலாம், எவ்வளவு காலம்?

எந்த விளையாட்டிலும் ஒருவர் ஆடியபின் மற்றவர் ஆடவேண்டும் எவரும் ஆடாமல் இடையில் தாங்கமுடியுமா? காயை நகர்த்தும் பொறுப்பைத் தாங்கியவர்கள் நானோ, நீயோ என்று பேசாதிருந்தனர். எத்தனை நாளைக்கு? திகழப் போகும் சூறாவளிக்குமுன் ஒரு பேரமைதி நீடிக்குமா? அவசரம், குறுகுறுப்பு, ஏதாவது நடந்தாக வேண்டும் என்ற பரபரப்பு – எல்லார் தலையிலும் ஒரு இடியாவது விழக்கூடாதா?

தருமுவால் தாங்கமுடியவில்லை. பொறுமை மிக்கவனானாலும் ஆணல்லவா? வா என்றெழுதிவிட்டான். பூட்டுகள், கணகள், தடைகள் எல்லாவற்றையும் தாண்டி ராஜத்தின் கையில் தவழ்ந்தது கடிதம். ஏக்கம், தவிப்பு, முடிவு நாளும் நட்சத்திரமும் நிச்சயித்து, தோற்க முடியாத திட்டமும் தீட்டி, எல்லோர் கண்ணிலும் மண்ணைத்தூவி, இன்ப உலகை எங்கோ காட்டி 'வா' என்றான். தைரியம் வந்ததே, முட்டுக் கட்டையைத் தகர்க்க ராஜம் யோசித்தாள். நின்று நிதானித்

## அமெரிக்காவில் மேடைக் கலை

அமெரிக்காவில் மேடைக் கலைகள் எல்லாத் துறையிலும் மேன்பாடு அடைந்து வருகின்றது. கிளீவ்லண்ட் நகரில் 'கரமு' அரங்கு — 'கிளீவ்லண்ட்' நாடக அரங்கு ஆகிய இரு இடங்களில் பள்ளிக் குழந்தைகளுக்கென நாடக வகுப்புகள் வைத்து நடத்துகின்றனர். இவ்வகுப்பு தினமும் காலையிலும் மாலையிலும் நடைபெறும். குழந்தைகள் சிறு வயதிலேயே நாடகக் கலையின் அருமைப்பாடை உணர்ந்து, அத்துறையில் நாட்டங் கொண்டு கலை வளர்ச்சியில் ஈடுபட அமெரிக்காவில் பல்லாற்றுனும் வாய்ப்புக்கள் உண்டு.

தாள். பின்...பின்? தந்தையை, தாயை, தம்பியை, தங்கையை — எல்லோரும் யமனுக, அசோக வனத்து அரக்கிகளாக — அவர்களைப் பற்றியென்ன? உமி பிரித்த அரிசி, இனி நெல்லாகுமா? எனக்கென்று ஒரு தலைவிதி, வருங்காலம் — அது என் கையில்தானே இருக்க வேண்டும்; கடலில் சங்கமமான கருத்தாற்றுப் பாதைகள். ஒரே முடிவை நாடி ஓடிய எண்ண வாய்க்கால்கள்.

போகலாம், போவது பெரிதல்ல. கை நீட்டி அழைக்கிருன் காதலன். கலங்காமல் நிலையாக ஒரே பாடம் ஒப்புவித்தவனைச் சந்தேகிக்கக் காரணமில்லை. கைவிடமாட்டான். ஆனுல் கதியென்ன? 'ஸ்கூட்டர்' சோறு போடுமா? 'பெற்ருேல்' அல்லவா கேட்கும். கையில், கழுத்தில் நகைகள் காணுமா ஒரு மூலைக்கு? படித்தவன்தான். தொழிலின்றி பட்டினிதான். ஆனுல் கூட்டாகச் செத்தாலும் அதுவும் இன்பந்தானே. 'சரி'யென்ருள். 'பெட்டியை அடுக்கலாமா? சீ; விணுகக் குட்டை வெளிப்படுத்தியவளாவேன்.' சாதாரணமாக ஒன்றும் நடவாததுபோல வாழ்வது பெரிய சங்கடமாக இருந்தது. வாழ்க்கையில் நடிப்பது சாத்தியமல்ல. நாள் நெருங்கியது.

நள்ளிரவு எல்லோரும் துயிலில் மூழ்கி துன்பங்களை மறந்த வேளை. 'ஸ்கூட்டரி'ன் இன்ப நாதம், வந்துவிட்டான் நாதன்; வழியும் வசதியும் வாய்ப்பாக அமைந்தன. உடுத்த சேலை, பெட்டி படுக்கையில்லை. நலுங்காமல் நடந்து நாயகனைப் போகும் தருமுவை அணுகினுள். அள்ளி அப்படியே 'ஸ்கூட்டரி'ல் தூக்கி வைத்துக்கொண்டு ஓட வேண்டியதுதான். கதை முடிந்துவிடும். கஷ்டங்களுக்கு முற்றுப்புள்ளி. கனவுகள் இனி நினைவுகள். காற்ருய், பஞ்சாய், சருகாய் பக்கத்தே நின்ற மெல்லியலாளைப் பார்த்தான். அவனுக்கு வியர்த்துக் கொட்டியது. நெஞ்சு படபடத்தது. அசந்தனுகிவிட்டான்.

அவள் விக்கினுள். கண்களிலிருந்து ஒரு துளி சூடாக அவன் கரத்தில் விழுந்தது. அவள் பேசவில்லை. அவனுல் பேச முடியவில்லை. வாயைப் பொத்திக்கொண்டு திரும்பி உள்ளே ஓடிவிட்டாள். திகைத்து நின்ருன் தருமு. வருவாள், ஏதாவது எடுக்கப் போயிருப்பாள் என்று காத்திருந்தான். எவ்வளவு நேரம் காத்திருப்பது? 'ஸ்கூட்டர்' புறப்பட்டது.

அந்த இரைச்சலில் புரண்டு படுத்தார் ராஜத்தின் தந்தை. மறுநாள் மகளின் நடத்தையில் மாற்றம் தெரிந்தது போலிருந்தது. உணர்ச்சியை வெளிப்படையாகக் காட்டாதவளிடம் எதைக் காண்பது? கண்டிப்பாயிருந்தால் வழிக்கு வருவாள் என்று எண்ணினர் பெற்ருேர். கண்காணிப்பது வேலி போடுவதையொக்கும் என நினைத்தனர். முன்னைப் போலவே மூலையில் முடங்கிக் கிடந்தாள், ராஜம். யாருக்குத் தெரியும், அவள் மனதை — பெண் மனதை?

# நன்றி!

எம் 'கலைவாணி' திங்களிதழுக்குக் கவிதை - கட்டுரை - சிறுகதை யாவும் தந்து உதவிய அறிஞர் பெருமக்களுக்கு மனப் பூர்வமான நன்றியையும் அன்பையுந் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மேலும் பல நண்பர்கள் தம் ஆற்றலைக் 'கலைவாணி' வாயிலாகப் படைத்து—தமிழ் உலகுக்குத் தொண்டு செய்ய முன்வர வேண்டுமெனப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

— ஆசிரியர்

---

# THANKS!

We sincerely thank the Educationa - lists friends who gave us Poems, Articles and Short-Stories for 'Kalaivani.'

It is our greatest ambition that more of our Writer - friends come forward and take a chance to prove thier ability through 'Kalaivani.'

— Editor

# பண்டைய யாழ்ப்பாண அரசின் சின்னங்களும் நந்தியும்

ம. பொ. செல்வரத்தினம்

நந்தி சிவசின்னமாகக் கருதப்பட்டு தென்னிந்திய ஆலயங்களில் சிவலிங்கத்துக்கு முன்பாகத் தாபிக்கப்பட்டது. பல்லவ சிற்பக்கலைக்கு உதாரணமாக விளங்கும் மாமல்லபுரத்து இரதங்களில் ஒன்று நந்திக்கென அமைந்தது. காஞ்சிபுரத்துக் கைலாசநாதர் ஆலயத்து நந்தி மிகவும் சிறப்பு வாய்ந்தது. தஞ்சை ஆலயத்துப் பிரமாண்டமான நந்தி உலகப் பிரசித்தி பெற்றது. சிவலிங்கத்துக்கு முன்பாக வீற்றிருக்கும் இடபம் இளங் காளையாய் உயர்ந்த ஏரியுடன் சிறு கொம்புகளோடும் காட்சியளிக்கும். இடபத்தில் தலை சிவலிங்கத்தை நோக்கியும் அதன் முன்னங் கால்களைத் தவிர்ந்த ஏனைய கால்கள் உடலின் கீழே மடிந்திருக்கும். அதன் கழுத்தில் பட்டியுடன் கூடிய மணிகள் அலங்காரமாக விளங்கும். சிவலிங்கத்துக்கு முன்பாக எழுந்தருளியிருக்கும் நந்தி சிருட்டி தத்துவத்தை உணர்த்தும். தர்மதேவதையாகக் கொள்ளப்படும் இடபமும் நந்தியேதான். நந்தி சிவனுடைய வாகனமாகிப் பசுவைக் குறிக்கும். பசு ஆன்மாவேதான். ஆன்மாவின் பதி பரமபதியே. நந்தி சிவனுடைய பிரதம சீடராய் சைவ சித்தாந்தத்திற் தீட்சை பெற்றனர்.

இவ்வுபதேசத்தைப் பரம்பரை பரம்பரையாக முனிவர்கள் அறிந்தனர். இப்பரம்பரையில் சிவஞான போதத்தைத் தந்தருளிய மெய்கண்டதேவர் முதல்வராகும். அதனால் சைவர்களுக்கு இடபமும் பசுவும் மிகவும் முக்கியமானவை. இவற்றை வதைக்கச் சைவம் அனுமதித்ததில்லை. இவை சைவர்களால் பெரிதும் போற்றப்பட்டமையின் பண்டைய அரச சின்னங்களில் பொறிக்கப்பட்டன. நல்லூரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் நந்தியையும் பிற சின்னங்களாகிய சந்திரர், சூரியர், திருசூலம் முதலியவற்றையும் அவர்களுடைய கொடிகள், அச்சுகள், நாணயங்கள் முதலியவற்றில் பொறித்திருந்ததைத் தொல்பொருளாராய்ச்சியிலிருந்து அறியக் கூடியதாயிருக்கின்றது. சிங்கையாரியச் சக்கரவர்த்திகள் பரராசசேகரன், செகராசசேகரனென்ற பட்டப் பெயர்களைத் தாங்கி ஆண்டனர். செகராசசேகரன் ஆதரவில் பாடப்பட்ட சாஸ்திர நூலாகிய செகராசசேகரமாலை, இவர்கள் புகழை விரித்துரைக்கின்றது. இவ்வரசைப் பற்றிக் கூறுகையில்

''விடைக் கொடியும் சேதுவு நீள் கண்டிகள் ஒன்பதும் பொறித்து மிகைத்த கோவும்''

என்று புகழ்பாடும். இன்னும் இவ் வரசர்களது முடிசூட்டு வைப வத்தை எடுத்துரைக்கையில்,

''ஆசறு சுருதி ஆரிய வேந் தென் றணி மணிப் பட்டமும் கொடுத்து - தேசறு குடையும் ஒன் றையும் வெற்றி திகழ் விடைத் துவசமும் நல்க''

என்று தொடர்கிறது. இவன் காலத்து நூல்கள் அரச சின்னம் பற்றிய குறிப்புகள் தருகின்றன. இக்குறிப்புகளால் சிங்கை ஆரியச் சக்கரவர்த்திகளின் கொடி, விடைக் கொடி என்பது புலனாகிறது. இன் னுமவர்கள் இராமேசுரத்தில் கொண்ட பக்தியையும் கண்கா ணிப்பையுங்காட்ட ''சேது'' என்ற விளக்க வாசகத்தையும் அவர்கள் சின்னங்களிலும் பொறித்தனர். சிங்கை ஆரியச் சக்கரவர்த்திகளின் வெற்றிக்கு அறிகுறியாக விளங்கும் கேகாலைப்பகுதி கோட்டகாமத்து கல்வெட்டிலும் ''சேது''என்ற வாச கம் பொலிந்து விளங்குவதைக் காணலாம்.

சேது

''கங்கணம் வேற்கண் விணையாற்
காட்டினர் காமர்வளைப்
பங்கயக்கை மேற் திலதம்
பாரித்தார்—பொங்கொலிநீர்ச்
சிங்கை நகராரியனைச்
சேரா அநுரேசர்
தங்கள் மட
மாதர் தாம்''

தென்னிந்திய கல்வெட்டுகள் 'சுவஸ்தி,' 'ஸ்ரீ' என்ற விளக்க வாச கங்களோடு தொடங்குகின்றன. சைவர்கள் எக்கருமத்தையும் தொடங்குமுன் தமது வழிபடு தலத்தை அல்லது தெய்வத்தை நினைந்து உதாரணமாகத் திருச் சிற்றம்பலம், கணபதிதுணை என் றுற்போல ஆரியச்சக்கரவர்த்தி களும் தமது வழிபடு தலமாகிய சேது ராமேச்சுரத்தை நினைத்து அவ்வாசகத்தைத் தமது சாசனங் களிலும், கல்வெட்டுக்களிலும் பொறித்தனர். இவ்வாசகமே இவ் வரசர்களின் நாணயங்களிலும் பொலிந்து விளங்கின. யாழ்ப்பா ணத்து மறைந்தொழிந்த நாண யங்களென்ற விரிவுரையில் இந் நாணயங்களைப்பற்றிச் சரித்திர ஆராய்ச்சியாளராகிய அதி. வண. பிதா. ஞானப்பிரகாசரவர்கள் கூறிப்போந்தனர். யாழ்ப்பாணத் தரசர்களும் பொலநறுவை அரசர் களும் சோழர் நாணயங்களைப் பின் பற்றினரென்றும், பொலநறுவை நாணயங்கள் இராச ராச அரசரின் நாணயங்களின் பிரதி வடிவங்கள் போன்று அமைந்தபோதும் யாழ்ப் பாணத்து நாணயங்களின் பின்பு றம் மாத்திரம் சோழ நாணயங்கள் போன்றமைந்தன என்று முதலி யார் இராசநாயகமவர்கள் எழுதி னர். இந்நாணயங்களின் பின்பக் கம் கலிங்கத்துக் கங்க அரசர்களின் நாணயங்களை ஒத்து யாழ்ப்பா ணத்து அரசர்களின் முடியையும் அரச சின்னங்களையும் கொண்டு பொலிந்தன. இந்நாணயங்கள் கலிங்கத்துக் கங்க அரசர்களின் நாணயங்கள் போன்றன என்று தொடர்ந்து கூறினர். இந்திய பண்டைப்பொருள் ஆராய்ச்சி என் னும் சஞ்சிகையில் தென்னிந்திய நாணயங்கள்பற்றிக் கூறுகையில் டாக்டர் ஈ. கல்ற்ஸ் (Dr. E. Hultzsch) என்பார் இடது

# "கலைவாணி"

தமிழ்த் திங்கள் வெளியீடு

கட்டுரை - கவிதை - சிறுகதை

**யாவும் இடம்பெறும் ஓர் அரிய திங்களிதழான எம் 'கலைவாணி'யைப் படித்து விட்டீர்களா? படிக்காவிட்டால் இன்றே-இதோ-படியுங்கள்!**

**தனிப்பிரதி: 60 காசு வருடச் சந்தா: 7-50**
**(தபாற்செலவு உட்பட)**

தனிப்பிரதிகளை ஆங்காங்கு முக்கிய விற்பனை நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம். ஆண்டொன்றுக்கு சந்தா மூலம் மொத்தப் பணங் கட்டிக் கலைவாணியைப் பெற விரும்புவோர் கீழ்க்காணும் எம் விற்பனை நிலையங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**தலைமை விற்பனை நிலையம்:**

கலைவாணி புத்தக நிலையம்
10, பிரதான வீதி. யாழ்ப்பாணம்.

**கிளை:**

கலைவாணி புத்தக நிலையம்
130, திருகோணமலைவீதி, கண்டி.

கலைவாணி புத்தக நிலையம்
23, மெயின்வீதி, மட்டக்களப்பு.

பக்கமாக வீற்றிருக்கும் நந்தியையும், சூரியன், பிறை, இலிங்கம் ஆகியவற்றை ஒரு புறத்திலும், கிழக்கு கங்க அரசன் ஆனந்தவர்மனின் அரசாட்சிக்காலத்தை மறுபுறத்திலும் கொண்ட நாணயங்களைப்பற்றிக் கூறினர். இந்திய பண்டைப் பொருளாராய்ச்சி என்னும் சஞ்சிகையில் சந்தேகிக்கக்கூடிய இந்நாணயங்களின் காலத்துக்கு முற்பட்டதென்றும், அக்காலத்தில் நந்தியைச் சின்னமாக யாழ்ப்பாணத்து அரசர்கள் கொள்ளவில்லை என்றும் முதலியார் இராசநாயகமவர்கள் கூறினர். அப்படியாயின் யாழ்ப்பாணத்தரசர்கள் யாழ் கொடியைக் கொண்டிருந்தனரா என்ற கேள்வி எழலாம்.



**பொல்லநறுவை -- (சோழர் காலம்) சிவாலயத்து நந்தி**

தென்னிந்திய நாணயங்கள் பற்றி ரேபட் சீவல் (**Robert Sewell**) அவர்கள் விளக்கினர். இந்நாணயங்கள் யாழ்ப்பாணத்து நாணயங்களேதான். இவற்றில் "சேது" என்ற விளக்க வாசகம் இருபகுதியாக "சே" மேலும் "து" கீழுமாகக் காணப்படுகின்றது, நந்தியில்லை. இந்நாணயங்கள் வீற்றிருக்கும் நந்தியைச் சித்திரிக்கும் கலிங்கத்துப் பரணியில்

"கேழன் மேழி கலையாழி வீணைசிலை
கெண்டை யென்றினைய பல்கொடி
தாழ மேருவி லுயர்த்த செம்பியர்
தனிப் புலிக் கொடி தழைக்கவே.

சோழ அரசர்கள் வெற்றி கொண்ட கொடிகளில் வீணைக் கொடியும் வருகின்றது. அப்படியாயின் இது யாழ்ப்பாண அரசர்

களின் கொடியாகும். யாழ்ப்பாணத் தரசர்கள் வீணைக் கொடியைக் கொண்டிருந்தால் இது கி. பி. 12-ம் நூற்றுண்டிற்கு முன்பாக இருத்தல் வேண்டும். கி. பி. 12–ம் நூற்றுண்டிற்குப் பிற்பட்ட இலக்கியங்கள் நந்திக்கொடியையே கூறுகின்றன. வீற்றிருக்கும் நந்தியையும் சூரிய சந்திரர்களையும் அவர்களுடைய போர்க் கொடிகளிலும் நாணயங்களிலும் பொறித்தனர். அக்காலத்து இலக்கியங்களும் தொடர்ந்த காலத்து நூல்களும் நந்திக் கொடியைப்பற்றிய குறிப்புகள் தருகின்றன.

“விடலாண் வயமா விளங்கிய கொடியோன்” என்கிறது தட்சண கயிலாய புராணத்துச் சிறப்பாயிரம்.



**பண்டைய யாழ்ப்பாண அரசுக்குச் சொந்தமெனக் கருதப் படும் பளிங்கு அச்சு** (14–ந் நூற்றுண்டு)

“அண்டருலக நிமிர்ந்தாரும் பரிசுடைத்தாய்க் கொண்ட விடை காட்டுங் கொடியினன்” என்று புகழ் பாடுகிறது கைலாய மாலை.

“வெற்றி விடைக் கொடியார் மேலாரிய குலத்தினுற்ற மடப் பள்ளியிலுள்ளோரும்” என்று வர்ணிக்கிறது கிள்ளை விடு தூது.

இந்தியாவிலும் பல அரச மரபுகள் நந்தியைக் கொடிகளிலும் நாணயங்களிலும் பொறித்திருந்தனர். பல்லவர்கள் நிற்கும் பாவனையுடைய மிகப் பெரிய ஏரியைக் கொண்ட எருதையும், வீற்றிருக்கும் பாவனையிலுள்ள எருதையும், சூரியன், பிறை நட்சத்திரம் முத

லியவற்றைத் தமது முடியிற் பொறித்திருந்தனர். இன்னும் வேறு அரச மரபுகளும் இதே சின்னங்களைப் பொறித்திருந்தன. இந்நிலையில் யாழ்ப்பாண அரச மரபு இம்மரபுகளோடு தொடர்பு பட்டதா என்று எண்ணவேண்டியிருக்கின்றது. இக்கேள்விக்குப் பதில் வம்சத்தை ஆராய்தலிலே தான் அறியலாம். அந்நிய நாட்டினராகிய போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆதியோரின் படைத்தாக்

## சேது நாணயங்கள்




ஒரு புறம் — நந்தி, ‘சேது’ என்ற வாசகம்
மறு புறம் — மானிட உருவம் - அரசர், வாள், உடைவாள்

குதலினால் பண்டைய சின்னங்கள் தகர்க்கப்பட்டு அழிந்தொழிந்தன. எளிதில் அழிந்தொழியக்கூடிய சீலையாலான விருதுகள், போர்க்கொடிகள், முதலியவற்றில் எதுவும் இன்னும் அகப்படவில்லை. பண்டைய யாழ்ப்பாண அரசைச் சேர்ந்த முடிகளும், சாசனங்களும் காணப்படவில்லை. இதுவரை கிடைக்கப்பட்ட நாணயங்கள், அச்சு ஆகியவற்றிலிருந்தும், இலக்கியங்கள் முதலியன தரும் குறிப்புகளிலிருந்தும்

With Due Acknowledgements to Departments of Archaeology & Museums.

சில பண்டைய அரச சின்னங்கள் நிர்மாணிக்கப்பட வேண்டியிருக்கின்றது. யாழ்ப்பாண அரசுக்குச் சொந்தமென்று கருதப்பட்ட பளிங்காலான அச்சு ஒன்று காணப்பட்டது. இவ்வச்சு கொழும்பு அரும்பொருட்சாலையில் நாணயப் பகுதியில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றது. இவ்வச்சு அரச பத்திரங்களில் அரச முத்திரையைப் பொறிக்கப் பாவிக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்று கருதப்படுகின்றது. பண்டைய யாழ்ப்பாண நாணயங்கள் அழிந்தொழிந்த நகரங்களான நல்லூர், கோப்பாய், கந்தரோடை, நயினாதீவு, வல்லிபுரம், திருக்கேதீசுவரம், வன்னிநாடு இன்னும் வேறு இடங்களிலும் கண்டெடுக்கப்பட்

டிருக்கின்றது. பெரும்பாலும் இந் நாணயங்கள் செப்பிலமைந்து மானுட உருவம், குத்துவிளக்கு, திருசூலம் முதலியவற்றை ஒரு புறத்திலும், வீற்றிருக்கும் நந்தி, பிறை, "சேது" என்ற வாசகத்தை மறுபுறத்திலும் கொண்டிருக்கின்றன. இந்நாணயங்கள் சேகரிக்கப்பட்டு இலங்கை அரும்பொருட் காட்சிச்சாலைகளில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

இப் புராதன சின்னங்கள் விரைவில் அழியக்கூடியவை. பண்டைய சமயம், புராணக்கதைகள், கலை அபிவிருத்தி, பொருளாதாரம் முதலியவற்றைத் தெரிவித்தலோடு சமூகயியல்பையும் நன்கு புலப்படுத்துகின்றது. அதனாலன்றோ பண்டைப் பொருள்கள் பாதுகாக்கப்பட்டு ஆராய்ச்சிக்கு உட்படுகின்றன. இவ்வாராய்ச்சிப் பண்பாட்டுக் கல்வியை விருத்தியடையச் செய்வதோடு தேசாபிமானத்தையும் உண்டுபடுத்துகின்றது. ஆதலின் பண்டைய சின்னங்களைப் போற்றவும் அதனைப் பற்றி அறிதலும் வேண்டுமன்றோ!

---


# தேவை

'கலைவாணி' மொத்த விற்பனை உரிமையாளர் (ஏஜண்ட்ஸ்) தேவை.

## தொடர்புகொள்ள விரும்புவோர் கீழ்க்காணும் எம் விற்பனை நிலையங்களுடன் தொடர்பு கொள்ளவும்

# கலைவாணி புத்தக நிலையம்

10, பிரதான வீதி, : : யாழ்ப்பாணம்.

130, திருகோணமலை வீதி, : : கண்டி.

24, மெயின் வீதி, : : மட்டக்களப்பு

# கலைவாணி வாழ்க!

வே. ஐயாத்துரை

யாழ்கர மேந்தி வாணி எழுந்தருள் ஏடு தாங்கி
ஆழ்கடல் சூழ்ந்து பூமிக்(கு) அறிவொளி அளிக்கு மம்மா
வாழ்வினை வகுக்க நல்லோர் வண்டமிழ் ஏடு ஓங்கத்
தாழினைப் பணிந்தோம் தாயே தயை புரிந் தருளுவாயே!

மெய்யறி வுடையோ ராகி விளங்கிட வாழ்வில் என்றும்
உய்வழி ஞான மூட்ட உவந்ததோ ரேடா யோங்கி
வையக மீது யாவும் வனப்புடன் வளர்க நன்றே
கையகம் யாழே துலங்கும் கலைமகள் கருணை செய்வாய்!

கட்டுரை கதைகள் பொங்கக் கவிதைகள் கனிந்து தொங்கத்
திட்டமாய் அமைந்து ஏட்டில் திகழ்ந்திடு மோவி யங்கள்
மட்டிலா மகிழ்ச்சி யூட்ட மங்கள மலராய் ஓங்கி
எட்டுயர் திக்கு எல்லாம் எழிலுடன் இலங்கச் செய்வாய்!

உன்திரு நாமம் பூண்டு ஒலித்திடும் செம்மை ஏடு
பொன்தமிழ்ப் புலமை கொண்டு பொலிவுறப் போற்று கின்றோம்
வெண்திரு மலரில் வீற்று வீணையைக் கரங்கள் ஏந்திப்
பண்ணிசை மீட்கும் திவ்ய பாரதி அருள்செய் வாயே!

வாசனை வீசு கின்ற மலர்களில் இதழி னூடே
தேசுறு மினிமை சொட்டச் சிந்திடும் தேனைப் போல
வாசனை இதழ்கள் விரிந்தே வண்டமிழ் இனிமை கூடி
நேசமாய் (கலை)வாணி ஏடு நீடூழி வாழ்க! வாழ்க!!

*A Birthday Tribute*



# ANANDA COOMARASWAMY

## TRADITIONALIST

## A BRIEF NOTE

*by*

A CORRESPONDENT

IT is ironic that we should be paying annual homage to a man who strongly deprecated the modern cult of personality, with all its exhibitionism and its stress on the private lives and loves

of "stars". "Not **who** said it but **what** is said": this was almost Coomaraswamy's motto. If one recalls Thiruvalluvar's

"எப்பொருள் யார்யார்வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

one can see how deeply embedded in tradition, this attitude is. Such an attitude came naturally to one who firmly believed, with tradition, that to liberate one-self from the fetters of personality was the highest ideal. Coomaraswamy's fabulous erudition, his wide-ranging scholarship, his knowledge of languages and cultures, his researches in art, the aphoristic clarity of his style which was an instrument of precision - all these aspects of this 'myriad-minded intellect' have received attention - and at more competent hands - before.

The magpie aesthetes and the antiquarians who have claimed Coomaraswamy for their own, have only helped to obscure the real significance of his work. In this brief note, I wish to emphasise the Coomaraswamy who had such deep insight into traditional doctrines and the principles which governed traditional societies. Not only "did he interpret the East to the west, but also the West, to itself".

Coomaraswamy did not propound any novel theories of his own. In fact, he had no sympathy for the 'eccentric and individualist' philosophies of today ("thinking for oneself" implied, he said "thinking of oneself"); preferring instead to place himself in the tradition of the great and magnanimous philosophers of old, whose ideas were **his**, in so far as he had made them his own. In a world where, as he himself observed, philosophy had degenerated into a study of the history of ideas rather than a pursuit of the truth, and which feverishly pursues the latest -'isms', this is a salutary emphasis. This lack of any novel theory partially explains why Coomaraswamy is not much in favour in the West today.

With penetrating insight, he diagnosed the malaise that

afflicts the modern West: its departure from the sane and healthy principles that governed traditional societies. "When nations grow old the arts grow cold And commerce settles on every tree" wrote William Blake, lines which Coomaraswamy often quoted. The Renaissance destroyed the traditional order in Europe. The West began to hanker after the dead-sea fruits of economic and material prosperity. Not content with this, its empire-builders began to extend their commercial and proselytizing activities to the East, tragically destroying in the process, a traditional culture which served both the spiritual and material needs of man. Coomaraswamy suggests that the remedy is for the West to seek to restore the concept of vocation, and quotes Plato on the advantages of a vocational order: "it is in this way that more work is done and better done." Historians like Christopher Dawson too have stressed the need for the restoration of the concept of vocation.

Coomaraswamy did not draw a crude contrast between East and West : rather, it was a distinction between the still-surviving traditional East and post-Renaissance Europe. As he himself points out, it was really a contrast of times not places, and one that only accidentally presented itself in terms of geography. He emphasises over and over again the essential unity of the principles ( the Philosophia Perrenis) governing traditional cultures, however far-removed in space. He uses his profound erudition to show how there is a traditional symbolism, both visual and verbal, pervading the various cultures. To him, the various traditional cultures were dialects of one and the same language of the spirit.

Coomaraswamy's stress on the traditional or normal (in the etymological sense ) order should not be taken to mean that he envisaged resurrecting knights in shining armour. His was a flexible attitude. In fact, he explicitly states that neither the social order nor the outward forms of mediaeval times can be revived. What he did advocate was a return to first-principels,

the application of unchanging principles to contingent circumstances. To Coomaraswamy there was no such thing as a 'dead past'. While circumstances had changed, the fundamental principles remained the same. To a critic who accused him of wanting to put the clock back, he retorted that the intention of his reactionaries (again the etymological sense) was to put the hands of the clock forward to another noon day. The modern West had brought itself to the edge of a precipice. The crucial question Coomaraswamy poses is whether it were a sign of backwardness or of sanity if the West, re-collecting those immemorial principles which had made for health in the past, pulls itself back from the edge of the abyss.

The notion of progress, of a continuous upward curve of evolution, is one of our most cherished illusions. Coomaraswamy, who set out to deflate this smug illusion, was fond of quoting a Museum Director's remark: "From the Stone Age onwards what a decline there has been!" A decline in intellectuality, not in comfort. Neolithic Man, says Coomaraswamy, was a whole man (not merely Economic Man), and the whole man is naturally a metaphysical man. All his products were intended to serve both bodily and spiritual needs. In fact, primitive man did not recognise the disastrous modern distinction of spirit from matter, of the profane from the spiritual. Primitive man's home could not boast of modern comforts like central heating and plumbing, but his house was built on a cosmic analogy.

> **"There is ne religion higher than Truth and Righteousness. In matters of Conscience, the law of majority has no place. It is better in prayer to have a heart without words than words without a heart."**
>
> **— M. K. Gandhi**

Coomaraswamy abhorred the modern conception of art as an aesthetic activity, and denounced current appreciation of primitive art – an apprecia-

tion that ignored the content that was sought to be expressed – as a kind of hocus-pocus. His was the traditional or forgotten view that art was the making well of whatever needed to be made. And 'beauty' was the attractive power of perfection. In this traditional doctrine of art, there was no distinction between the Useful Arts and the Fine Arts, no divorce of use from beauty. This modern divorce of use from beauty has only led to "the art-less manufacture of products in factories and the manufacture of 'art' in studies. "Art which was a way of life has now become a super-stition. The course of art reflects the course of thought, Coomaraswamy observed. The thesis of traditional art was a divinity: most of these works of art 'are about God whom nowadays we don't mention in polite society." In traditional societies, art-like everything else-was a means to an end, not an end in itself as with our modern aesthetes. Modern art is either realistic (because it cannot think of 'anything nobler than bodies') or the vehicle of a private and eccentric (usually sexual) symbolism. That is why Coomaraswamy was out of sympathy with much of modern art and literature.

Coomaraswamy's ideas (or rather, I should say, the traditional ideas), which he presented so challengingly and forcefully, are completely at variance with modern prejudices and opinions. The real significance of his work is that he puts us in mind of, recalls us to, the principles that animated and enorgised traditional societies. The East especially needs to take the doctrines he so tirelessly elaborated, to heart. We who are in the process of remoulding our destinies, are in danger of forgetting our true selves and throwing overboard our precious spiritual legacy for the secular humanism of a Nehru, a Nehru who once pathetically confessed "I am a queer mixture of East and West, neither here nor there, at home nowhere." We seem bent on treading the same disastrous path post-Renaissance Europe trod. To get back to first-principles, to apply them to our contingent circumstances that is the greatest tribute we can pay Coomaraswamy – Ceylon's finest genius of modern times.

---

'கலைவாணி' தமிழ்ப் பண்பாட்டுத் திங்களிதழைக்
கலைவாணி அச்சகத்தில் அச்சிட்டுவெளியிடுபவர்: கு. வி. தம்பித்துரை ஜே. பி.
முகவரி: 10, பிரதான வீதி, யாழ்ப்பாணம், இலங்கை.
ஆசிரியர்: பி, ஆனந்தராயர் (வேல்மாறன்)

# சுன்னாகம்: வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பக வெளியீடுகள்

**1965ஆம் ஆண்டுப் பாட புத்தகங்கள்**

**வித்தியாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டவை**

---

**வாசிப்புப் புத்தகங்கள்:**

## பாலபோதினி

*அரிவரிப் புத்தகம்—வண்ணப் பதிப்பு
1ஆம் வகுப்புத் தொடக்கம்,
7ஆம் வகுப்பு வரை

**சமயம்:**

## சைவசமயபோதினி

2ஆம் வகுப்புத் தொடக்கம்,
6ஆம் வகுப்பு வரை

சைவசமய பாடத் தொகுப்பு J. S. C.

**இலக்கியம்:**

## இலக்கிய மஞ்சரி

3ஆம் வகுப்புத் தொடக்கம்,
7ஆம் வகுப்பு வரை

தமிழ் மஞ்சரி:
1ஆம், 2ஆம், 3ஆம் புத்தகங்கள்

இலக்கியச் சுடர்

இலக்கிய விருந்து

**A Guide to Translation**
Parts I & II

**பாஷை:**

## மொழிப் பயிற்சி

*2ஆம் வகுப்புத் தொடக்கம்
4ஆம் வகுப்பு வரை
5ஆம் வகுப்புத் தொடக்கம்
உயர்தர வகுப்பு வரை

தமிழ்மொழிப் பயிற்சியுந் தேர்ச்சியும்

பயிற்சிமூலம் பாஷைத் தேர்ச்சி

கட்டுரை மஞ்சரி

**கணிதம்:**

## சிறுவர் கணக்கு

2ஆம் வகுப்புத் தொடக்கம்
5ஆம் வகுப்பு வரை

**எண்கணிதம்**

**அக்ஷர கணிதம்:**
1ஆம், 2ஆம் பாகம்

**கேத்திர கணிதம்:**
1ஆம் 2ஆம், பாகம்

**கணக்குப் பதிவுநூல்**

**உயர்தர கணக்குப் பதிவு நூல்**

**இக்கால வாணிப முறை**

**உபபாடப் புத்தகங்கள்:**

பரதன், இராசா தேசிங்கு, தமயந்தி, இராமாயணச் சுருக்கம், சந்திரமதி, மணிமேகலை, குசேலர், சாவித்திரிகுகன், சகுந்தலைசரிதை திருமாவளவன்.

**அரசாங்கம்:**

ஆட்சி இயல் (Government)

**சுகாதாரம்:**

## சுகாதார போதினி

6ஆம், 7-ஆம், 8ஆம்,
G. C. E. வகுப்பு வரை

**விஞ்ஞானம்:**

## விஞ்ஞான போதினி

7ஆம், 8ஆம் வகுப்புக்களுக்குரியது
(திருத்திய பதிப்பு)

பொதுவிஞ்ஞான போதினி
6ஆம், 7ஆம், 8ஆம் வகுப்புக்களுக் குரியன

**CHEMISTRY MADE EASY**

---

தேவையான பிரதிகள் கைவசம் உண்டு—இலங்கையில் எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

*விற்பனை உரிமையாளர்கள்:*

# KALAIVANI BOOK CENTRE

## 23, MAIN STREET,

## BATTICALOA.

★

In order to meeting the convenience of and to satisfying the requests of the general public of Batticaloa

*We have the greatest pleasure in announcing that we have opened a Branch at*

## 23, Main Street BATTICALOA.

**( In the site formerly known as Kalanithi Book Depot )**

*Dealing in all kinds of goods at Wholesale and Retail:*

---

*SCHOOL BOOKS*
*STATIONERIES*
*LIBRARY BOOKS*
*PERIODICALS*

*GROCERIES*
*PATIENT MEDICINES*
*NATIVE DRUGS*
*TOYS & FANCY GOODS*

*TINNED FOODS*
*GIFT GOODS*

**These goods may be obtained at a fair and reasonable price**

**Wholesale**

**or**

**Retail**